Registered as a News Paper
பக்கம் - 20

# ஈழநாதம்

விலை: 15.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 15 | வெள்ளி - 01 | 27 - 04 - மார்ச் - 2004

## அதிவேக உந்துருளி சிறப்பு அணியின் பயிற்சி நிறைவில்...



## தமிழீழ தேசிய பெருவிளையாட்டு விழா 2004






## தமிழரின் பலம் வெளிப்படும் நாள்

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 27 . 02 . 2004
மின் அஞ்சல : www.weekly@Eezhanatham.com

## மாலைகளே சாமிகளாகின்றன

சிகல உறுமய பௌத்த மகாசங்கத்தினரை வளைத்துப் போட்டு, ஹெல உறுமய என்ற நாமத்தோடு தேர்தல் களத்தில் குதித்திருக்கின்றது.

இலங்கையில், இனவாதத்தை வளர்த்தெடுப்பதற்கு, காரண கர்த்தாவாக இருந்தவர்கள் மகா சங்கத்தினர்தான். இனவாத அரசியலில், அரசியல் தலைவர்களின் வாக்குவேட்டைக்கான ஆயுதமும் மகா சங்கத்தினர்தான்.

சர்வஜன வாக்குரிமை 1931 ஆம் ஆண்டு டொனமூர் சீர்திருத்தத்தில் கொண்டுவரப்பட்டதில் இருந்து பெரும்பான்மையின மக்களின் அரசியல் ஸ்தானம் அதிகார அரசியலில் முதன்மைபெற்றது. இரு தேசியம் என்ற நிலைப்பாடு உடைத்தெறியப்பட்ட அந்த நாள் முதல் பெரும்பான்மை மக்களின் மனங்களைக் கவரும் கோசம் மட்டுமே அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றப் போதுமான இலகுவழியாக இருந்தது.

இதன் பிரகாரமே சிதைந்துவிடாத சிங்கள மக்களின் வாக்குகளுக்காகத் தேர்தல்களில் இனவாதம் ஒரு கவர்ச்சிப் பொருளாகியது. காலத்திற்குக் காலம், குறிப்பாக ஆயுதப் போராட்டம் முனைப்புப் பெற்ற கடந்த தசாப்தத்தில் அதன் அளவுகள் மாறுபட்டாலும், அதற்குரிய கவர்ச்சியை அது இழந்துவிடவில்லை. அதன் முக்கியத்துவம் மறைந்துவிடவில்லை.

அப்படியிருந்திருந்தால், நாடாளுமன்றத்தைக் கலைத்துப் புதிய தேர்தல் ஒன்றின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றிவிடமுடியும் என்று நம்பும், பிரயத்தனப்படும் சனாதிபதி சந்திரிகா பச்சை இனவாதத்தையே கையிலேந்தித் திரியும்-தமிழ் சிங்களக் கலைக்கூடலுக்குள் நுழைந்து தாக்குதல் நடாத்தும் இனவாதத் தீவிரத்தனம் கொண்ட ஜே.வி.பியுடன் தனது கட்சியை இணைத்து கூட்டமைத்திருக்கமாட்டார். இக்கூட்டமைப்புத் தேர்தலில் வெல்வதற்கு இன்றியமையாதது என்றோ, வழி செய்யும் என்றோ நம்பியிருக்கவும் மாட்டார். தவிரவும், நாடாளுமன்ற சனாதிபதி கலைத்ததற்காக நாட்டு மக்களுக்கு அவர் கூறும் நியாயப்பாடே ரணில் அரசாங்கம் புலிகளுக்கு அதி கம் விட்டுக்கொடுத்துவிட்டது என்பதுதான்.

ஆனால் இரண்டுவருட சமாதானம் தமிழர்களுக்கு எதையும் பெற்றுத்தரவில்லை என்று தமிழ் மக்கள் அங்கலாய்க்கின்றனர். யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் இணக்கம் காணப்பட்டாலேயே நடைமுறைக்கு வரவில்லை என்று தமிழ் மக்கள் உண்ணாவிரதம் இருக்கின்றனர். ஒப்பந்தத்தில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் நடைமுறைக்கு வரவில்லை தான் என்று இந்தவாரம் பி.பி.சியின் பேட்டிக்கு ஒப்புக்கொள்கின்றார் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே அவர்கள்.

இப்படியிருக்க, இனவாதம் இன்னமும் கவர்ச்சி குன்றாத வஸ்து என்று அவர்கள் நம்புவதனாலேயே ரணிலைக் குற்றம் சாட்டுவதை அரசியல் மேசை மறக்கமுடியும் என்று அடையாளம் கண்டிருக்கிறார்கள்.

இதற்கு மகாசங்கத்தினர் என்ற மகா கருவியை அவர்கள் துணையாக நம்பியிருக்க கருவிகளே கர்த்தாவாகிவிட்ட புதுமை நிகழ்ந்திருக்கின்றது. மாலைகளே சாமிகளாகிவிட்டன.

இது சந்திரிகாவின் கூட்டமைக்கு ஒரு அதிர்ச்சித்தாக்குதல். நூற்றுக்கணக்கான பௌத்த துறவிகள் ஹெல உறுமய கட்சியில் தேர்தலில் போட்டியிடுகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து எந்தக் கட்சியும் ஆட்சி அமைக்கக் கூடாது எனக் கோசமிடும்இவர்கள் தாம் தேர்தலில் போட்டியிடுவதால் சாதிக்கப்போவது என்ன? இரண்டு கட்சிகளினதும் வாக்கு வங்கிகளை உடைத்து அதற்கான வாய்ப்பை மேலும் அதிகரித்துவிடுவதுதான். இது அவர்களுக்குத் தெரியாததல்ல. கோசத்திற்கு எதிராகவே விளைவைப் பெறும விந்தையை விளங்கிக்கொண்டே செயற்படும் அவர்களைத் தெரிந்துகொள்ள வேண்டியவர்கள் சிங்கள மக்கள்தான். வாய் திறக்கும் தருணத்தைத் தட்டிக் கழிக்காது அரசியுலுக்குள் நுழைவதுடன் சில கதிரைகளையாவது கைப்பற்ற முனைவதுதான் அவர்களின் நோக்கமேயன்றி, அவர்கள் முழங்குவது போல நாட்டைக் காப்பாற்றத் தாங்கள் ஆட்சியைக் கைப்பற்றி விடுவார்கள் என்பதல்ல.

இதுபற்றிச் சிங்கள மக்கள் விளங்கவேண்டிய பங்கை விடத் தமிழ் மக்களும் மூன்றாம் தரப்பும் விளங்கவேண்டியதொரு பங்கும் உண்டு. அது இனவாத அலைக்கு இன்றும் காத்திரமான முக்கியத்துவமும் கவர்ச்சியும் உண்டு என்பதுதான்.

# அரசியலுக்குள் மதம் வழி தவறும் ஆன்மீகம்

இலங்கையின் வரலாற்றில் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக பௌத்த பிக்குகள் கட்சி அமைத்துத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

உலகில் பல மதங்களிருந்தாலும் இந்த மதங்களின் தலைவர்களும் பெரியவர்களும் மக்களை ஆத்மீக ரீதியில் வழிநடத்துவதையே முதன்மையான குறிக்கோளாகக்கொண்டு செயற்படுவதே முதன்மை பெற்றுள்ளது.

இதற்காகவே பல மதங்களிலிருந்தும் பல உயரிய தத்துவக் கோட்பாடுகள் தோன்றி இன்றும் உலகில் நிலைத்து நிற்கின்றன.

இந்தத் தத்துவக் கோட்பாடுகளைப்பற்றி மக்கள் தமது வாழ்க்கையைச் செம்மையாகக் கொண்டு செல்வதற்காக அயராது உழைத்த மதப் பெரியவர்களை ஆண்டவனாக மக்கள் மதித்து நடப்பது அவர்களின் உயரிய நோக்கத்தின் பாலேயாகும்.

ஆனால், வரலாற்றுக் காலங்கள் தொட்டு அரசியலில் மதப் பெரியவர்களின் பங்கு இருந்தே வருவதை எவரும் மறுப்பதற்கில்லை.

அந்தவகையில் புத்தபெருமானால் தோற்றுவிக்கப்பட்ட பௌத்த மதத்திற்கும், பௌத்தமத துறவிகளிற்கும் உயரிய பங்கிருந்தமை இன்றும் வரலாறாக இருந்தே வருகிறது.

ஆனால், இந்த மதத்துறவிகளின் அரசியல் பங்கு என்பது நல்ல ஆட்சிக்குத் தேவையான அரசியல் தலைவர்களிற்குத் தேவையான ஆலோசனைகளாக மட்டுமே இருந்திருக்கின்றன. இருக்கவேண்டும்.

அப்படி இருக்கும் பட்சத்தில் மாத்திரமே பல மதங்களையும் சார்ந்த மக்கள் வாழும் ஒரு நாட்டில் மக்களால் நிம்மதியாக வாழமுடியும்.

இதைவிடுத்து மதத் தலைவர்களே அரசியலில் ஈடுபடுவதானது மதத்தையும் இழிவுபடுத்தி, அரசியலையும் இழிவுபடுத்துவதாகவே அமையும்.

அத்தோடு மக்களையும் மதத்தின் மேல் இருக்கும் பற்றையும் நம்பிக்கையையும் தவறான வழியில் கொண்டு சென்று மத வெறியர்களாக மாற்றிவிடும் அபாயம் உண்டு.

அந்த வகையில் இலங்கையில் பதின்மூன்றாவது நாடாளுமன்றத் தேர்தலில் கட்சி அமைத்து பௌத்த பிக்குகள் ஈடுபடுவதானது இந்த நாட்டை ஒரு பௌத்த நாடாகப் பிரகடனப்படுத்த வேண்



டும் என்ற குறுகிய மதரீதியிலான அபிலாசையாக மட்டுமே இருக்கும்.

இது, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதம் எனப் பல மதங்களைக்கொண்ட மக்கள் வாழ்ந்து வருகின்றபோது அவர்களின் உரிமைகளைத் தட்டிப் பறிக்கும் ஒரு செயலாகவே இதனை நோக்கவேண்டும்.

ஆனால், இன்னுமொரு புறத்தில் இலங்கையில் தீவிரம்பெற்ற இனங்களிற்கிடையிலான முரண்பாடு தீவிரம் பெறுவதற்கும் அந்த இனங்களின் உரிமைகளை அவர்கள் பெற்றுக்கொள்வதற்கும் தடையாக இருந்த பெரும் சக்திகளில் இந்தப் பௌத்த மதப் பீடங்களின் கணிசமான பங்கும் ஒரு காரணமாகும்.

ஏனென்றால், இலங்கையில் ஆட்சி பீடம் ஏறும் எந்த சனாதிபதியும் முதலில் இலங்கையின் பௌத்தமத மகாநாயக்கர்களைச் சந்தித்து அவர்களின் ஆலோசனைகளைப் பெற்றே தொடர்கின்றனர்.

அவ்வாறு ஆட்சியைத் தொடர்ந்தவர்கள் எல்லாம் சிறுபான்மை இனமக்களின் உரிமைகளைத் தடுத்ததோடு அவர்களின் மீது கொடிய யுத்தத்தையே ஏவிவிட்டனர்.

இந்த நிலையில் இந்தத் தேர்தலில் பௌத்த பிக்குகள் ஈடுபடுவதானது அதிசயமாக நோக்குவதற்கு ஒன்றுமில்லை. ஆனால், இலங்கையின் அரசியல் தலைமைக்குள் தீவிரம் பெற்று இருக்கும் குழப்பங்களும் குழறுபடிகளும் மேலும் அதிகரித்து இந்த நாட்டைப் புத்தபெருமான் அருளிய அமைதியான வாழ்வுக்குப் பதிலாகக் கொடூரமிகுந்த வாழ்வுக்கே கொண்டுசெல்லப் போகின்றது.

இந்த நிலையில் இந்தப் பிக்குகளின் பின்னால் அணிதிரளும் மக்கள் மட்டுமன்று இலங்கையில் வாழும் ஏனைய சிங்கள மக்களும் பாவப்பட்டவர்களாகவே மாறப்போகிறார்கள்.

இந்த நிலையில் பௌத்த பிக்குகளின் அரசியல் பிரவேசமானது பற்றற்ற வாழ்வு இணைந்து ஆன்மீக வாழ்வில் பங்குகொண்டுள்ள மதத்தத்துவங்களைக் கூட மலினப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

இந்த நிலைக்கு உண்மையான காரணகர்த்தாக்கள் யார் என்றால் இலங்கையின் ஆட்சிபீடமேறிய அரசியல் தலைவர்களேயாகும்.

ஏனென்றால் மதப்பெரியவர்களுக்குரிய இடத்திலிருந்து அவர்களை இழுத்துத் தமது தனிப்பட்ட மற்றும் ஒரு கட்சி சார்ந்த அரசியல் இலாபங்களிற்காகப் பயன்படுத்தியதன் விளைவு இப்போது இலங்கை அனுபவித்தாக வேண்டியதாயிற்று.

இதிலும் வேடிக்கையான விடயம் என்னவென்றால் யார் இவர்களை எந்த அரசியல் பலத்தைப் பெறவேண்டும் என்ற நேரத்தில் கட்சிக்குள் இழுத்து வந்தார்களோ அதே அரசியல் கட்சிகளில் பலத்தை சிதைத்துவிடுகின்ற அபாயத்தைத் தோற்றுவித்திருப்பதுதான்.

இந்த நிலையில் இந்தப் பிக்குகளின் அரசியல் பிரவேசமும் இலங்கையில் மீண்டும் ஒரு கறை படிந்த அரசியல் வரலாற்றையே தோற்றுவிக்கப்போகிறது.

**புகலன்**

ஒருவர் அறிந்தால், இரகசியம், இருவர் அறிந்தால், அம்பலம். – தமிழ்ப் பழமொழி.

# தமிழரின் பலம் வெளிப்படும் நாள்

இலங்கையின் பதின்மூன்றாவது நாடாளுமன்ற பொதுத்தேர்தல் இலங்கையின் வரலாற்றில் 1977 இல் நடைபெற்ற தேர்தலுக்குப் பின்னர் பலமானதொரு எதிர்பார்ப்போடும், தமிழ்மக்கள் உணர்வு மயத்தோடும் எதிர் நோக்கும் ஒரு தேர்தலாக பரிணமிக்கின்றது.

1977 இல் வட்டுக்கோட்டைத் தீர்மானம் மூலமாக தமிழ் இளைஞர்களின் ஆன்மாக்களில் எவ்வாறு விடுதலைக்கான வித்தை வீரியப்படுத்தியதோ அந்த வித்தின் வீரியத்தின் பயனாக தமிழ் மக்கள் உலகில் படைபல ரீதியாக வலுப்பெற அமைந்ததோ அத்தகைய ஒரு அரசியல் வெற்றி பலத்தை சர்வதேச சமூகத்திற்கு புலப்படுத்தும் தேர்தலாக இந்த பதின்மூன்றாவது நாடாளுமன்றத்தேர்தல் அமையப்போகிறது.

இந்தத் தேர்தல் முக்கியத்துவம் பெறுவதற்கு பல காரணங்கள் உண்டு.

ஒன்று- தமிழ்த் தேசியம் ஒன்றுபட்டு நிற்கின்ற ஒரு தேர்தலாக இந்தத் தேர்தல் காணப்படுகின்றது.

இரண்டு-தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமைக்கான தமிழ்மக்களின் ஆணையை உலகிற்கு உணர்த்தப் போகும் ஒரு தேர்தலாக இருக்கப்போகிறது.

மூன்று- தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரே தலைமையில் தமிழ்மக்கள் அணிதிரண்டு நிற்பதை காட்டப்போகிறது.

நான்கு- தமிழ் மக்களின் விடுதலைப் போருக்கும் தமிழ் மக்களின் உரிமைக்கும் ஊறுவிளைவிக்கும் புறசக்திகளை முறியடிக்கப்போகும் ஒரு தேர்தலாக அமையப்போகிறது.

ஐந்தாவது- தமிழ்மக்கள் சனநாயக ரீதியாக ஒரு சனநாயக வழியில் நின்று உரத்து முழக்கமிடப்போகும் ஒரு தேர்தலாக இது அமையப்போகிறது.

ஆறு- நாடாளுமன்றத்தில் நம்பிக்கையிழந்து நாடாளுமன்றத்திற்கு வெளியில் நின்று விடுதலைப் போரை நடத்திய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பகிரங்கமாக தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு தமது ஆதரவை வழங்கி நிற்கும் ஒரு தேர்தலாக இருப்பது.

இவ்வாறு இந்த பதின்மூன்றாவது நாடாளுமன்றத் தேர்தல் ஒரு முக்கியத்துவமிக்க தேர்தலாக அமைகிறது.

இதேநேரம் புலிகள் இந்த நாடாளுமன்ற தேர்தலுக்கு ஆதரவளிப்பதன் மூலம் நாடாளுமன்றில் நம்பிக்கைகொண்டுவிட்டார்களா என எவரும் கேட்கக்கூடும்.

ஆனால் உண்மை அதுவல்ல தமிழ்மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் புலிகள் என்றோ நாடாளுமன்றில் நம்பிக்கை இழந்து விட்டனர். ஆனால் இந்த தேர்தலை புலிகள் ஒரு பெரும் இராஜதந்திர வெற்றிக்கான வாய்ப்பாக பயன்படுத்தப்போகிறார்கள். இது இன்றைய உலகின் போக்கிற்கும் இலங்கையின் அரசியல் நிலவரத்துக்கும் அவசியமாகப்படுகிறது.

அந்தவகையில் இந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளுக்கூடாக தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வினை எட்டிவிட முடியும் என்ற அதிக கற்பனைக்குள்ளும் தமிழ் மக்கள் இருந்துவிடக்கூடாது.



இந்தத் தேர்தலின் முடிவின் பின்னரும் சிறிலங்காவின் ஆட்சி அதிகார மையத்தை அலங்கரிக்கப்போவது ஒன்று- ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அல்லது

இனவாதக் கட்சியோடு கூட்டமைத்திருக்கும் சந்திரிகாவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி.

இந்த இரண்டு பிரதான கட்சிகளினால் கடந்த அரைதசாப்தத்திற்கு மேல் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டு வந்ததையும் இனியும் அவர்கள் ஏமாற்றவே முனைவார்கள் என்பதையும் புரிந்து கொள்ளவேண்டும்.

அவ்வாறாயின் இந்த நாடாளுமன்றத் தேர்தலிற் கூடாக தமிழ் மக்கள் எதனை சாதித்துவிடமுடியும் என்ற வினா எழும் அதனை நாம் கவனத்தில் கொள்வது மிக அவசியம்.

அந்த வகையில் 1977 வட்டுக்கோட்டை தீர்மானம் மூலம் தமிழ் மக்களிற்கான தீர்வாக தமிழீழ கோரிக்கை என்ற மக்களின் அரசியல் வரலாற்று முதுசம் ஒன்றைப்பெற்றது போல.

இந்தத் தேர்தல் முடிவானது தமிழ் மக்களின் அண்மைய வரலாற்று அரசியல் முதுசமாக மாற்றப்படவேண்டும்.

இதனை தமிழ் மக்கள் நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும்.

அதாவது இந்தத் தேர்தல் மூலம் தமிழ் மக்கள் இலங்கையின் உள்ளக அரசியலில் சாதிக்கமுடியாது போனதை சர்வதேச அரசியலில் சாதிக்கமுற்பட்டு நிற்பதை புரிந்து கொள்ள வேண்டும். புலிகளின் படை பலம் மூலம் தோற்கடிக்கப்பட்ட சிங்கள தேசத்திற்குபலமான ஒரு அரசியல் பலப்பிரயோகத்தை புலிகள் காட்டமுற்படுவதை புரிந்துகொள்ளவேண்டும்.

**சிறி. இந்திரகுமார்**

இந்த ரீதியிலேயே புலிகள் பதின்மூன்றாவது நாடாளுமன்றத்தேர்தலை பயன்படுத்துகின்றனர்.

புலிகளின் இந்த அரசியல் வியூகத்திற்கு சாதகமாக சிங்கள தேசம் என்றுமில்லாதவாறு பிளவுபட்டு நிற்கும் களய தார்த்தத்தையும் தெரிந்துகொள்ளவேண்டும்.

இந்த களயதார்த்தத்தை புரிந்துகொண்டு கடந்த இரண்டு வருடத்திற்கு மேல் சமாதான வழி மூலம் இழப்புக்கள் ஏதுமின்றி பொருத்தமான ஒரு தீர்வை பெற்றுவிட புலிகள் முன்வைத்திருக்கும் தன்னாட்சி அதிகாரத்திற்கான வலுவை அதிகரித்துக்கொள்ளவேண்டும்.

அதற்கு தமிழ் மக்களின் வாக்குப் பலத்தை சிதைக்கும் நோக்கில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு வெளியில் நின்று தேர்தலில் போட்டியிடும் குழுக்களை தமிழ் மக்கள் முற்று முழுதாக இந்த தேர்தலில் நிராகரிக்க வேண்டிய அவசியம் உள்ளது.

தமிழ் மக்களின் தேசிய ஒற்றுமையை சிதறடிப்பதற்காக முழுமூச்சாக செயற்படும் வெளி அரசியல் சக்திகளின் பண பல சக்திகளின் தளத்தில் நின்று கொண்டு தேர்தல் களத்தில் நிற்கும் இந்த சக்திகளை புறந்தள்ளுவதன் மூலம் தமிழ் மக்களுக்கான உரிய தீர்வை நோக்கிய பயணத்திற்கான பாதையை விரைவுபடுத்தமுடியும்.

இவற்றையெல்லாம் கவனத்தில் கொள்ளும் தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்ற அனைவரும் பங்கு கொண்டு தேர்தலில் வாக்களிக்கவேண்டும்.

தமிழ் மக்களின் வாக்கு எண்ணிக்கை எந்த விதத்திலும் சிதறடிக்கப்படவோ அல்லது வாக்களிக்காமலோ தவறவிடுதல்கூடாது.

ஏனென்றால் விகிதாசார பிரதிநிதித்துவ முறையான இந்த தேர்தல் மக்களின் வாக்கு எண்ணிக்கையை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதனை சிதறடிக்கும் வகையிலும், தமிழ் மக்களின் ஒற்றுமையும் பலமும் நிரூபிக்கப்படுவதை குழப்பவே சிறிலங்காவின் இராணுவத்தளபதி லயனல் பலகல்ல புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திலிருந்து வாக்களிக்கவுள்ளவர்களை அச்சுறுத்தும் வகையில் கடுமையான சோதனைக்கு உட்படுத்துவார்கள் என தெரிவித்துள்ளார்.

இதில் முக்கியமாக கவனிக்க வேண்டியது புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள்ளிருக்கும் மக்கள் எவ்வாறு வாக்களிக்க ஒழுங்குபடுத்தப்படவிருக்கிறார்கள் என்ற உத்தியோக பூர்வ அறிவித்தல்கள் எவையும் வெளிவரமுன்னர் இவர் இவ்வாறு தெரிவித்திருப்பது தான். இதன் மூலம் தமிழ் மக்களின் வாக்குப் பலத்தை சிதைப்பதில் கவனமாக இருக்கின்றார்கள் என்பதை புரிந்துகொள்ளலாம். சென்ற தேர்தலில் இவ்வாறு மக்களை வாக்களிக்கச் செல்லவிடாது தடுத்து பின்னர் நீதிமன்றத் தீர்ப்பால் நட்டஈடு செலுத்தப்பட்டமை இங்கு கவனத்தில் கொள்ளவேண்டும்.

இந்த நிலையில் உலகின் புதிய அரசியல் நகர்விற்கு ஏற்ப ஏனைய விடுதலை அமைப்புக்களுக்கு முன்னோடியாகவும் ஏனைய அமைப்புக்களை போலல்லாது புலிகள் இயக்கம் சரியானதொரு அரசியல் நகர்வில் இராசதந்திர ரீதியாக அணுகிவரும் புலிகள் இயக்கம் இந்த நாடாளுமன்ற தேர்தல் மூலம் பறிக்க முனையும் இலாப கனிகள் தமிழ் மக்களின் உரிமைகளை விரைந்து பெற வழி சமைக்கும் என்பது மட்டும் திண்ணம்.

## மதவடி மயிலர்



**செய்தி:-** *அரசியலில் இருந்து தான் ஓரங்கட்டப்பட்டு வருவதாக அனுருத்த ரத்வத்த கவலை...*

**மயிலர்:-** எத்தனையோ பேரை தனது அதிகாரத்தால் ஓரங்கட்டியவர் இப்போது மருமகளாலேயே ஓரங்கட்டப்பட்டுள்ளார்... இதுதான் தன் வினை தன்னைச்சுடும் என்பது போன தேர்தலிலை அவர் ஆடிய ஆட்டமென்ன... அவரைப்பார்த்து மக்கள் ஓடிய ஓட்டமென்ன? துப்பாக்கிமுனையில் அரசியலலையும் தேர்தலையும் நடத்த முயன்ற சீமானுக்கு இப்படி ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்படுமென்று அவரே நினைத்திருக்க மாட்டார்... என்ன நான் சொல்லுறது சரிதானே...

**செய்தி:-** *சுயேச்சையாக்க் கூடப் போட்டியிடாதீர்! சங்கரியிடம் பொது அமைப்புக்கள் வேண்டுகோள்.*

**மயிலர்:-** வெறியோடு நிற்பவர்களுக்கு வேண்டுகோள்கள் விளங்காது பாருங்கோ... சுயநலத்தைக் கருத்தில் கொண்டு செயற்படும் சங்கரியாருக்கு சுய இச்சைகள் அதிகம். அதுதான் சுயேட்சையாக போட்டியிடுகிறார் போலும்...! பொது அமைப்புக்கள் கத்துறதெல்லாம் செவிடன் காதில ஊதிய சங்கு போலத்தான்... சங்கரியார் பற்றிய சங்கதிகள் இனிமேல் தான் வெளிவரப்போகுது பாருங்கோ...

**செய்தி:-** *ரொனி டீ மெல்லும் மனைவியும் மீண்டும் கட்சிதாவினர்...*

**மயிலர்:-** கட்சிதாவலிலை ஆள் கின்னஸ் சாதனையை படைத்தாலும் படைக்கலாம் பாருங்கோ... அரசியலிலை எந்த அரசு வந்தாலும் அமைச்சராகும் யோகமும் அவருக்குண்டு...அது சரி கொள்கை கோட்பாடு இல்லாதவைக்கு...கோடு என்ன? கச்சேரி என்ன? எல்லாம் ஒன்றுதான்...

**செய்தி:-** *தனது அரசியல் நிலைப்பாட்டை தமிழ்மக்கள் ஆதரிப்பார்களாம் என ஆனந்தசங்கரி கூறுகிறார்.*

**மயிலர்:-** தமிழ் மக்களின் நிலைப்பாட்டை புறக்கணித்து அவர்களின் ஒருமைப்பாட்டை சிதைக்கும் நோக்குடன் தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிடும் சங்கரியார் தனது அரசியல் நிலைப்பாட்டை மக்கள் ஆதரிப்பர் என நினைப்பது வேடிக்கைதான்... மீசைக்கும் தலைக்கும் சாயம் பூசி உண்மையை மறைக்கலாம் ஆனால் நடைமுறை அரசியல் குற்றங்களுக்கு சாயம் பூசி மறைக்கேலாது பாருங்கோ சங்கரியாரே...

**செய்தி:-** *புலிகளின் இடைக்கால நிர்வாக சபை யோசனையை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்கிறார் விமல்வீரவன்ச.*

**மயிலர்:-** அதுசரி.. உங்களை யார் ஏற்றுக்கொள்ளச் சொல்லிக் கேட்டதாம்.. மிஸ்ரர் வீரவன்ச..? உங்கட கூட்டணித் தலைவி சந்திரிகாவின் அதிகாரப் பரவலாக்கலையும் நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று அறிவித்தாலும் அதைப்பற்றி சந்திரிகா அலட்டிக்கொள்ளவில்லையே... உங்களைப்பற்றி அம்மணியின் அபிப்பிராயமே இந்தளவுக்குத்தான் என்றால்... தமிழ்மக்கள் என்ன அபிப்பிராயம் வைத்திருப்பார்கள் என்பதை நினைச்சுப்பாருங்கள்.. மாரித்தவக்கைகளின் கத்தலை ஆரும் பொருட்படுத்துவதே கிடையாது.. புரிகிறதா வீரவன்சவே..!

**செய்தி:-** *வடமராட்சி மீனவர்களை வெட்டிக்குதறி இந்திய மீனவர்கள் அராஜகம்...*

**மயிலர்:-** இதனையும் எல்லைதாண்டிய பயங்கரவாதம் என்று எடுத்துக்கொள்ளலாம் அல்லவா? அப்பாவி தமிழ் மீனவர்கள் சிங்களக் கடற்படையினராலும், இந்திய மீனவர்களாலும் தாக்கப்படுவதை இரண்டு அரசுகளுமே கண்டுகொள்வதாகத் தெரியவில்லை... இனி கடற்புலிகள்தான் அவர்களைக் காப்பாற்றவேண்டும்.

என்னால் வெல்ல முடியாததைக் கண்டு அஞ்சுவது சித்திரவதை. - அனார்க்கார்ஸிஸ்

# நறுக்கென...

## கட்சி தாவி சங்கரியார் கடைசியில் சுயேச்சையான கதை!



கடைசியில் சங்கரியார் தமிழினத்தைச் சங்காரம் செய்வ தென்றே முடிவு செய்துவிட்டார்.

தமிழினத்தின் ஒருமைப்பாட்டைச் சிதைக்க-தமிழர் ஐக்கிய கூட்டமைப்பை உடைக்கப் பேரினவாதிகளுக்கும், அயலக ஆதிக்க சக்திக்கும் கைக்கூலியாகத் தன்னை மாற்றிக்கொள்ளும் இழிநிலைக்கு இறங்கிவிட்டார்.

சுயேச்சைக் குழுவொன்றை அமைத்து சிகல உறுமயவைப் போல், தமிழின எதிர்ப்பாளராகித் தமிழ் மக்களின் வாக்கு வங்கியைச் சிதைக்க, தேர்தலில் போட்டியிட, கட்டுப்பணமும் கட்டிவிட்டார்.

அவருக்கு இந்தத் தேர்தலில் போட்டியிட்டே தீரவேண்டும் என்ற அவசியம் ஏன் ஏற்பட்டது?

நாடாளுமன்றத்தில் எத்தனை காலம் பதவியை வகித்தவர், எத்தனை கட்சிகளில் இருந்தவர், எத்தனை கட்சிகளுக்குத் தாவியவர், எத்தனை தரம் கொள்கைகளை மாற்றிக் கொண்டவர்... என்பதெல்லாம் தமிழ் மக்கள் உணராததல்ல.

கடைசியில் இனத்தைக் காட்டிக்கொடுக்க, தமிழ் மக்களின் • ஒருமித்த அரசியல் நிலைப்பாடொன்று உருவாக்கப்பட வேண்டிய வரலாற்று முக்கியத்துவமிக்க காலகட்டத்தில், அதைச் சிதைத்து அற்ப சுயநல அரசியல் சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்காக சுயேச்சை அவதாரம் எடுத்த சங்கரியாரின் சங்கதிகள் பலவும் இனிமேல் தான் வெளிவரப்போகின்றன.

தேர்தல் அவரின் சுயத்தன்மையை வெளிப்படுத்திவிட்டது.

வேட்பு மனுத்தாக்கல் செய்ய அவர் யாழ்ப்பாணம் வந்திறங்கியது முதல் அவருக்கு வழங்கப்பட்ட சிறிலங்கா அரச படையினரின் அதிஉச்ச பாதுகாப்பு அவரது இன்றைய பரிதாபகரமான நிலையைப் பகிரங்கப்படுத்திவிட்டது?

தன்னின மக்களிடமிருந்து தன்னைப் பாதுகாக்க அந்நியப் படைகளின் ஆயுதமுனைப் பாதுகாப்பை அவர் நாடியது அவருக்குக் கௌரவம் என்று நினைக்கிறாரா?

பாவம் தனது சுயாதீனமான செயற்பாடுகளைத் தனது சொந்த ஊரில் செய்யமுடியாத பயப்பீதி அவருக்கு ஏற்படக்காரணம் அவருக்கே தெரியும்...

அவரது சகோதரரைப் போல் தானும் தன்னின விரோத சக்திகளின் கையாளாக மாறிவருவதை அவர் உணரத் தலைப்பட்டமையே அவரது பயத்திற்குக் காரணம்.

ஒரு காலத்தில் அவரது கட்சியினரை ஆயுத முனையில் அவமதித்த ஆயுதப்படையினரிடமே, தன்னை ஆதரித்துப் பாராட்டிய மக்களிடமிருந்து பாதுகாப்புத்தேட, சரணடைந்து நிற்கும் பரிதாபம் சங்கரியாருக்கு ஏற்பட்டுவிட்டமைக்கு அவரது அரசியல் சுயநலமே காரணம்.

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என விடுதலைப்புலிகளை ஏற்க அவர் தடுமாறியபோதே அவரின் மூக்கணாங்கயிறு தமிழின விரோத சக்திகளின் கையில் சிக்கிவிட்டது என்பது தெளிவாகிவிட்டது.

அயலக சக்தியின் அழுத்தத்திற்கு அடிபணிந்துவிட்டார் என்பது புரிந்துவிட்டது.

இப்போது செய்கின்ற அவரது செயல்கள் அனைத்திற்கும் அதன் எதிர்விளைவுகளுக்கும் அவரே பொறுப்பேற்கவேண்டும்.

ஆனந்த சங்கரியார் தனது அரசியலில் வரலாற்றுத் தவறுகளைத் தமிழினத்திற்குச் செய்துவிட்டார்...

வரலாறு அவரை மறக்காது... மன்னிக்காது...

## மகிந்தரின் அறிவிப்பு: சனநாயகத்திற்கு ஓர் அச்சுறுத்தல்



ஏற்கெனவே அறுதிப் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியில் இருந்த ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான ஐ.தே. முன்னணி அரசை நியாயபூர்வமான காரணங்கள் ஏதுமின்றி தன்னிச்சையாக, தனது அபரிமிதமான அதிகார பலத்தை பயன்படுத்தி, சனநாயக விதிமுறைகளுக்கு மாறாக, சந்திரிகா கலைத்தமையானது ஒரு சர்வாதிகார நடவடிக்கையெ ன்ற கருத்தியல் நோக்கானது அனைவரிடமும் இருப்பது குறித்து கூறத்தேவையேயில்லை.

பண்டாரநாயக்கா பரம் பரைக்கே உரிய ஆணவமும் திமிரும் கலந்த மனித உரிமைகளை மதிக்காத ஒரு செயற்பாடாகவே இதுகருதப்பட்டும் உள்ளது.

சரி, ஆட்சி கலைக்கப்பட்டு, தேர்தலுக்கான நாளும் குறிக்கப்பட்டு, வேட்புமனுக்களும் தாக்கலாகிவிட்டுள்ள நிலையில், அடுத்த அரசாக மக்கள் எந்தக் கட்சியை தெரிவு செய்யப் போகிறார்கள் என்ற கேள்வி இன்று பரவலாக எல்லோர் மட்டத்திலும் எழுந்துள்ள சூழலில், புதிதாக அமையும் அரசு நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியுடன் இணைந்து செயற்படக் கூடிய ஒன்றாகவே இருக்க வேண்டும் என சனாதிபதி தரப்பில் இருந்து ஓர் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

கருத்தை வெளியிட்டவர் வேறு எவருமல்ல .. மகிந்தராஜபக்ஷவே தான் இதனை கருத்தா, அறிவிப்பா, அறிவுறுத்தலா, அல்லது அச்சுறுத்தலா எவ்வாறு இனங்கண்டு கொள்வதென்பது குழப்பமானது தான்.

எனினும் இதனை ஓர் அச்சுறுத்தலாகவே உணர முடிகிறது.

அதாவது நேரடியாகவே அவர், சனாதிபதியுடன் இணைந்து செயற்படக்கூடிய கட்சியே ஆட்சிக்கு வரவேண்டுமென்றும், மக்கள் அப்படி தெரிவு செய்தால் தான் ஆட்சி அமைக்கும் அரசு ஆறு வருடங்களை ஒழுங்காகப் பூர்த்திசெய்யமுடியும் என்று கூறியுள்ளமையானது, அப்படி மக்கள் தெரிவு செய்யாத பட்சத்தில் அந்த ஆட்சியை சனாதிபதி தன் விருப்பப்படி கலைத்து விடுவார் என்ற தொனியைக் கொண்டதாக உள்ளது.

இதனை மக்களின் விருப்பத்தேர்வை நிராகரிக்கும் அச்சுறுத்தலாகவே அடிப்படை மனித உரிமை மீறலாகவே- கருதப்படவேண்டியுள்ளது.

இன்னும் இரு ஆண்டுகளுக்கு சனாதிபதியாக இருக்கும் உரிமையைக் கொண்டவராக தன்னை பிரகடனம் செய்துள்ள சந்திரிகா தன் சொல்லுக்கு கீழ்ப்படியாத ஓர் அரசை மக்கள் தேர்வு செய்தால், ஓராண்டு கால முடிவுக்குள் அதனைக் கலைத்துவிடும் அதிகாரத்தை உடையவராக இருப்பதையே மகிந்தராஜபக்ஷ தன் பேச்சின் மூலம் வலியுறுத்தி அச்சுறுத்தியுள்ளார் எனலாம்.

இந்த நிலையில் ஐ.தே.முன்னணி அரசு மீண்டும் பதவிக்கு வர நேரிட்டால் மீண்டும் அதற்கு 'அற்பாயுசு' தான் என்ற எச்சரிக்கையையே மகிந்தராஜபக்ஷ விடுத்துள்ளார் எனலாம். இது ஒரு சனநாயக விரோத செயற்பாடேயாகும். சனநாயகத்திற்கு எப்போதுமே அச்சுறுத்தலாக- தனது அதிகாரங்களை பயன்படுத்தத் துடிக்கும் நிறைவேற்று அதிகார சனாதிபதி தனது எதிர்கால இலக்கையும் ராஜபக்ஷ மூலம் வெளிப்படுத்தியுள்ளார் என்றே கூற வேண்டும். சிறிலங்காவின் அமைதியையோ, சமாதானத்தையோ ஏற்படுத்த சந்திரிகாவும் அவரது கையிலுள்ள அதிகாரமும் ஒரு போதுமே அனுமதிக்காது என்பதையே மகிந்தரின் இந்த அச்சுறுத்தல் அறிவிப்பு உணர்த்துவதாக உள்ளது.

பாவம் சிறிலங்கா மக்கள்.

## தேர்தல் சரணம் கச்சாமி வாக்கு தரணும் கச்சாமி



புத்தம் சரணம் கச்சாமி' என்று கூறிக்கொண்டு பௌத்த மதஉபதேசம் செய்யப் புறப்பட்டு இடையில் இனவாதிகளாகி 'யுத்தம் சரணம் கச்சாமி' என தமிழ் மக்களுக்கு எதிராக யுத்த கோஷம் எழுப்பிய பிக்குகள் இப்போது தேர்தல் சரணம் கச்சாமி என்று அரசியலில் குதித்துள்ளமையானது புத்தபகவானின் வழித்தடத்தையே அவர்கள் தலைகீழாக மாற்றத் துணிந்துவிட்டார்கள் என்பதையே உணர்த்துவதாக உள்ளது.

அதாவது அரச வாழ்வை உதறித்தள்ளி, அரச பீடத்தில் முடி சூடி அமர்ந்திருக்கும் பாரம்பரிய உரிமையைப் புறந்தள்ளி விட்டு, அரச மரத்தடியில் அமர்ந்து தியானம் செய்து தவமியற்றியதன் மூலம் ஞான நிலை யெய்திய புத்த பகவானை, உனது மார்க்கமே தவறானது, மீண்டும் அரசனாகிவிடு எங்களைப் போல்.... என இந்தப் பிக்குகள் அவருக்கு அறிவுறுத்துவது போலுள்ளது இவர்களின் செயல்.

சிகல உறுமய பௌத்த சிங்கள மக்களின் உரிமையை பாதுகாக்கவென உருவான பேரினவாத சிந்தனையாளர்களின் அமைப்பாகும். அதாவது அரசியல் கட்சியாகும். வில்லையும் அம்பையும் சின்னமாகக் கொண்டு தமிழர்களை வேட்டையாடி அழிக்கும் இலக்குடன் தமிழ் மக்களுக்கு எதிரான போரை வலியுறுத்திய இந்தக் கட்சியினர் பௌத்த தர்மத்தைக் காத்தார்களோ இல்லையோ, பௌத்த பிக்குகளை அரசியல்வாதிகளாக்குவதில் வெற்றி கண்டுவிட்டார்கள் என்பதில் ஐயமில்லை.

அதுவும் அந்தப் பிக்குகளை யாழ்.மாவட்டத்தில் கொண்டுவந்து இறக்கித் தமிழ் மக்களின் உணர்வுகளைப் புறக்கணித்துத் தமிழ் வேட்பாளர்களுக்கு எதிராகப் போட்டியிட வைத்துப் பிக்குமார் பேரினவாதத்தின் அடையாளச் சின்னங்கள்தான் என்பதைப் பகிரங்கப்படுத்தி அவர்கள் தங்களைப் போன்று சாதாரணமான மூன்றாந்தர அரசியல்வாதிகள்தான் என்பதையும் உறுதிப்படுத்திவிட்டார்கள்.

நன்றி;

நாம் இதுவரை அவர்களை சங்கைக்குரிய-வணக்கத்திற்குரிய பௌத்த துறவிகள் என்று தவறாக மதிப்பு வைத்திருந்தோம்.

தவறை உணர வைத்தமைக்கு நன்றி.

கடந்த தேர்தலிலும் ஒரு சமித்த தேரர் நாடாளுமன்றம் புகுந்தபோது அதனை ஒரு விபத்தாக மட்டும் நினைத்தோம்.

இப்போதுதான் அது ஒரு ஆபத்துக்கான அறிகுறி என்பது தெரிகிறது.

அடுத்துவரும் தேர்தல் ஒன்றில் 'பிக்குகள் முன்னணி' ஆட்சியைப் பிடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அந்த அளவிற்குப் பௌத்த மதவாதமும் சிங்கள இனவாதமும் சிறிலங்காவின் அரசியலை ஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டது.

அதுசரி சிஹலஉறுமய ஏன் தாங்கள் யாழ்ப்பாணத்தில் போட்டியிடாது முழுமையாகப் பிக்குகளைக் களத்தில் இறக்கினார்களாம்?

தோல்வி நிச்சயம்... தோற்பவர்கள் பிக்குகளாக இருக்கட்டும் என்பதாக இருக்குமோ? பிக்குகளுக்குத் தோல்வியும் வெற்றியும் ஒன்றுதான் என நினைத்தார்களோ? எதுவானாலும் பிக்குகளை அவமானப்படுத்தவேண்டும் என்பதில் சிஹல உறுமயக்காரர்கள் தீர்க்கமான முடிவுடன் இருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது...

பாவம் சிறிலங்காவின் எதிர்காலம் அரசியல் துறவிகளாலா நிர்ணயிக்கப்படவேண்டும்....?

சிகல உறுமயவை ஹெல உறுமயவாக மாற்றினாலும் அதன் இன்வாதத்தை மாற்றவே முடியாது.

## உயர்பாதுகாப்பு வலயமும் சந்திரிகாத் தனமும்...



உயர்பாதுகாப்பு வலயத்துள் மக்களை மீள் குடியேற்றம் செய்யப் படையதிகாரிகளுடன் பேச்சு நடத்தி இணக்கம் காணப் போகிறாராம் சந்திரிகா.

ஈ.பி.டி.பிக்கு அவர் இவ்வாறு உறுதி கூறியுள்ளாராம்!

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகி இரண்டாண்டுகள் கடந்த பின்னர் இப்போது இதுபற்றி அவர் கூறக்காரணம் 'தேர்தல்' என்பதைத் தவிர வேறெதுவும் கிடையாது.

இந்த இரண்டாண்டு காலத்தில் சமாதானப் பேச்சுக்களின் போதெல்லாம் இந்த உயர்பாதுகாப்பு வலயமே மிகவும் சர்ச்சைக்குரிய பிரச்சினையாக இருந்ததென்பது சந்திரிகாவுக்கு மிகவும் தெளிவாகத் தெரியும்.

இந்தப் பிரச்சினையைப் படையினருடன் பேசியோ, தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தியோ அல்லது முப்படைத் தளபதி என்ற வகையில் கட்டளை பிறப்பித்தோ கூட மிகவும் இலகுவாகத் தீர்த்திருக்க அவரால் முடிந்திருக்கும்.

ஆனால், அவர் அவ்வாறு எந்த நடவடிக்கையையும் எடுத்தது கிடையாது. மாறாகத் தனது அதிகாரத்தையும், படைத்தரப்பினர் மீதான தனது செல்வாக்கையும் மறைமுகமாகப் பயன்படுத்தி உயர்பாதுகாப்பு வலய விவகாரத்தில் படைத்தரப்பினர் விட்டுக்கொடுக்காத ஒரு நிலையை ஏற்படுத்தினார் என்பது முக்கியமான விடயமாகும்.

இன்னும் அவரது கட்சிக்காரர்கள் உயர்பாதுகாப்பு வலயத்தை நீக்குவது தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலாகிவிடும் என்று தொடர்ந்து எச்சரித்து அந்த விடயத்தில் ரணிலின் அரசு எந்த முடிவையும் எடுக்க இயலாத இக்கட்டான நிலையை ஏற்படுத்தினர் என்பதும் தெரிந்ததே...

இந்த உயர்பாதுகாப்பு வலய விவகாரம் தொடர்பாக இந்தியாவின் சதீஸ் நம்பியார் உட்பட வெளிநாட்டு இராணுவ ஆலோசகர்கள் கொழும்புக்கு விஜயம் செய்து மதிப்பீடுகளை மேற்கொண்டு, இந்த விவகாரத்தைப் பாரிய விடயமாகக் காட்ட முயன்றபோது, தன்னைச் சந்தித்த அவர்களிடம் உயர்பாதுகாப்பு வலய விவகாரத்தில் விட்டுக்கொடுப்பு எதனையும் செய்யமுடியாதெனத் தெரிவித்து அதற்கு ஒத்தாசை வழங்கியவரும் இதே சந்திரிகாதான்.

இப்போது உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாகப் படையினருடன் பேசிச் சுமுகமான முடிவு எடுப்பதாகத் திடீரென்று கூறுவது, அதுவும் தனது தோழமைக் கட்சிக்காரரிடம் கூறி அதனைப் பிரசாரம் செய்ய முற்படுவது அப்பட்டமான சுயநலத்தின்பாற்பட்ட ஒன்றேயாகும்.

தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைக் கவர்வதற்கு, ஒரு கவர்ச்சிகரமான வாக்குறுதியாகவே சந்திரிகா இதனைப் பயன்படுத்த முனைகின்றார் என்பதில் ஐயமில்லை. அதுவும் டக்ளஸ் தேவானந்த மூலம் தமிழ் மக்களைப் பேய்க்காட்டும் ஒரு உத்தியாகவே இதனைக் கையாள நினைக்கின்றார் என்றால் அது மிகையில்லை.

இப்போதும் கூட அரசுக்குத்தான் அதிகாரமில்லை... சனாதிபதிக்கு அதிகாரம் உண்டு... அபரிமிதமான அதிகாரம் உண்டு, கட்டளையிடும் அதிகாரம் உண்டு, தீர்மானமெடுக்கும் அதிகாரம் உண்டு...

அவர் நினைத்தால் உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினையில் சுலபமாக முடிவெடுக்க முடியும். ஆனால், அப்படிச் செய்யவே மாட்டார்.

எந்தக்காலத்திலும் அவர் உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினையில் தமிழ் மக்களுக்குச் சார்பாக முடிவொன்றை எடுக்கவே மாட்டார்....

வாக்குறுதிகளை மட்டும் வாக்குகளைப் பெறுவதற்காக வழங்குவார் அவ்வளவுதான்- அதுதான் சந்திரிகாத்தனம்....

**செங்குட்டுவன்**

# கிளிநொச்சி தபால் ஊழியர்களின் கோரிக்கைக்குப் பதில் என்ன?

பாரபட்சம், அக்கறையின்மை, கண்டுகொள்ளாமை, ஒதுக்குதல், ஓரங்கட்டுதல் என்றெல்லாம் சொல்லப்படுகின்றதல்லவா, அது கிளிநொச்சி தபாலகத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கே முழுதாக நடந்திருக்கிறது.

பத்து, பன்னிரண்டு, பதின்னான்கு வருடங்களாக வேலை செய்கின்ற தபால் ஊழியர்களுக்கு இன்னமும் நிரந்தர நியமனமில்லை சம்பள உயர்வில்லை, அவர்களுக்கான பிற உரித்துகளில்லை சீருடையில்லை. இவையெல்லாம் இல்லையென்ற போதும் அவர்கள் தங்களுடைய சேவையை வழங்காமல் இருப்பதில்லை. அதிலும் இவர்களுடைய சேவை இன்னும் கூடுதலாகவே இருக்கிறது என்று கூடச் சொல்லலாம்.




ஒரு தபால் ஊழியருக்கு எட்டுக் கிராமங்கள். இன்னொருவருக்குப் பதினைந்து கிராமங்கள். டிப்போச் சந்தியிலிருந்து முறிப்பு வரையிலான எட்டுக் கிராமங்களை ஒருவர் சேவை செய்து முடிக்க வேண்டும். அடுத்தவருக்கு முறிகண்டியிலிருந்து டிப்போச் சந்தி வரையிலான ஒன்பது கிலோமீற்றர் தூரத்திலுள்ள பதினைந்து கிராமங்கள். இப்படி ஒவ்வொரு ஊழியருக்கும் நீண்ட தூரமும் பல கிராமங்களும் சேவைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த எல்லைகள் 1977 ஆம் ஆண்டு வரையறுக்கப்பட்ட பிறகு மீளாய்வு செய்யப்படவில்லை. அப்போது குடித்தொகையும் குறைவு கிராமங்களும் குறைவு. ஆனால், இப்பொழுது அன்றையைவிடப் பல மடங்காகிவிட்டன. குடித்தொகை என்கிறார்கள் ஒவ்வொரு நாளும் ஓடிக்களைத்துவரும் ஊழியர்கள்.

இப்படிக் கஸ்ரப்பட்டுக் களைத்துச் சேவை செய்தும் கூட எங்களுக்கான நிரந்தர நியமனத்தைத் தருவதற்கு இன்னும் தபால் துறை தயாராக இல்லை என்று அவர்கள் வருத்தத்தோடு சொல்கிறார்கள். பல தடவைகள் எல்லா உயரதிகாரிகளுக்கும் தங்களுடைய பிரச்சினைகளை எழுதியும் எடுத்துச் சொல்லியும் கூட இதுவரையிலும் எந்த முன்னேற்றமும் கிடைக்கவில்லை என்று சலிப்போடும் கோபத்தோடும் சொல்கிறார்கள் அந்த ஊழியர்கள்.

உண்மையில் அவர்களுக்காக யார்தான் கவலைப்படாமல் இருக்க முடியும்?

தினமும் எவ்வளவு தகவல்களைக் கொண்டு போய்ச் சேர்க்கிறார்கள் ஒவ்வொருவருக்கும். ஒரு கடிதம் கொண்டுவரும் ஒரு தகவல்தான் எங்களுடைய வாழ்க்கையை எப்படியெல்லாம் மாற்றியமைத்து விடுகிறது. மகிழ்வூட்டும் கடிதங்கள்,வேலை வாய்ப்புக் கடிதங்கள், பதவியுயர்வுக் கடிதங்கள், தொழில் விடயங்களைப் பகிர்ந்துகொள்ளும் கடிதங்கள், காதற்கடிதங்கள், வாழ்த்துச் சொல்லும் கடிதங்கள், பிரிவுத்துயரைப் பகிரும் கடிதங்கள், அழைக்கும் கடிதங்கள், கட்டளையிடும் கடிதங்கள், முறையிடும் கடிதங்கள் என்றெல் லாம் எத்தனை ஆயிரம் கடிதங்களைக் கொடுத்திருப்போம். ஆனால், எங்களுடைய கடிதங்களைப் பார்க்கவும் அவற்றுக்குப் பதில் சொல்லவும்தான் சம்பந்தப்பட்ட வர்களுக்கு முடிய வில்லை என்று வருத் தத்தோடும் ஏமாற்றத் தோடும் உருக்கமாகச் சொல்கிறார்கள் பாதிக்கப்பட்ட இந்த ஊழியர்கள். கிளிநொச்சித் தபாலகத்தின் நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நாற்பத்தியொரு ஊழியர்கள் தேவை என்கிறார் அங்குள்ள சிரேஷ்ட அதிகாரியொருவர். கிளிநொச்சி தபாலகத்திலிருந்து கோணாவில், அக்கராயன், திருவையாறு, வன்னேரிக்குளம், தருமபுரம், வட்டக்கச்சி, இராமநாத புரம், திருநகர், உருத்திரபுரம் என்று 35 கிலோமீற்றர் விஸ்தீரணமுள்ள தூரத்தை உள்ளடக்கிச் சேவை செய்யவேண்டி இருக்கிறது இந்த ஊழியர்களுக்கு. ஆனால், இப்போது நிரந்தர ஊழியர்களாக இருந்து வேலை செய்வோர் பதினேழு பேர்மட்டுமே. இருபது பேருக்கும் அதிகமானோர் நிரந்தர நியமனமின்றி பத்து வருடத்துக்கும் மேல் சேவையாற்றி வருகின்றனர்.



தங்களுடைய நிரந்தர நியமனத்தைக் கோரிக் கடந்த ஐந்து வருடத்துக்கும் மேலாகப் பல கடிதங்களைச் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கெல்லாம் பல தடவைகள் எழுதியும் யாரும் எந்தப் பதிலையும் தராமல் பெருத்த ஏமாற்றத்துடன் இருக்கிறார்கள் இந்த ஊழியர்கள். இதில் சில ஊழியர்களுக்கு இப்போது தான் நிரந்தர நியமனம் கிடைத்தாற்கூட அவர்கள் ஓய்வு பெறுவதற்கிடையிலான சேவைக்காலம் பத்துவருடங்களாகத்தானிருக்கும். அப்படியென்றால் தமக்கான ஓய்வூதியம் மிகமிகக் குறைந்தே வரும் என்று சொல்லும் அவர்கள் தாங்கள் மொத்தமாக இருபத்தைந்து வருடங்கள் வரையில் சேவை செய்தும் பத்து வருடங்கள் மட்டும்தான் ஓய்வூதியத்துக்கான சேவைக்காலமாக மதிப்பிடப்படும் என்பதையும் சுட்டிக்காட்டுகிறார்கள்.

உண்மைதான். சேவையைப் பெற்றுக்கொள்ளும் தரப்புகள் இந்த ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளையோ உரிமைகளையோ வழங்காமல் இருப்பதன் நோக்கமென்ன?

இவர்களுடைய பிரச்சினைகளைக் கேட்காமலும், பாராமலும் இருக்கும் பாரபட்சம் தானென்ன?

அரசாங்கம் இன அடிப்படையில் தான் இந்த ஊழியர்களின் விடயத்திலும் நடந்துகொள்கிறதா?

அமைச்சின் அதிகாரிகளும் பொறுப்பானவர்களும் இந்த ஊழியர்களைப் பற்றி என்னதான் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்?

தங்களுடைய பதவியுயர்வு, சம்பள உயர்வு, சலுகைகளைப் பெறல் என்று எல்லாவற்றிலும் கவலை கொண்டியங்கும் அதிகாரிகள் சாதாரண அடிமட்ட ஊழியர்களான எங்களுடைய விடயத்தை மட்டுமேன் அக்கறைப்படுத்தாமலிருக்கிறார்கள் என்று கேட்கும் இந்த ஊழியர்களின் கேள்விகளுக்கென்னதான் பதில்?

தங்களுடைய இதுவரையான எல்லாக் கோரிக்கைகளுக்கும் பின், இந்த ஊழியர்கள் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் மூன்று நாட்கள் கடமையிலிருந்து விலகி நிற்கும் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளார்கள். இந்தப் போராட்டத்தை இவர்கள் ஒரு மாத முன்னறிவித்தலுடனேயே செய்கிறார்கள். இந்தப் போராட்டம் வெற்றியளிக்காதவிடத்து எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் ஒரு வாரம் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை நிறுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கிறார்கள். இதனைத் தவிரத் தமக்கு வேறுவழியில்லை என்றுமவர்கள் சொல்கிறார்கள்.

இவர்களுடைய போராட்டத்திற்குத் தாமும் ஆதரவளிப்பதைத் தவிர வேறு மார்க்கமில்லை என்கின்றனர் இவர்களுடன் சக ஊழியர்களாகப் பணிசெய்துவரும் நிரந்தர நியமனம் பெற்றவர்கள். தமது ஆதரவுப் போராட்டத்தை வழங்குவதனூடாகவே இந்த ஊழியர்களுக்கான உரிமைகளைப் பெறமுடியும் என்றார் ஓய்வுபெறும் நிலையிலுள்ள ஊழியர் ஒருவர்.

யுத்தகாலத்தில், அதன் நெருக்கடிகளுடன், அகதி வாழ்வில், இடப்பெயர்வுகளிலெல்லாம் எங்களுக்கான ஒரேயொரு தகவல் ஊடகமாகவிருந்த தபால் வழிக்கு உதவிய இந்த ஊழியர்களின் வாழ்வாதாரப் பிரச்சினையை எவர்தான் மனங்கொள்ளாதிருக்க முடியும்?

**வெளிவாசல் பாலன்**




## 'எண்பா'வா? 'வெண்பா'வா?

உங்களால் ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்களை வைத்து வெண்பா பாடமுடியுமா? அன்று காளமேகப் புலவர் பாடியிருக்கிறாரே. இதோ அவரின் வெண்பா:-

ஒன்றிரண்டு மூன்றுநான் கைந்தாறு ஏழெட்டு ஒன்பது பத்துப் பதினொன்று - பன்னி இரண்டு பதின் மூன்றுபதி னான்குபதி னைந்துபதி னாறுபதி னேழுபதி னெட்டு.......

சரி இவ் வெண்பாவின் கருத்தென்ன? ஆராவது தமிழ்பண்டிதரிடம் கேட்டுப்பாருங்களேன்.....!

## ஒரு குட்டிக்கதை

### எடுபிடி

மழை 'சோ' வென்று பெய்தது. சும்மாயிருந்த தவளையைப் பார்த்து ஆமையானது அதோ பார்...நமது ஊருக்கு நேற்று வந்த அந்த மழை பாம்புக்குக் கொஞ்சமும் பயப்படாமல் எவ்வளவு சத்தம் போடுகிறது...பார்த்தாயா? இவ்வளவு காலமும் இங்கேயே வாழ்கின்ற நீ பாம்புக்குப் பயந்து ஊமையாக வாழ்கிறாயே! என்று உசார்ப் படுத்தி தவளையை சத்தம் போடத் தூண்டி விட்டது.

உசார் மடையனான தவளை உடனே சத்தம் போட்டுக் கத்தத் தொடங்கியது. தவளையின் சத்தத்தைக் கேட்ட பாம்பு தவளையிருக்கும் இடத்தை அடையாளம் கண்டு கொண்டு மெதுவாக வந்து அதைப் பிடித்துச் சாப்பிட்டு ஜீரணித்தது. அதுவரை பேசாமல் இருந்த ஆமையோ ஒன்றும் நடவாததமாதிரி தன்பாட்டில் நீரில் நீந்திச் சென்றது.

குளத்திலிருந்த மீன்களில் ஒன்று மற்றையதைப் பார்த்துச் சொன்னது-
"தட்டிவிட்டவன் தப்பி விட்டான்,
எடுபட்டவன் பிடிபட்டான்," என்று.

காசி ஆனந்தன்

## சங்கீத சர்ப்பம்

முன்னய காலத்தில் நாடகம் என்றாலே இசையும் நாட்டியமும் தான். வசனங்கள் இடம்பெறுவது அபூர்வம். ஒருநாள் அரிச்சந்திரர் நாடகம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்நாடகத்தைப் பார்க்க ஒரு வெள்ளைக்காரரும் வந்திருந்தார் தொடர்ந்து இசையுடனே நாடகம் போய்க் கொண்டிருக்கையில், அரிச்சந்திரனின் மகனைப் பாம்பு கடிக்கும் கட்டம் வந்தது பாம்பைக் கண்டதும் வெள்ளைக்காரர் பதற்றத்துடன் எழுந்தார். நாடகத்திற்கென தயாரிக்கப்பட்ட போலிப்பாம்பைக் கண்டு இப்படிப் பயப்படுகிறாரே என நினைத்தனர். ஒருவர் அதனை உண்மையான பாம்பல்ல என விளக்கமுயன்றார்.

அப்போது அந்த வெள்ளைக்காரர் நான் அதற்குப் பயந்து எழும்பவில்லை அந்தப் பாம்பு கடித்துவிட்டுப் பாடப் போகிறதா, பாடிவிட்டுக் கடிக்கப் போகிறதா என்று பார்ப்பதற்காகத்தான் எழும்பினேன் என்றாரே பார்க்கலாம்.

## சில துணுக்கு

ஆசிரியர்:- 'நான் ஒன்பது மணிக்கு நித்திரை விட்டு எழுந்தேன' இது என்ன காலம்?
மாணவர்:- இது மாசி மாதப்பனி மூசிப் பெய்யும் காலம்சேர்...!

ஒருவன்:- காகம் உண்மையில் தேசப்பற்றுள்ள பறவைதான்...!
மற்றவன்:- ஏன்.?
ஒருவன்:- பொம்பர் விமானங்களின் குண்டு வீச்சுக்குப் பயந்து அவை அந்நிய நாடுகளுக்கு புலம் பெயர்ந்து போகவில்லையே...!

## வாக்குறுதி

அரசியல் வாதிக்கு கடன் தந்தேன்.
ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை மட்டும்
மறக்காமல் வந்து
வாசலில் நின்று-
விரைவில் கடனைத்
தீர்த்து விடுகிறேனென்று- வாக்குறுதி மட்டும்
தவறாமல் தருகிறார்...

-ஜெயா பாரதிப்பிரியா-

பொறுக்கி

இசை இருக்கும் இடத்தில், விஷமம் இருக்க முடியாது. - மிகேல் தெ ஸெர்வான்டிஸ்

நேர்நோக்கு

# அரசியல் பலத்தை நிரூபிக்கச் சந்தர்ப்பம்

இலங்கையிலே வாழுகின்ற தமிழ் மக்களை அரசியல், பொருளாதார, இராணுவ ரீதியாக நசுக்கி அவர்களை இரண்டாம் தரப் பிரசைகளாக-அடிமைகளாக ஆக்க வேண்டும் என்பது சிங்கள பேரின வாதத்தின் குறிக்கோளாகும். இலங்கையின் ஆட்சி அதிகாரம் சிங்களப் பேரினவாதிகளின் கைகளில் கிடைத்தது முதல் அதற்கான நடவடிக்கைகளிலேயே அவர்கள் ஈடுபட்டு வந்தமை வெளிப்படையாகும்.

"சுதந்திர"இலங்கையில்-அதாவது பிரித்தானியர் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கி 285 தினங்களில் தமிழ்மக்களின் ஒரு பகுதியினராகிய மலையகத் தமிழரின் குடியுரிமையைப பறிக்க சட்டமூலம் கொண்டு வரப்பட்டது இதன் மூலம் சிறுபான்மை மக்களின் சனநாயகப்பலம் (வாக்குரிமை) குறைக்கப்பட்டது.

அத்துடன் தமிழ் மக்களின் நிலங்களை அபகரிக்கும் நோக்குடன் 1948/49ஆம் ஆண்டுகளில் அல்லை கந்தளாய், பதவியா, பட்டிப்பளை போன்ற தமிழ் மக்களின் விவசாய நிலங்கள் விவசாய அபிவிருத்தி என்ற பெயரிலே அபகரிக்கப்படத் தொடங்கின. இந்த அபகரிப்பு வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் தாயகம்' என்பதைச் சிதைக்கும் வகையிலான திட்டமிட்ட குடியேற்றங்களாக, நில ரீதியான தொடர்ச்சியை சிதைக்கும் நோக்கம் கொண்டதாக அமைக்கப்பட்டன. அத்துடன் தமிழர் பிரதேசத்தில் சிங்களவரின் வாக்குப் பலத்தை அதிகரித்து தமிழ்மக்களின் அரசியல் பலத்தைக் குறைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டவை அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களாகும்.

தமிழ்மக்களின் மொழியுரிமையை மறுக்கும் வகையில் 1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் சிங்களம் மட்டும் அரச கரும மொழியாக இருக்கும் வகையில் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது. இதற்கெதிராகவும்-தமிழ்மக்கள் தமது அரசியல் உரிமைகளை வலியுறுத்தியும் நடத்திய மென்முறைப் போராட்டங்கள் வன்முறையால் அடக்கப்பட்டன. இந்தப் போராட்டங்கள் அதனையும் மீறி வலுப் பெற்றபோதும், ஆட்சியமைக்க தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தேவை ஏற்பட்டபோதும் ஒப்பந்தங்கள் எழுதப்பட்டன. பின்னர் சிங்களத் தலைவர்களால் அவை கிழித்தெறியப்பட்டன.



1970ஆம் ஆண்டு தமிழ் மக்களின் உயர்கல்வியை பறிக்கும் வகையில் இனரீதியான தரப்படுத்தல் அறிமுகம் செய்யப்பட்டது. 1972இல் கொண்டு வரப்பட்ட சிறிலங்காவின் முதலாவது குடியரசு அரசியல் யாப்பு சிறுபான்மை மக்களுக்கு அரசியல் அமைப்பு ரீதியாக இருந்து வந்த சிறிய பாதுகாப்பையும் இல்லாது ஒழித்தது.

இவ்வாறு படிப்படியாக அனைத்து உரிமைகளும் பறிக்கப்பட்டபோது அவற்றுக்கு எதிராக தமிழ்மக்கள் நடத்திய மென்முறைப் போராட்டங்கள் அரசபடைகளினதும் சிங்கள இனவாதிகளினதும் வன்முறைகளால் ஒடுக்கப்பட்டதுடன், காலத்துக்குக் காலம் இனக்கலவரமென தமிழ் மக்களுக்கு எதிரான இனவன்முறைகளும் தூண்டிவிடப்பட்டன.

இதனையடுத்து தமிழ்மக்களின் போராட்டம் வன்முறைரீதியான போராட்டமாக உருவெடுத்தது. இளைஞர்களின் ஒப்பற்ற ஈகத்தினால் பெரு வளர்சி கண்ட இப் போராட்டமானது. இனவாதிகளின் கனவை அனைத்து வகையிலும் சிதைக்கத் தொடங்கியது. இப்போராட்டத்தைக் காரணம் காட்டி தமிழ்மக்கள் மீது எல்லையற்ற துன்பங்கள் சுமத்தப்பட்டபோதும் அவையெல்லாவற்றையும் தாங்கி ஒரே குறிக்கோளுடன் சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் தமிழ் மக்கள் நடத்திய போராட்டம் சிங்கள இனவாதிகளுக்கு பேரிடியைத்தந்துள்ளது.

இராணுவ ரீதியாக தமிழ்மக்களின் பலம் நிரூபிக்கப்பட்டுவிட்டது. அதன் காரணமாக சமரசம், சமாதானம், பேச்சுவார்த்தை என்ற ரீதியில் சிங்கள அரசியல் தலைவர்கள் இறங்கி வந்திருக்கின்றனர். தமிழ்மக்களின் உரிமைக்குரலை இராணுவரீதியாக நசுக்கிவிடமுடியாது என்பது உணர்த்தப்பட்ட நிலையிலேயே இப்போது சமாதான சூழ்நிலை பிறந்து இருக்கிறது. இப்போது அரசியல் ரீதியாக தமிழ்மக்கள் தங்களுடைய பலத்தைக் காட்டவேண்டிய ஒரு சூழ்நிலை தோன்றியுள்ளது.

சிறிலங்காவின் அதிகார வர்க்கம், சிறிலங்காவின் நலன் கருதிக் கூட ஒன்றுபட்டுச் செயற்படமுடியாத அதிகாரப் போட்டியொன்றில் சிக்கிக்கொண்டுள்ளது. இதன் காரணமாக சிறிலங்காவின் ஓர் அதிகார மையமாகிய நாடாளுமன்றம் அற்ப ஆயுளைக் கொண்டதாக உறுதியற்ற ஒன்றாக மாறியுள்ளது.

சிறிலங்காவை உறுதியான செயற்பாடுகள் மூலம் அபிவிருத்தி செய்யவோ கடந்த கால யுத்தப் பின்னடைவுகளிலிருந்து மீட்கவோ முடியாத அளவுக்கு ஏன் சிறிலங்காவின் அனைத்து நடவடிக்கைகளும் செயலிழக்கும் அளவுக்கு இந்த அதிகாரப் போட்டி அமைந்திருக்கின்றது. இந்த அதிகார வர்க்கத்திடம் சிறிலங்கா மக்கள் வர்த்தக சமூகம், சர்வதேச சமூகம் என அனைத்துத் தரப்புமே நம்பிக்கையிழக்கும் சூழ்நிலை தோன்றியிருக்கிறது.

ஆனால் தமிழ்பேசும் மக்கள் அரசியல் ரீதியாக பலம் பெற்று வருகின்றனர். மலையக மக்களின் பறிக்கப்பட்ட வாக்குரிமையை மீண்டும் வழங்க வேண்டிய சூழல் ஏற்பட்டிருக்கின்றது. தமிழ்மக்கள் ஒரே தலைமைத்துவத்தின் கீழ் ஒன்றுபட்டிருக்கின்றார்கள்.

சிங்கள இனவாதிகள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சிறிலங்காவின் ஆட்சியாளரைத் தீர்மானிக்கும் சக்தியாக தமிழ்பேசும் மக்கள் மாறியுள்ளனர். இது இனவாதிகளை பெரும் விரக்திக்குள் தள்ளியுள்ளது. இதுவே பௌத்த துறவிகளின் நேரடி அரசியல் பிரவேசத்திற்குக் காரணமாக அமைந்துவிட்டது.

இந்தப் பிரவேசம் இனவாதிகளின் பலத்தை மேலும் சிதைக்கும் என்பதே இன்று சிறிலங்காவின் கவலைக்கு உரிய ஒன்றாக மாறியுள்ளது. இதன் காரணமாக பௌத்த துறவிகளைத் தேர்தல் களத்திலிருந்து அகற்றும் முயற்சிகளில் பலர் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

இந்நிலையில் தமிழ் மக்கள் தமது அரசியல் பலத்தை தமது உறுதிப்பாட்டை சர்வதேச சமூகத்திற்கு அவர்களுக்கு விளங்கும்- அவர்கள் ஏற்றுக்கொள்ளும் பாணியில் நிரூபிக்கக்கூடிய சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. 1977ஆம் ஆண்டுக்குப் பின்-அதாவது 27 வருடங்களுக்குப் பின் உகந்த ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதனைச் சரிவரப் பயன்படுத்தும் வகையிலான ஆற்றல் தமிழ் மக்களுக்கு நிச்சயம் உண்டு.

வேலவன்

# துயரம் இன்னும் தொடருமா...?

இலங்கை இந்திய மீனவர்களுக்கு இடையில் கடலில் நடைபெறும் மோதல்க்ள் தொடர்ந்தவண்ணமேயுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக பலமுறை ஊடகங்களின் முக்கியத்துவத்தைப் பெற்று அது இரண்டு நாடுகளுக்குமிடையிலான அரசியல் மட்ட பிரச்சினையாகக் கூட சென்ற போதும் இன்னமும் அதற்கான தீர்வு மட்டும் கிட்டவேயில்லை.

இதன் ஓர் அம்சமாக கடந்த திங்கட் கிழமை பருத்தித்துறைக் கடற்பரப்பில் அத்து மீறிய இந்திய மீனவர்கள் யாழ் மீனவர்கள் மீது வாள் வெட்டுத்தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலால் யாழ் மீனவர்களில் இருவர் படுகாயமடைந்ததுடன் ஒருவர் காணாமலும் போயிருந்தார்.

இந்த நிலையில் இந்த சம்பவம் ஒன்றை புலப்படுத்துவது போலுள்ளது. அதாவது இந்திய மீனவர்கள் வட பகுதிக்கடற்பரப்பிலிருந்து கிடைக்கும் வளங்களை வன்முறையைப் பிரயோகித்தாவது தாங்கள் கொண்டு செல்வதில் குறியாக உள்ளனர் போன்றுள்ளது.

இதேபோல் முன்னொரு முறை மன்னார் கடற்பரப்பில் இத்தகைய ஒரு சம்பவம் நடைபெற்ற போது இந்திய மீனவர்கள் இதனை பேசி தீர்க்க வேண்டிய விடயம் எனவும் இனிமேல் இத்தகைய சம்பவம் நடைபெறாது எனவும் தெரிவித்திருந்தனர்.

ஆனால் இந்த சம் பவத்திற்குப் பின்னர் பலமுறை இந்திய மீனவர்கள் வடபகுதி கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்ததுடன் வட பகுதி மீனவர்களால் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.



இவ்வாறு கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் யாழ் சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருந்தபோது அண்மையில் இந்திய தூதரகத்திலிருந்து வருகைதந்த அதிகாரிகள் உண்ணாவிரதத்தை முடித்துவைத்து விட்டு சென்ற சில நாட்களுக்குள்ளேயே இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது.

தொடரும் இந்தச் சம்பவத்தை அவதானிக்கும் போது இந்திய மீனவர்களின் அத்துமீறல் என்பது ஏதோ. ஒரு அரசியல் பின்னணியிலேயே நடைபெறுவது போன்றுள்ளது.

இல்லாவிடின் வட பகுதி மீனவர்களின் கடும் எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் அவர்களால் எவ்வாறு துணிந்து மீண்டும் மீண்டும் இலங்கைக் கடற்பரப்பிற்குள் உள் நுழைகின்றார்கள் என்பது சந்தேகமாகவே இருக்கின்றது. அத்தோடு இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு பலமான அரசியல் சக்தியின் பின் பலத்தோடேயே நடைபெறுகின்றது. என்ற சந்தேகத்தை பலதரப்புகளாலும் பலமுறை சந்தேகம் கிளப்பப்பட்டுள்ளதை நாம் அவதானிக்கலாம்.

இதனை மேலும் சந்தேகத்திற்கிடமாக்கும் முறையி லேயே இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்டுள்ள இரு நாடு களான இலங்கையும், இந்தியாவும் நடந்துகொள்கிறது என்பதை புரிந்துகொள்ளலாம்.

இங்கு வேதனையான விடயம் என்னவென்றால் இந்திய மீனவர்களால் சொத்து ரீதியாகவும், பாதுகாப்பு ரீதியாகவும் பாதிக்கப்படுவது பல ஆண்டு காலமாக யுத்தத் தின் கோரப் பிடியிலிருந்து தற்போதுதான் விடுபட்டு நின் மதிப்பெருமூச்சுவிட எத்தணிக்கும் தமிழ் மீனவர்கள் என்பதுதான்.

இந்த நிலையில் இந்த மீனவர்கள் எதிர்நோக்கும் இப் பாரிய பிரச்சினைக்கு இன்னும் எந்தத் தரப்பிலிருந்தும் தீர்வு கிடைக்கவில்லை என்பதுதான்.

பெரும் எண்ணிக்கையில் தமிழ் மீனவர்களின் கடற்பரப்பிற்குள் உள் நுழையும் இந்திய மீனவர்கள் முதலில் தொழில் வளங்களைத்தான் அபகரித்துச் சென்றார்கள். ஆனால் இப்போது உயிரையும் சேர்த்து அபகரித்துச் செல்ல முற்படுகின்றார்கள் போன்றுள்ளது.

ஆகவே இந்த பிரச்சினைக்கு இலங்கை இந்திய அரசுகள் உரிய தீர்வை எட்டுவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதற்கான முயற்சியினை இலங்கையில் இயங்கும் இந்திய தூதரகம் மேற்கொள்வது அவசியமாகும்.

ஆனால் அவ்வாறு எத்தகைய செயற்பாடுகளிலும் ஈடுபடுபவர்கள் போல் தெரியவில்லை.

ஏனென்றால் இலங்கையில் நடைபெறும் மேற்குலக நாடுகளின் ஆதரவுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகள் இந்தியா ஒரு விதமான ஐயத்துடனேயே நோக்கிவருகிறது.

அவ்வாறான இந்தியாவின் நோக்கத்திற்கு இலங்கையிலிருந்து நேரடித் தொடர்புடைய ஒரு சர்ச்சையை இந்தியா பேணிக்கொள்ள விரும்புகிறது போலுள்ளது.

இந்தியாவின் இந்தப் போக்கினால் பாதிக்கப்படுவது மீனவர் சங்க தலைவர் குறிப்பிட்டது போல இருபது வருட காலமாக ஆழ்கடலுக்குள் வந்து மீன்பிடித்தொழிலில் ஈடுபடமுடியாது இருந்த வட பகுதி தமிழ் மீனவர்கள் தான்.

இந்த நிலையில் வடமராட்சி கிழக்கு மீனவர் சங்க சமாசத்தினர் மேற்கொண்ட எதிர்ப்புப் போராட்டத்தின் தாற்பரியத்தை புரிந்துகொண்டு அவர்களுக்கான நீதியான தீர்வு கிட்ட உரியவர்கள் வழிசெய்ய வேண்டும்.

நக்கீரர்

சமூகத்தில் அமைதியும் செழிப்பும் நிலவச் செய்யும் குறைந்த ஆட்சியே, சிறந்த ஆட்சி. - வில்லியம் சேனிங்

# வர்த்தக உலகில் விளம்பரம்

வியாபாரத்திற்கு அழகு விளம்பரம் செய்தல் என்ற கூற்றின் சாதக பாதக விளைவுகளை இங்கு நோக்குவோம். நுகர்வோர் மத்தியில் ஒரு பொருள் அல்லது சேவை பற்றிய விழிப்பை ஏற்படுத்திக் கொள்வனவைத் தூண்டுவதற்கு விளம்பரம் தேவைப்படுகிறது. நல்ல பொருளுக்கு விளம்பரம் தேவையில்லை என்று கருதுவது தவறு. தரமற்ற பொருட்களின் விற்பனையை தீவிர விளம்பர நடவடிக்கை மூலம் பெருக்க முடியும். தரத்தில் சிறந்த பொருட்கள் விளம்பரமின்றி விலை போகாமல் முடங்க நேரிடும். நுகர்வோரின் கொள்வனவுத்தீர்மானங்கள் விளம்பரங்களால் நிர்ணயிக்கப்படுகின்றன. கடன் பட்டேனும் கொள்வனவு செய்யவேண்டும் என்ற மன நிலையை நுகர்வோர் மத்தியில் ஏற்படுத்துவதே விளம்பரத்தின் இறுதி நோக்கம்.

நவீன வர்த்தக ஒழுங்கில் சந்தைப்படுத்தல் முதலிடம் வகிக்கின்றது. சந்தைப்படுத்தலின் துணைக்கருவியாக விளம்பரம் இடம்பெறுகின்றது. கடந்த காலத்தில் வர்த்தகத்தின் இலக்கு வாடிக்கையாளர்களின் தேவைகளை அடையாளம் கண்டு அவற்றை திருப்திப் படுத்துவதாக இருந்தது. இன்று நிலைமை மாறி விட்டது. தேவைகளை அடையாளம் காண்பதற்குப் பதிலாக தேவைகளை உருவாக்குவதே நவீன வர்த்தக ஒழுங்கின் குறியாக இருக்கின்றது. கூடுதலான எண்ணிக்கையில் தேவைகளை உருவாக்கி, கூடுதலான எண்ணிக்கையில் விற்பனை செய்து, கூடுதலான இலாபம் ஈட்டுவதே நவீன வர்த்தக ஒழுங்கின் இலக்காக இருக்கிறது இவ்வாறான இலக்கை சந்தைப்படுத்தல் (MARKETING) என்ற கலைச்சொல் வெளிப்படுத்துகின்றது.

விளம்பரத்தின் முக்கியத்துவத்லதை சந்தைப்படுத்தல் பின்னணியில் நோக்க வேண்டும். விளம்ரம் ஒரு விற்பனை உபாயம் மாத்திரமல்ல அதுவோர் தொடர்பாடல் கருவியும் கூட நுகர்வோருடன் நெருக்கத்தை ஏற்படுத்தாத விளம்பரம் தோல்வி அடைகின்றது. நேர்த்தியாக உருவாக்கப்பட்ட விளம்பரம் நுகர்வோரின் கவனத்தை ஈர்க்கின்றது. அதுமாத்திரமல்ல விளம்பரத்தோடு தன்னை இணைக்கும் அளவிற்கு நுகர்வோர் மீது அது பாதிப்பை ஏற்படுத்த வேண்டும். விளம்பரங்கள் நுகர்வோர் மத்தியில் உளவியல்த் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. விளம்பரம் செய்யப்பட்ட பொருள் தனக்குச் சொந்தமாகாவிட்டால் தனது வாழ்க்கை அர்த்தமற்றதாகிவிடும் என்று நுகர்வோா எண்ணுமளவுக்கு விளம்பரங்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன.

விளம்பர முன்னெடுப்பை ஒரு இராணுவ நடவடிக்கைக்கு நிகரான தந்திரோபாயமாக விளம்பரங்களைக் கையாள்வோர் கருதுகின்றனர். இத்தொடர்பில் ஐந்துவகைக் கோட்பாடுகளை அவர்கள் வகுத்துள்ளனர். முதலாவதாக விளம்பரத்தின் அடிப்படை நோக்கம் என்னவென்ற வினாவை அவர்கள் எழுப்புகின்றனர். புதிய வாடிக்கையாளர்களை உருவாக்கப் போகின்றீர்களா அல்லது ஏற்கெனவே உருவாகியுள்ள வாடிக்கையாளர்களைக் கூடுதலாக கொள்வனவு செய்வதற்கு தூண்டப் போகிறீர்களா என்ற விடயம் தீர்மானிக்கப்படவேண்டும். புதியவர்களை உருவாக்க வேண்டுமாயின் விளம்பரம் புதிய கோணத்தில் அனுக வேண்டும். அதேபோல் எந்த ரக வாடிக்கையாளர்களை இலக்கு வைத்துள்ளீர்கள் என்பதையும் தீர்மானிக்க வேண்டும். அதாவது யாரை நோக்கி விளம்பரம் செய்கிறீர்கள்.

மத்திய தர வகுப்பினராக இருந்தால் அதற்கு ஏற்ற விதத்தில் விளம்பரம் வடிவமைக்கப்பட வேண்டும். மேட்டுக்குடியினராக இருந்தால் அவர்களுடைய வாழ்க்கை முறை, பொழுது போக்கு,பண்பாட்டு நடைமுறைகள் என்பனவற்றை இனம்




கண்டு அவற்றை உள்ளடக்கி விளம்பரம் தயாரிக்கப்பட வேண்டும். விளம்பரம் செய்யப்படும் பொருளின் விசேட தன்மைகளையும் அதைக் கொள்வனவு செய்வது மூலம் நுகர்வோர் பெரும் அனுகூலங்களையும் விவரிக்கவேண்டும். வாகனங்களாக இருப்பின் விற்பனைக்குப் பின் வழங்கும் இலவச அல்லது சலுகை அடிப்படைச் சேவைகளையும் விளம்பரத்தில் தெரிவிக்க வேண்டும். உத்தரவாதங்களை அளிக்கும் போது மேற்பார்வைக்கு இறுக்கமான மொழியில் ஆனால் தேவை ஏற்பட்டால் நளுவக்கூடி விதமாக அமைக்க வேண்டும். உத்தரவாதங்கள் சம்மந்தமாக நுகர் வோர்கள் நீதிமன்றம் செல்ல நேரிடின் இது மிகப் பெரிய வரப்பிரசாதமாக அமையும்.

இறுதியாக விளம்பரத்தை எந்த வகை ஊடகத்தில் போட வேண்டும் என்ற தீர்மானம் தேவைப் படுகின்றது. அச்சு ஊடகங்கள், வானொலி, தொலைக்காட்சி போன்ற இலத்திரனியல் சாதனங்கள் இருக்கின்றன உலகலாவிய செயற்பாடுகளைக் கொண்டபாரிய பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள் இணையத்தில் பிரத்தியேகமானதளங்களை உருவாக்கி விளம்பரம் செய்கின்றன. தெருவோரத்தில் விளம்பரப் பலகைகளை உயரமான கம்பங்களில் பொருத்தி விளம்பரம் செய்யும் வழமை இன்று பரவலாக காணப் படுகின்றது. இவை பில்போட்ஸ் (BILLBOARDS) என்று அழைக்கப் படுகின்றன. சிறிய விளம்பரக் கைத் துண்டுகளை அச்சடித்து விநியோகிக்கும் வழமையும் உண்டு பதாதைகளைக் கட்டுதல் இன்னுமோர் வகை விளம்பரமாக இடம்பெறுகிறது.

விளையாட்டுப் போட்டிகளுக்கு பெருந்தொகை நிதி உதவி வழங்கி விளம்பரம் தேடும் நடைமுறையை சிறிலங்காவில் காணலாம். டில்மா என்ற தேயிலை விற்பனை செய்யும் நிறுவனம் கிரிக்கெற்விளையாட்டுக் கட்டுப்பாட்டுச் சபைக்கு இவ்வகை நிதியை வழங்குகின்றது. சிறிலங்கா கிரிக்கெற் வீரர்கள் தமது சீருடையில் DILMAH என்ற தேயிலைக் கொம் பனியின் பெயரை விளையாடும் போது வைத்திருப்பார்கள். தொலைக் காட்சிகளில் விளையாட்டுக்கள் காண்பிக்கப்படும் போது டில்மாவுக்கு அதியுச்ச விளம்பரம் கிடைக்கின்றது. டில்மா விற்பனை செய்யும் தேயிலைப் பொதிகளில் ஒரு வித்தியாசமான விளம்பரப் படம் காணப்படுகின்றது. தேனீர்க் கோப்பையின் நடுவே ஒரு கிரிக்கெற் பந்து மிதக்கும் படம் ஒவ்வொரு தேயிலைப் பக்கேற்றிலும் பொறிக்கப்பட்டுள்ளது.

ஊடகங்களும் விளம்பரதாரர்களும் நகமும் சதையும் போல் இணைந்து செயற்படுகின்றன. விளம்பரதாரரின் வசதிக்கேற்ப ஊடகத்துறை வளைந்து கொடுக்கின்றது. விளம்பரம் இல்லாவிட்டால் வியாபாரம் இல்லை என்பதற்கு ஒப்பாக விளம்பரம் வராவிட்டால் பத்திரிகைகளுக்கு இலாபம் இல்லை என்ற நிலை நிலவுகின்றது.வானொலி, தொலைக்காட்சி என்பனவும் பெருமளவில் விளம்பரங்கள் மூலம் கிடைக்கும் வருவாயில் இயங்குகின்றன. நுகர்வோரைக் கவரும் விதத்தில் விளம்பரங்களைத் தயார் செய்வதற்கு ஊடகங்களுக்கு அவகாசமோ, அதற்குரிய பயிற்றப்பட்ட திறமையோ இருப்பதில்லை. இதற்காக ஒவ்வொரு வகைத் தேவைக்கும் உகந்த விளம்பரங்களைத் தயாரிக்கும் நிறுவனங்கள் உலக நாடுகள் அனைத்திலும் காணமுடிகின்றது. இவை ADVERTISING FIRMS என்று அழைக்கப்படுகின்றன.

விளம்பர உருவாக்கத்திற்கு சந்தை வாய்ப்புக்கள் பற்றிய




ஆராட்சிதான் முக்கிய அடித்தளமாக அமைகின்றது. தமிழீழத்தில் விற்பனையாகும் பத்திரிகைகளில் பல்வேறு உந்துருளி விளம்பரங்கள் இடம் பெறுகின்றன. எமது பகுதிகளில் இவ்வகை ஊர்தி வியாபாரத்திற்கு வாய்ப்பு இருப்பதை உணர்ந்து விளம்பரம் செய்கின்றார்கள். மகிழுந்து விற்பனை வாய்ப்புக்கள் அரிதாக இருப்பதால் தமிழீழப் பத்திரிகைகளில் இது சம்மந்தமான விளம்பரங்கள் வருவதில்லை. காற்றுள்ள போது தூற்றிக்கொள் என்ற பழமொழியை இவ்விடத்தில் நினைவு கூறலாம். சந்தை பற்றிய ஆய்வுகளை சிறிலங்காவின் சந்தை வாய்ப்பு பற்றிய ஆராட்சி நிறுவனம் மேற்கொள்கின்றது. இதன் ஆங்கிலப் பெயர் SRI LANKA INSTITUTE OF MARKETING சுருக்கப் பெயர் (SLIM).

சிறிலங்காவில் உள்ள விளம்பரங்களைத் தயாரிக்கும் நிறுவனங்களை தரப்படுத்துவதோடு, சிலிம் நிறுவனம் வருடா வருடம் ஊக்குவிப்புப் பரிசில்களையும் வழங்குகின்றது. லியோ போ்னெற் என்ற அமெரிக்க விளம்பர நிறுவனம் சிறிலங்கா, இந்தியா, நேபாளம், பங்களாதேசம் ஆகியவற்றில் கிளை பரப்பியுள்ளது. சென்ற வருடம் தரப்படுத்தலில் கிரான்ற் மெக்கான் எறிச்சன் (GRANT McCANN ERICKSON) என்ற விளம்பர நிறுவனம் சிலிம் வழங்கிய முதற் பரிசை வென்றுள்ளது லின்ராஸ்(LINTAS),பீனிக்ஸ்




(PHOENIX) என்பன கொழும்புவின் பிற விளம்பர நிறுவனங்களாகும். தொழில்சார் நிபுணர் பார்வையில் விளம்பரம் சந்தை வாய்ப்பில் தங்கியுள்ளதைப்போல், சந்தை வளர்ச்சியில் விளம்பர நிறுவனங்களின் விரிவு தங்கியுள்ளது.

விளம்பரங்களில் பல உள் ரகசியங்கள் பொதித்துள்ளன. ஒரு விளம்பரத்தைப் படிக்கும் போது பெரிய எழுத்துக்களிலும் பார்க்கச் சிறிய எழுத்துக்களில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்பனையாகும் வாகனத்தின் விளம்பரத்தில் மிகச் சிறிய எழுத்தில் 'சாதாரணத் தேவைக்கு அல்லது வழமையான

அன்பரசு

தேவைக்குப் பாவிக்கப்படும்போது' என்ற வாசகமோ அதைப்போன்ற வாசகமோ இருக்கலாம். இது கிட்டத் தட்ட ஒரு மோசடி போன்று இருந்தாலும்,பரவலாகக் காணப்படும் வழமை உண்டு. அடுத்ததாக பொருளின் விலையை விளம்பரத்தில் குறைத்துப் போடுவார்கள். கொள்வனவு செய்வதற்குப் போனால் உண்மையான விலை கூடுதலாக இருக்கும். மலிவு விற்பனை விளம்பரமும் இதேவகையைச் சேர்ந்தது. இடத்தைக் காலி செய்வதற்காகவே மலிவு விற்பனை மேற்கொள்ளப்படுகின்றது. சில நிறுவனங்கள் செயற்கையான தட்டுப்பாடுகளை உருவாக்குவார்கள். களஞ்சியத்தில் இருக்கும் தயாரிப்பை சந்தைக்கு விடமாட்டார்கள். இப்போது நாம் எமது தயாரிப்புச் சம்மந்தமான ஆய்வு கூட ஆராட்சியில் ஈடுபடுகிறோம், மிக விரைவில் சந்தைப் படுத்துவோம் என்று விளம்பரம் செய்வார்கள். புதிய வெளிப்புற பொதியுடன் பழைய பொருள், உயர்த்தப்பட்ட விலையுடன் சிறிது காலத்தின்பின் வெளிவரும்.

வாடிக்கையாளர்களின் நெடுங்கால நன்மதிப்பைப் பெற்ற சில பொருட்கள் குறைந்தளவு விளம்பரத்துடன் சிற்பனையாவதைக் காணலாம். இதற்கு உதாரணமாக முதலை மார்க் தெருவேலை மண்வெட்டி, தவளை மார்க் கோடாரி என்பவற்றைக் குறிப்பிடலாம். இவை இங்கிலாந்தின் சில்லிங்ரன் நிறுவனத்தால் தயாரிக்கப்படுகின்றன. சிறிலங்கா சந்தையில் போலி முதலை மண்வெட்டிகள் இப்போது விற்பனையாகின்றன. முதலை அடையாளம் அதில் இருக்கும் ஆனால் முதலையின் தலையில் ஒரு கிரீடம் வைக்கப்பட்டிருக்கும். அல்லது முதலையின் வால்பகுதி தூக்கியபடி இருக்கும். முதலை அடையாளம் சம்மந்தமான உரிமைச்சட்டங்களில் பிடியில் இருந்து தப்புவதற்காக இந்த மோசடியைச் செய்கின்றார்கள். அத்தோடு இதுதான்உண்மையான பொருள் என்று விளம்பரம் செய்கிறார்கள். நுகர்வோர்தான் கவனமாக இருக்கவேண்டும்.

இலங்கை தேயிலை உற்பத்திக்கு பிரசித்தமானதுஉலகின் மிகக் கூடுதலான தேயிலையை ஏற்றுமதி செய்யும் நாடு இலங்கையாக இருப்பினும் மிகக் கூடுதலான தேயிலையை தயாரிக்கும் நாடாக இந்தியா விளங்குகின்றதுபெருமளவு உற்பத்தியை இந்தியா தனது சொந்தத் தேவைக்குப் பயன்படுத்துகின்றபடியால் ஏற்றுமதி குறைவாக இருக்கின்றது. 1972 வரை இலங்கை சிலோன் (CEYLON) என்று அழைக்கப்பட்டது, அதே வருடம் சிறிலங்கா என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஆனால் இற்றைவரை இலங்கைத் தேயிலை“சிலோன் ரீ” என்று தான் விளம்பரம் செய்து விற்பனையாகிறது. சிறிலங்கா ரீ என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டால் விற்பனை குறையும் என்பதுஉறுதி. இதை BRAND RECOGNITION என்று கூறுவார்கள். அதாவது வழக்கப்பட்ட வர்த்தகப் பெயர் தனது விளம்பரமாக அமைகின்றது என்று பொருள். இதே போலத்தான் கொக்கக்கோலா என்ற மென்பானத்தின் பெயரும்.

அண்மைக்காலமாக பல உலக நாடுகள் தேயிலை உற்பத்தியில் இறங்கிவிட்டன. இதனால் பலமான போட்டியை இலங்கை சந்திக்கின்றது.தென் இந்திய மானிலங்கள், வியற்நாம், சீனா போன்ற நாடுகளில் இருந்து மிக மிக மலிவான விலையில் தரம் குறைந்த தேயிலை ரகங்களை சிறிலங்கா இறக்குமதி செய்கின்றது. இறக்குமதி செய்யப்பட்ட தேயிலை ஏற்றுமதியாகும் தேயிலையுடன் மிகவும் திறமையாகக் கலக்கப்படுகின்றது. இந்த முறையில் போட்டியைச் சமாளிக்கச் சிறிலங்கா முயல்கின்றது.தேயிலை பற்றிய சிறிலங்காவின் விளம்பரத்தில்சுத்தமான சிலோன் தேயிலை (PURE CEYLON TEA) என்ற சொற்கள் காணப்படுகின்றன. இது உண்மைக்குப் புறம்பான செய்தி என்பது வெளிப்படை.

இன்றய சந்தைப் பொருளாதாரத்தில் விளம்பரம் மேலாதிக்கம் செலுத்துகின்றது. முன்னொரு காலத்தில் சந்தையை நுகர்வோர் கட்டுப்படுத்தினர் இப்போது தயாரிப்பாளர்கள் விளம்பரத்தின் ஊடாக நுகர்வோரைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர்.

இல்லாததை அறிவதை விட, எதுவுமே அறியாமல் இருப்பதே மேலானது. - ஜோஷ் பில்லிங்ஸ்

# ஒரு அன்னையின் மனோபலம்

**இ. கபிலன்**



தம்பலகமம் சிற்பித் திடல் வயல் நிலங்களில் மாடுகள் இரண்டும் இழுக்கும் ஏரை உழவர்கள் அழுத்தி உழுதுவரும், பின் விதை விதைப்பதுமான இயல்பான வாழ்க்கை.

விதைத்த விதைகளின் நிமிர்வால் வயல் நிலங்கள் இளம் பச்சை வர்ணங்களால் உருமறைப்பாக, தென்னை மரங்களின் உயர்வால் ஊரின் கூரை கரும் பச்சையாக இருக்க அதனுள் வாழ்விடங்கள் அமைந்திருக்கும் காட்சியானது பார்ப்பவர்களை மெய்மறக்கவே செய்யும்.

ஊரின் விளிம்பில் கன்னாக் காடுகள் அக்காடுகள் போரின் கோரத்தை அனுபவித்தவைகள். இம் மக்களது, போராளிகளது உயிரைப் பாதுகாத்தவைகள்.

சிறு குடாக்கடல் கன்னாக் காடுகளின் உயிர்ப்புக்குத் துணை நிற்பது போல் மக்களது சிறு மீன் பிடித் தொழிலுக்கும் துணை புரிகின்றது.

இவ்வளமிக்க ஊரில் மக்கள் இயல்பாக வாழ்ந்து வருபவர்கள். எந்தவித போலித்தனமும் அவர்களது தமிழ்த் தேசிய அரசியலில் காட்டியதில்லை. அந்த ஆத்மார்த்த அத்திவாரத்தின் மீது நின்று இயங்குபவர்கள்.

அத்தகைய தமிழ்ப் பற்றுள்ள மக்கள் கூட்டத்தினுள்தான் சௌந்தரம் அம்மா கணவன் தியாகராசா இரண்டு பெண்பிள்ளைகள், மூன்று ஆண்பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்தார்.

கடைசி மகள் சத்தியா பிறக்கும் நாள் அண்மிக்கும் தறுவாயில் கணவனைப் பிரிந்து வாழ வேண்டிய நிலை உருவாக, பின் மன ஒற்றுமைக்கான எந்தவொரு சந்தர்ப்பமும் இல்லாத நிரந்தரப் பிரிவாகவே அது அமைந்தது.

ஆறு பிள்ளைகளையும் வளர்த்தெடுக்க வேண்டிய நிலையில் வறுமையின் நிழல் அம்மாவின் வாழ்க்கை மீது படரத்தொடங்கியது.

ஆனாலும், அம்மா தளரவில்லை. தடுமாறவில்லை. தன் நெஞ்சில் உரம் போட்டமாதிரி சொந்த உழைப்பில் காலூன்றி வாழ ஆரம்பித்தார்.

அவரின் உடலின் எலும்புகள் சதையால் போர்க்கப்பட்டாலும் எலும்புகள் வெளிப்படும் ஒல்லியான உடல், அம்மாவின் உழைப்பு முயற்சியாற்றல் அவரது பிள்ளைகளுக்கு உறவினர்களுக்கு அளவற்ற உற்சாகத்தை அளித்தது.

அம்மா வீட்டைப் பேணுகின்ற மனைவி என்கிற நிலையிலிருந்து குடும்பப் பொறுப்பை ஏற்று நடாத்தும் தன் நம்பிக்கையுள்ள குடும்பத் தலைவியாக சமூகத்தினுள் திகழ்ந்தார்.

வாழ்க்கையின் ஏழ்மை பலரைப் பொருளீட்டத் துரத்திக்கொண்டிருக்கின்றது. இந்தத் துரத்தல்கள் கண் காணாத் தேசம் வரை கொண்டு செல்கிறது. ஆனால், அம்மா சொந்த மண்ணில் இடித்த அரிசிமாவைத் தன் தலையில் சுமந்து திருமலை நகர் சுற்றி வியாபாரம் செய்தும், பிற சிறு வியாபாரங்களைச் செய்தும் தம் ஏழ்மையைச் சமநிலைப்படுத்தி வாழக்கூடிய கௌரவமான வாழ்வியல் முறையை அமைத்துக் கொண்டார்.

யாருக்கும் ஒரு கெடுதியும் விளைவிக்காமல் எத்தகைய இன்னல்கள் வந்த போதும் அம்மா மனம் சலியாது நேர்மையான உழைப்பில் ஈடுபட்டுத் துன்பமே துன்பத்திற்குள்ளாகிவிடும் நிலையை ஏற்படுத்தினார்.

அம்மா ஓய்வாக இருக்கும் போது ஏழ்மைக்கு உரித்தான அவ்வீட்டு நிலத்தில் தன் சேலைத் தலைப்பை விரித்துக் கைமடியில் தலைவைத்துப் படுத்திருப்பார். இப்படி வாழ்ந்து வரும் போதுதான் அம்மாவின் வாழ்க்கையிலும் மறக்க முடியாத ஒரு படலம் ஆரம்பமாகியது. மகத்தான ஒரு போராட்டத்தில் பங்காற்றவேண்டி நேர்ந்தது.

அதாவது ஈழத்தமிழர்கள் தங்களின் இருப்புக்கான உரிமைக்காகத் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்யும் ஒரு விடுதலை வேள்வியில் தங்களை இணைத்துக்கொண்ட காலமாக 83 மாறியது.

லெனின் சித்தாந்தக் கருத்துவிதைகள் ஊர்மக்களது மனங்களில் ஆழமாக விதைக்கப்பட்டதனால் அக்கொள்கை சார்ந்த அரசியல் குழு மீது ஈர்க்கப்பட்ட மக்களாக இருந்தார்கள்.

இது இப்படி இருக்க விடுதலைப்புலிகளின் கருத்துப் பரம்பல், தாக்குதற் செயற்பாடுகள் தீவிர நிலைக்கு வரவும், போராளிகளான சரோன், சந்தர், அலோசியஸ், விக்கி, மது, பரமன், பரதன், வரதன், அன்சார், குணம், வசந், விசு, ரெஜி, இந்திரன், சுதர்சன் ஆகியோரது மக்கள் உறவு மேம்படவும் அம்மக்கள் மனங்களில் புலிகள் சார்ந்த அரசியல் வேரூன்ற ஆரம்பித்தது.

அம்மாவின் மகன் மணாளனாகவும், நெருங்கிய உறவினர் குணாளனாகவும் விடுதலைப்புலிகளாகத் தம்மை முழுமையாக இணைத்து இயங்கினார்கள். ஒரு தேசிய இனத்தை நெருக்கடி அணுகும் போதுதான் உயர்ந்த கொள்கைக்காகத் தன் மகன் போராட்ட களத்தில் இறங்கியது. அதுவும் புலிகளுடன் இணைந்தது அம்மாவின் மனத்திற்கு நிறைவையே கொடுத்தது. அம்மாவினது தமிழ்த் தேசிய உற்சாகமானது வெறும் கருத்துக்களுடன் நிற்பவை அல்ல. அந்த உண்மையான உயர்ச்சி வெள்ளம் விபரிக்கமுடியாதவைகள்.

சிங்களப் படையினரின் போர் இரைச்சல்களினால் 86 இல் ஊர்மக்கள் அனைவரும் இடம் பெயர்ந்து அவல வாழ்விற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். அயல் முஸ்லிம் மக்களது அரவணைப்பில் தம் புதிய வாழ்வை எளிமையுடன் வாழத் தொடங்கினார்கள். அத்தகைய வாழ்வு நிலைக்குள் அம்மா நெஞ்சை நெருடும் சோகத்தோடும் வாழ்விற்காகப் போராடும் மனப் பலத்தோடும் ஆனந்தமாகவே வாழ்க்கையை நகர்த்தினார்.

அயலவருடன் சிங்களம் செய்து கொண்ட ஒப்பந்தத்தோடு இன்னுமொரு மிகப்பெரிய சவாலுக்குத் தமிழ்த் தேசம் முகம்கொடுக்க நேரிட்டது. இக்கால கட்டத்தில்அம்மா சொந்த ஊரில் சொந்த வீட்டில் வாழ்ந்து வரலானார்.

சொற்ப மாதங்களுக்குப் பின்பு ஒருநாள் பாலம்போட்டாறு ஏத்தத்தில் கண்டிவீதி தேக்குமரச் சோலையில் வைத்துச் சிங்களப்படை போராளிகளின் பதுங்கித் தாக்குதலுக்குள்ளானது. T.81 ஆயுதம் உட்படச் சில ஆயுதங்களையும், கைப்பற்றியபடி படுகாயமுற்ற சரோனையும் தூக்கிக்கொண்டு போராளிகளான பரமதேவா, மது, வசந், றோய், பரதன், அன்சார், சந்தர் ஆகியோர் ஊருக்குள் வந்து சேர்ந்தார்கள்.

அம்மாவின் மனம் பதை பதைத்தது. இதயம் அழுதது. அம்மா, அப்பா என்று மணாளன் கூப்பிடுகிற அந்த அழைப்பிற்காகக் காத்திருந்தார். அப் போராளிகளுக்குள் தன் மகனைக் கண்களால் தேடினார். தன் மகன் யாழ்ப்பாணப் போர்க்களத்தில் நிற்கும் செய்தியை அன்றுதான் அறிந்துகொண்டார்.

காலம் உருண்டோடியது. ஒருநாள் அம்மா, அம்மா என்று கூப்பிடுகிற அந்த அழைப்பு நிஜமானது. மகனும், அவனின் சக நண்பர்களும் அம்மா வீட்டிற்குள் வந்து இருந்தார்கள். தன்னிடம் இருப்பில் இருந்த அனைத்து உணவுப்பொருட்களையும் ஒன்றிணைத்துச் சமைத்துச் சுவையான உணவை அனைவருக்கும் பகிர்ந்துகொண்டார் அம்மா. வந்த போராளிகளும் அன்று இரவே மகனுடன் தம் முகாம் சென்றுவிட்டார்கள். அன்று அம்மாவிற்கு உண்டான ஆனந்தத்தை வர்ணிப்பதென்பது முடியாத காரியம்.

மகன் அம்மாவிடம் விடை பெறும் போது என் சக போராளிகள் யார் வந்தாலும் இருப்பதைக் கொடுத்துப் பசியாற்றுங்கள் என்றும், ஒன்றுமே இல்லாவிட்டாலும் தண்ணீரையாவது கொடுங்கள் என்கிற வார்த்தைகளை உதிர்த்துவிட்டுத்தான் சென்றான். அந்த வார்த்தைகள் அம்மாவின் இயற்கையான அபாரமான உறுதிக்கு மேலும் உரம் போட்டது.

அம்மாவின் மூத்தமகன், மருமகன் மாதவராசா குடும்பம் பாலம்போட்டாறு காணியில் ஓலைக் குடிசை போட்டு வாழ்ந்து வந்தனர். முள்ளும், புதருமாக இருந்த காணியைத் தங்களால் முடிந்தவரை சீர்படுத்திக்கொண்டார்கள். அண்மையில் இந்தியப்படை முகாமொன்றும் அமைந்திருந்தது.

கடவானை மலை ஊற்று இடத்தில் போராளிகள் முகாம் அமைத்து இருந்தார்கள். அங்குதான் மணாளனும் இருந்தார். ரஜனியின் பொறுப்பின் கீழ் புதிய போராளிகள் பலருக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. இம் முகாமிற்கான உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொடுத்தல், ஊருக்குள் வரும் போராளிகளின் பசியைத் தீர்த்தல் என மூத்த மகள் குடும்பம் கவனித்து வந்தது. இடைவிடாத மரணப் பயத்தினால் கொஞ்சம், கொஞ்சமாகச் சனங்களின் உற்சாகம் தணிந்த காலமாக இருந்த போதே இவ் உதவிகளை அம்மாவின் மூத்த மகளும் கோணேசின் அம்மாவும் செய்தார்கள். உயர்ந்த இலட்சியத்திற்காகத் தம்மை அர்ப்பணித்து வரும போராளிகளுக்குப் பக்கத் துணையாகவே அவர்கள் இருந்தார்கள்.

இப்படி இருந்துவரும் போதுதான் கடவானை கடலானை முகாம் சிங்களப் படையினரின் சுற்றி வளைப்புத் தாக்குதலுக்கு இலக் கானது. அதில் மணாளன், ராஜ்குமார், அருச்சுனா, ஜானி ஆகிய நான்கு போராளிகள் வீரச்சாவடைந்ததுடன் திலகன், சுஜி, பண்டா, சுதன், சரோன் கடுமையான காயங்களுக்குள்ளானார்கள்.

காயப்பட்ட போராளிகள் அம்மாவின் மூத்த மகள் வீட்டிற்குச் சென்று தமக்கான உதவிகளைப் பெற்று மீள வேறு முகாம் சென்றார்கள் அதன் போதே மணாளன் வீரச்சாவு அடைந்த செய்தியை அம்மாவின் மூத்தமகள் அறிந்துகொண்டார்.

இச்செய்தி அம்மாவின் காதுகளுக்குள் எட்ட தாய்மைக்குரிய பிள்ளைப் பாசத்தினால் ஆழ்ந்த மனக் கவலையில் மூழ்கினார். அம்மாவின் கண்களால் கண்ணீர் கசியும் போதெல்லாம் தன் சீலைத் தலைப்புப் பிடித்துக் கண்களைத் துடைத்துக் கொள்வார். தமிழ்த் தேசியத்தின் திலகங்களான தம் பிள்ளைகள் போர்க்களத்தில் உயிரைத் தியாகம் செய்து வருவதனால் அதில் தன் பிள்ளையும் இணைந்துள்ளது என்கிற எண்ணப் பதிவால் அம்மாவின் முகத்தில் உறுதி காணப்பட்டது.

> **“அம்மா தன் இரு மகன்மார்களின் கல்லறைக்கு விளக்கேற்ற முள்ளியவளை துயிலும் இல்லத்திற்கு 2003 இல் வந்திருந்தார். அவரின் கண்கள் பார்வை குறைந்து கொண்டு போவதும் ஒரு கண் முற்றாகத் தெரியாத நிலையிலும் 70 வயது ஆரம்பித்திருந்தது. ஆனாலும், இவரிடம் காணப்படும் மனோபலத்தில் ஒருதுளிகூடத் தளர்வைக் காணமுடியவில்லை. இறக்கும் வரை கௌரவமாகத் தன் சொந்தக்காலிலே நிற்கவேண்டுமென்ற மனவைராக்கியத்தை வெளிப்படுத் தினார்.”**

அம்மாவினது வீட்டுப்படலையடியில் அம்மா அம்மாவென்கிற அழைப்புப் போராளிகளால் அழைக்கும் போதெல்லாம் தன் மகனின் நினைவுகளைச் சுமந்தவண்ணம் போராளிகளுக்கான தொண்டுகளைச் செய்தே வந்தார்.

இந்தியப் படைகளின் போர் முழக்கங்களுக்குள் சிக்குண்டு உள நெருக்கடிகளுக்கு ஊர்மக்கள் வாழ்ந்த இறுக்கமான சூழல் தளர்வடைய ஆரம்பித்தது. தேசிய மாவீரர் நினைவுநாள் ஊரின் பாடசாலையில் தேசியக்கொடி ஏற்றலுடன் முதல் முதலாகக் கொண்டாடப்பட்டது. அன்று அம் மக்கள் தம் மன எழுச்சிக் கோலங்களை வெளிப்படுத்திப் போராளிகளுடன் இணைந்து கொண்டாடினார்கள். அம்மாவும் அந்த உணர்வுகளுக்குள் மூழ்கியே இருந்தார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## ஏமாற்றலாமா?

உலகில் தண்ணீருக்கு அடுத்தபடியாகக் குடிக்கும் பானம் கொக்க கோலாவும் பெப்சியும் தான்.

இதே கொக்ககோலாவையும் பெப்சியையும் உற்பத்தி செய்வதற்குச் செலவிடப்படும் பணத்தைவிட அதனை விற்பனை செய்வதற்காகச் செலவிடப்படும் பணமே அதிகம் என்கிறது அந்த நிறுவனத்திலிருந்து வெளியாகும் ஒரு தகவல்.

இது வர்த்தக சாம்ராஜ்ஜியத்தில் ஒரு தந்திரம்.

இந்த வியாபார தந்திரத்தில் எங்கள் ஊர் வியாபாரிகளும் சளைத்தவர்கள் இல்லை. அவர்களும் விற்பனையை அதிகரிப்பதற்காக எத்தனையோ தந்திரங்களையெல்லாம் செய்கிறார்கள்.

இது எங்களூர் வர்த்தகர்களின் தந்திரங்களில் அண்மையில் ஒரு புடவை நிலையத்தில் சேட் வாங்குவதற்காகச் சென்றிருந்தேன். ‘பொக்ஸ் சேட்’ என்று சொல்லப்படும் பெட்டிக்குள் இருக்கும் சேட்டின் விலை என்ன என்று கேட்டேன்.

அதற்கு அந்த வியாபாரி எண்ணூற்று எழுபத்தைந்து என்றார்.

பிறகு எங்கள் இருவருக்கும் இடையிலான பேரம் பேசலைத் தொடர்ந்து எண்ணூறு ரூபாவிற்குப் பெற்றுக்கொண்டேன்.

நான் வாங்கிய சேட்டைப் பொதி செய்து தரும் போது அந்தச் சேட்டின் பெட்டியை வர்த்தகர் எடுத்துக்கொண்டு இதை நான் எடுக்கவோ எனக் கேட்டார். அதற்கு நானும் சம்மதித்தேன்.

ஆனால், பின்னர்தான் புரிந்தது. பல ரூபா குறைவான வேறு சேட்டை அந்தப் பெட்டிக்குள் வைத்து அதனையும் ‘பொக்ஸ் சேட்’ என விற்கப் படுகிறது.

இவ்வாறு அதிகமான விற்பனை நிலையங்களில் இப்படியான செயல் நடைபெறுகிறது.

இந்த வியாபார தந்திரங்கள் பல அப்பாவிகள் தமது பணத்தை இழந்து தரக்குறைவான பொருட்களைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

அன்பான வர்த்தகர்களே இப்படிச் செய்யலாமா?



வேகம் நல்லது; அவசரம் கெட்டது. – ஏ.வி. ஸூவரவ்

# புலிகளின் இடைக்கால திட்டவரைபை
# தூக்கியெறிய முயலும் பேரினவாதம்

சந்திரிகா பண்டாரநாயக்கா சிறிலங்காவின் சமாதானத்தை அழித்துவிட்டார் (Chanderika Bandaranayake Distroys peace 0f srilanka) எனும் தலைப்பில் நாடாளு மன்று கலைப்பு பற்றிய செய்திக் குறிப்பொன்றை ஜேர்மனியர் முன் னணி நாளிதழ் 'Frank Ford post வெளியிட்டுள்ளது. இது மேற்குலகின் சிறிலங்கா நிலைப்பாடு தொடர்பான வெளிப்பாட்டின் ஒரு மாதிரியாகும். நாடாளுமன்ற கலைப்பு தொடர்பாக செய்திக்குறிப்பு வெளியிட்ட அப்பத் திரிகை சிறிலங்காவின் சமாதானச் செயற்பாடுமீது நிகழ்த்தப்பட்ட மிகப் பெரும் தாக்குதலாக இதனை வர் ணித்து அச்செய்திக்குறிப்பை வெளி யிட்டுள்ளது. சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி கூட்டணியின் உருவாக்கமே நாட்டை மீண்டும் போருக்கு இட்டுச் செல்லும் வாய்ப்புக்களைக் கொண் டிருக்கிறது என்பதை மேற்குலகம் உணர்ந்துள்ளது.

சிங்கள பேரினவாதத்தின் கூட்டுக்கலவையான சிகல உறுமய, மகாஜன எக்சத்பெரமுன (எம்.ஈ.பி) ஜே.வி.பி. சுதந்திரக்கட்சி போன்ற வற்றின் கோபம் இப்போ மேற்குல கின் மீது குறிப்பாக நோர்வேயின் மீது திரும்பிவிட்டது. இந்த எதிர்ப்புணர் வின் மறைமுக வெளிப்பாடாகவே சிங்கள பௌத்த பேரினவாதிகள் கிறிஸ்தவர்கள் மீது நடத்தும் தாக்குதல்கள் அமைகின் றன என்பது புரிந்துகொள்ளக்கூடிய ஒன்றாகும். சோமதேரரின் மரணம் தாக்குதலுக்கான ஒரு உடனடிக் கார ணமாக அமைந்துவிட்டது. பௌத்த சிங்கள பேரினவாதத்தின் பலமான ஸ்தாபன வடிவம் காரணமாகவே பொலிசாரும் இவர்களுக்கு எதிரான நடவடிக்கை எடுக்கத்தயங்கினர். நீதி யான தேர்தலைக் கண்காணிக்கும் பணிக்கு நூறு வெளிநாட்டவர் களையாவது அழைக்கவேண்டும் என்ற கருஜெயசூரியவின் கோரிக்கை மீது கல்லெறியத்தொடங்கிவிட்டனர் சிங்களப் பேரினவாதிகள். சுதந்திர மானதும் நேர்மை யானதும் தேர்தலில் மக்கள் செயற்பாடு (People\Saction For Free and Fair Election - PAFFREL) எனும் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி றொட்றிக்கோ மிகக் கடுமையான கண்டனத்துக் குள்ளாகிவிட்டார். தேர்தல் கண் காணிப்பென்பது பேரினவாதி களுக்கு பல்வேறுஇடையூறுகளை ஏற்படுத்தும் என்பதே இதன் காரண மாகும். வாக்காளர்களுக்கு இடையூறு செய்வது, தேர்தல் அலுவலர்களை அச்சுறுத்துவது, கள்ளவாக்குப் போடு வது, வாக்குப் பெட்டிகளைத் திருடு வது, மக்களைக் கொல்லும் அரசி யல் வன்முறையில் இறங்குவது போன்ற தேர்தல் முறைகேடுகளுக்கு பெரும் இடையூறாக அமையும் PAFFREL போன்ற தேர்தல் கண் காணிப்புக் குழுக்கள் மீது கோபப்படு வது பேரினவாதிகளுக்கு இப்போது அவசியமான விடயமாகிவிட்டது. திரு.றொட்றிக்கோ 20,000 தேர்தல் அவதானிப்பாளர்களை நாடுமுழுவ தும் நகர்த்தத் திட்டமிட்டுள்ளார். இதனால் றொட்றிக்கோ மீது கடும் கோபம் கொண்டுள்ளனர் பேரினவாதி கள் அவர் மட்டுமல்ல, சமாதானம் மீது அக்கறை செலுத்தும் சிங் களவர்கள் அனைவரையுமே ஈழம் உருவாக்கும் கைத்தொழிலதிபர்கள் என குற்றம் சாட்டத் தொடங்கிவிட்ட னர் பேரினவாதிகள்.

"சிங்களம் மட்டும் அரச கருமமொழி" எனும் பிரச்சாரத்துடன் பண்டாரநாயக்கா வெற்றி பெற்ற நாற் பத்தெட்டு வருடங்களுக்கு முந்திய 1956ஆம் ஆண்டில் தேர்தல் நடத்திய அதே தினத்தையே இம்முறை சந்திரிகா கூட்டணியும் தெரிவுசெய் துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியை தோற்கடிப்பதன் மூலம் விடுதலைப் புலிகளின் "இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைபை" குப்பைக் கூடைக்குள் எறிவோம் என்கிறார் சிங்கள பௌத்த பேரினவாதிகளின் மூளைகளில் ஒன்றான "நளின் டி சில்வா" இதுவே அனைத்து சிங்கள பௌத்த பேரினவாதிகளின் தேர்தல் கோட்பாட்டு அடிப்படையுமாகும். ரணில் விக்கிரமசிங்கவினால் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் சனாதிபதியின் ஒப்பம் இன்மையால் சட்ட வலுவுடைய ஆவனம் இல்லை எனக்குறிப்பிடும் இவர் மேற்குல கினால் திருமுழுக்காட்டப்பட்ட தமி ழர்களைத் தோற்கடிப்போம் என அறைகூவல் விடுத்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க புலி களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை யைச் செய்துகொள்வது, சர்வதேச வசதியாக்கத்துடன் சமரசப் பேச்சுக் களில் ஈடுபடுவது, சர்வதேச சமூகத் தின் உதவியுடன் நாட்டை அபிவிருத்தி செய்வது என தனது செயற்திட்டத்தை வகுத்துக்கொண்ட போதும், அவரால் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அப்பால் நகரமுடியாதபடி தடைகள் ஏற்பட்டுவிட்டது. தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளின் தீர்வு களை அடித்தளமாகக் கொண்டு இதய சுத்தியுடன் பேச்சு வார்த்தை களை நகர்த்துவதற்குப் பதிலாக சர்வதேச பாதுகாப்பு வலைப் பின்ன லுக்குள் புலிகளைச் சிக்க வைப்பதற் கான இலக்கில் செயற்பட்டமையா லேயே பேச்சுவார்த்தை இடை நடு வில் நின்றுவிட்டது. பொருளாதார அபிவிருத்தி நிலையும் சரியான செயல்நெறியில் நகரவிடாது சிங்கள இராணுவ இயந்திரத்தின் நலன் களுக்கு முதன்மை கொடுத்த போக் கும், அவருடைய சொந்த அமைச்சர வையின் அமைச்சர்களே ஊழல் மற்றும் முறைகேடுகளில் ஈடுபட்டமை யும், சரியான தீர்மானங்களை உரிய கணங்களில் எடுக்கமுடியாத இயல் பும் சிங்களமக்களிடையே அவரின் செல்வாக்குச் சரிவுக்குக்காலாகி விட்டது. தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டங்கள் இதன் வெளிப்பாடாகவே அமைந்தது.

**அன்ரன் அன்பழகன்**

1978ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட நிறைவேற்று சனாதிபதி முறைமை 2001ஆம் ஆண்டிலேயே தென்னிலங்கையில் ஒரு அதிகார இழுபறியை ஏற்படுத்தியது. இந்த அதிகார இழுபறியுள் சிக்கிக் கொண்ட சிங்கள மக்களிடையே தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினை களும் அது தொடர்பான விழிப்புணர் வும் ஓரளவு ஏற்பட்டுள்ளபோதும் அது முழு மக்களையும் சென்றடைய வில்லை என்பது புலனாகிறது.

அண்மையில் கிளிநொச் சிக்கு கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த விளையாட்டுத்துறைப் பயிற்றுனர் ஒருவர், கிளிநொச்சிப் பகுதியில் சிங்களத்தில் பெயர்ப் பலகைகள், விளம்பரப்பலகைகள் இல்லாமைபற்றி அதிர்ச்சியோடு வினவினார். அவரைப் பொறுத்தவரை புலிகள் பற்றிய வியப்பும், தமிழ்மக் களுடன் நட்பும் காட்டிய போதும், ஆழ் மனதில் இலங்கை முழுவதும் சிங்களதேசம் எனும் உணர்வு ஆழமாக வேரோடியுள்ளதையே உணரமுடிந்தது. இதேபோன்று தேசிய கல்வி நிறு வனத்தால் கிளி நொச்சியில் நடத் தப்பட்ட புத்தகக் கண்காட்சியில் பாரஊர்திச் சாரதி யாக வந்த ஒருவர் உரையாடும்போது சந்திரிகாவால் மட்டுமே இனப்பிரச் சினைக்கான தீர் வை எட்டமுடியும் என்று தெரிவித் திருந்தார். அதற் காகவே தீர்வுத்திட் டத்தை எதிர்க்கின்ற ஜே.வி.பி.யை கூட்டணிக்குள் கொண்டுவந்தார் என தனது கருத்துக் கான ஆதாரமாக வலுப்படுத்தினார்.

இவ்வாறு சிங்கள மக் களிடம் தவறான கருத்தோட்டத்தை ஏற்படுத்தும் பிரதான காரணி சிங்கள ஊடகங்களே என்கிறார் முன்னாள் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி. முன்பு அச்சு ஊடகங்களும் இப் போது அச்சமற்றும் இலத்திரனியல் ஊடகங்களும் இப்போக்கின் பிரதான உந்து சக்திகள் என்றார் அவர். இதனையே தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தின் புரட்சிகரத் தன்மையை சிங்கள பௌத்த பேரினவாதச் சிந்தனையில் இருந்து விடுபடும் போதே சிங்கள மக்கள் புரிந்துகொள்வார்கள் எனத் தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் தெரிவித்திருந்தார். என்பதை இங்கு நினைவில் கொள்ளவேண்டும்.








**ஐந்தாவது பத்தி**

# கடைசி நிமிடம்வரை எல்லோரையும்
# ஊகம் செய்யவைத்த சந்திரிகா

"அப்பா உதென்ன ஸற்ரலைற் விசர் வேலை செய்துபோட்டு நிக்குது" பிந்து உடகெதர கேட்டாள்.

"ஏன் பிந்து? நாடாளுமன்றத்தை கலைச்சுப்போட்டு தேர்தலை அறிவிச்சிருக் கிறா... அவ்வளவுதான்" என்றார் அப்பா பேர்ஸி.

"ஆனா....உது சரியான வேலையே?" பிந்து தெரிந்துகொள்ள கேட்டாள்.

"சனநாயகமுறையிலான தேர்தலை அறிவிப்பதை விட சரியான வேலை என்ன இருக்கிறது" பேர்ஸி கேட்டார்.

"ஆனா அப்பா! தான் மட்டும் இரகசி யமா சத்தியப்பிரமாணம் செய்து இன்னொரு வருடம் மேலதிகமா பதவியை நீடிச்சுப்போட்டு, பாவப்பட்ட எம்.பி.மாரை இரண்டு வருஷத்துக்கு ஒருக்கா தேர்தலுக்கு போங்கோ எண்டுறது என்ன நியாயம்?"

"பிந்து....! ஐந்து நட்சத்திர சனநாயக மாக நாங்கள் இருப்பதற்காக கொடுக்கின்ற விலைதான் அது..."பேர்ஸி சோகமாக சொன்னார்.

"பதவியை நோக்கி குறுக்கு வழியில் செல்வதால நாட்டின்ர நலன்களை அவ அபாயத்துக்கு உட்படுத்திறா எண்டுதான் நான் நினைக்கிறன்"

"அப்படி அவ செய்யிறா எண்டா... பச்சை காரரைத்தான் குறைசொல்ல வேண்டும்..."

"ஏன் அப்பிடிச் சொல்லுறியள்...?"

அவவட பிழைகள் என்னவாக இருந்தாலும்... தான் ஒரு தந்திரமான அரசியல் வாதி எண்டு சந்தேகத்துக்கிடமில்லாம மெய்ப் பித்திருக்கிறா"

"எப்பிடி அவ்வளவு நிச்சயமா சொல்லுறீங்கள்?" பிந்து நெருக்கினாள்.

"ஏன்... அவ அந்த மூண்டு அமைச் சையும் பொறுப்பேற்ற பிறகு, தன்ர சீட்டுகளை அவ புத்திசாலித்தனமாத் தான் விளையாடிவாறா..."

"என்ன சொல் லுறியள்?"



"நாடாளுமன்ற கலைப்பைத்தடுக்க பச்சைக்காரர் அரசுப்பகைமை (Imachment) குற்றச்சாட்டை கொண்டு வரக்கூடிய நிலைமை இருக்கயுக்க, அவ மாலிக் - மனோ நகைச்சுவை நாடகத்தை அரங்கேற்றி கூட்டாட்சி தீர்வொன்று வரலாம் எண்டு பச்சைக்காரரை வாயை பிளக்க வைத்துக் கொண்டு இருந்தவ அல்லவா?"

நாடாளுமன்ற கலைப்பை தடுப்பதற் காக மட்டும் அரசுப் பகைமை குற்றச்சாட்டை கொண்டு வருவது நியாயம், இல்லையே அப்பா...?" என்ற பிந்து, தொடர்ந்து யூனி யஸ்மாதிரி ஓராள்தான் அப்படிச் செய்திருப் பார்..." என்றாள்.

"யூனியஸ் செய்திருக்கக் கூடியதைத் தான் ஸற்ரலைற்றும் செய்திருக்கிறா..."

"என்ன அது?" பிந்து கேட்டாள்.

ஏன் மகளே... தன்ர அமைச்சர்களை பச்சை கபினட்டுக்கு நியமித்தது இருக்கிறதே..." பேர்ஸி சொன்னார்.

"அதைப்பற்றி பச்சைக்காரர் அதிகம் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை" சொன் னாள் பிந்து.

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

ஏன் அப்பா... அமைச்சரவையில இருக்கிறதில தங்களுக்கு ஆர்வமில்லை யெண்டு காட்ட அவயட அமைச்சர்மாரில ஒருவரும் பதவி விட்டு விலகிற்றார் அல்லவா"

"அதை நான் நிச்சயமாகச் சொல்ல மாட்டன்..." பேர்ஸி வாதிட்டார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

ஆங்கிலத்தில்:
றிப்வான்விங்கிள்
தமிழில் :-
வின்சென்ற்புளோரன்ஸ்

இசை இருக்கும் இடத்தில், விஷமம் இருக்க முடியாது. - மிகேல் தெ ஸெர்வான்டிஸ்



# சிறுகதை

# தொடரும் நினைவுகள்

**கவிதா** தனது முப்பது வயதிற்குள் கணவனைப் பறிகொடுத்த விதவை. இலக்கியா, சஞ்சிகா, கவிஞன் என்ற மூன்று பிள்ளைகளுடன் தொடரும் கணவனின் நினைவுகளைச் சுமந்து வாழ்கிறாள்.

இரவிரவாக அழுது வீங்கிச் சிவந்த தனது முகத்தைக் கண்ணாடியில் பார்க்கிறாள் கவிதா.

பார்த்த கண்களில் சோர்வு ஏற்பட கண்ணாடி சிறுத்துப் பின்னோக்கிப் போவது போன்ற பிரமையுடன் அவளின் நினைவும் பத்து வருடம் பின்னோக்கிச் சென்றது.

ஈழதேசம் பத்திரிகையின் ஆண்டு விழாவிற்காகக் கல்லூரியின் சார்பில் கவிதா பூதத்தம்பி நாட்டிய நாடகத்தில் அழகவல்லியாகப் பங்கேற்று நடித்து அசத்தினாள். அவளைப் பார்வையாளர்கள் பாராட்டினார்கள். விழா ஏற்பாட்டாளரான மாறன் அவளை அழவிற்கதிகமாகப் புகழ்ந்தான். அந்த இளைஞனின் பாராட்டினால் அவள் மெய் சிலிர்த்து முகம் சிவந்தாள்.

கவிதா உன் நாட்டியம் அபிநயம் அபாரம். அழகவல்லி கதாபாத்திரம் உனக்காகத்தான் உருவாக்கப்பட்டதென்றே எண்ணத் தோன்றுகின்றது. எனக்கு அந்திராசியாக நடித்திருக்கலாமென்ற ஆசை கூட ஏற்பட்டு விட்டதென்று கூறி,மாறன் அட்டகாசமாகச் சிரித்தான்.

அவன் புகழ்ச்சியால் கவிதா தலை கவிழ்ந்து வெட்கிச் சிரித்தாள்.

அப்போது கவிதாவின் தோழி சொன்ன வார்த்தைகள் நிஜமாகப் போகிறதென்பதை யார்தான் கண்டார்கள்.

இல்லை மாறன் அண்ணை பூதத்தம்பிக்கு நீங்கள்தான் பொருத்தமானவர், என்ன கவிதா நான் சொன்னது சரிதானே...

இந்த ஆரம்பமே அவளின் வாழ்க்கையை மாற்றியது, காதலும் ஏற்பட்டு வளர்ந்தது... மாறனின் அட்டகாசச் சிரிப்பிற்குள் கவிதா கட்டுண்டாள்.

என்ன கவி இரண்டு நாளா உம்மைக் காணேல்ல, எனக்கு உலகமே வெறுத்துப் போச்சு... மாறனின் கதையைக் கேட்டுக் கவிதா பொய்க் கோபத்துடன், சும்மா ரீல் விடாதையுங்கோ, பத்திரிகைக்காரர் எப்படி வேணுமென்டாலும் பேசுவீங்கள், நான் படும்பாடு உங்களுக்கெங்கே தெரியப் போகுது?

கவி சொன்னால்தானே எனக்கு விசயம் புரியும் சொல்லுமன்.

என்ரை அம்மா அப்பா எனக்குக் கலியாணம் பேசுகினம்...

என்ன, கலியாணமா? மாறன் முகத்தில் கலக்கம் தெரிந்தது.

மாறன் அவளுக்கு ஆறுதல் வார்த்தை சொல்லி அனுப்பிவிட்டுச் சிந்தனையுடன் அலுவலகம் சென்றான். அலுவலகத்தில் மாறனுக்கு வேலை ஓடவில்லை, சிந்தனை தறிகெட்டோடியது. இளமையில் தாய் தந்தையரை இழந்து கல்லூரி விடுதியில் தங்கிப் படித்துவந்த மாறனுக்குக் கைகொடுத்தவர் "ஈழதேசம்" பத்திரிகை முதலாளி தணிகாசலம் ஐயாதான், அந்த



நன்றிக் கடனை இன்றும் அவன் மறக்கவில்லை...

விடயத்தை அவருக்குக் கூறி உறுதியான முடிவுடன் அலுவலகம் முடிந்தவுடன் தணிகாசலம் ஐயாவையும் அழைத்துக்கொண்டு கவிதாவின் வீட்டுக்குச் சென்றான் மாறன்.

அந்த நாளைக் கவிதா என்றும் மறக்கமாட்டாள்... திருமணம் நடந்தது... வாழ்வில் வசந்தமும் வீசியது. ஆனால், குறையும் இருந்தது...

அது

**-ஏழுமலை மூவேந்தன்**

கவிதாவிற்குத்தான் தெரியும்... கவி... கவி... என்ன பலமான யோசனை, எல்லாம் உங்கட கெட்டித்தனத்தைப் பற்றித்தான் யோசிக்கிறன்.

என்னைப்பற்றி என்ன? சொல்லுமன்.

நாங்கள் கலியாணம் செய்து ஒரு வருசமாகிறது.

அதுக்கென்ன இப்ப...

நீங்களும் வீட்டுப் பொறுப்பில்லாமல் ஒரேவேலை வேலை என்று அலைகிறியள்... நானொருத்தி குத்துக்கல்லாட்டம் இங்கை இருக்கிறதும் உங்களுக்கு மறந்துபோகப் போகுது போலத் தெரியுது...

கவி.. நான் என்ன குறைவிட்டன் இப்படிக் நீ குறைப்பட...

தின்ன உடுக்கத் தந்தாப் போலை சரியே அத்தான். கவி நான் பத்திரிகையாளன்... வீட்டிலை இருந்து சேவையாற்ற முடியாது, நாலிடம் திரிஞ்சால்தான், நாலு விடயங்களை அறியலாம், எழுதலாம்...

எம்மை நம்பித்தான் இந்த நாடே இருக்கு.

அப்ப நீங்க பத்திரிகையைக் கலியாணம் செய்திருக்கலாமே...

அவளின்ரை கதையைக் கேட்ட மாறன் அட்டகாசமாகச் சிரித்தபடி... கவி நீ என்ர உயிர்... பத்திரிகை என்ர இரத்தம்...

சும்மா போங்க அத்தான், இன்னும் நாலு மாதத்திலை உங்களுக்கொரு குழந்தை கிடைக்கப் போகுது... அதுக்குப் பிறகு உங்கட உயிரும், இரத்தமும் எங்கையண்டு பாப்பம்..

மாறன் சிரித்தபடி அவளின் கிளி மூக்கைத் திருகினான். அடச்சீ... போங்கத்தான் வெட்கப்பட்டுச் சிரித்தாள்.

இலக்கியா பிறந்து ஏழு வயதாகிவிட்டது. இன்னமும் அவர் மாறவில்லை... ஒரே பத்திரிகை வெறி, மனைவியைப் பிள்ளைகளை விடப் பத்திரிகையை நேசித்தார்...

என்னப்பா இனியாவது குடும்பத்திற்காக வாழுங்கோவன்.

இப்ப என்ன வாழுதாம், குடும்பத்துக்காகத்தானே வாழுறன்.

ஓ... குடும்பத்திற்காகத்தான் வாழுறியள்... ஒரு நாளாவது முழுநாளும் வீட்டிலை நிண்டு என்னுடனும், பிள்ளைகளுடனும் சந்தோசமாக இருந்ததெண்டு சொல்லுங்க பாப்பம்...

சரி... விடடி ஆத்தை கதையை, உன்னாலை விடியக்காத்தாலை பெரிய றோதனையாப் போச்சு...

அதுக்கில்லை அத்தான்... சொல்லுறனெண்டு கோவிக்காதையுங்கோ... பிள்ளையள் கட்டுப்பாடா வளர்றதுக்குத் தகப்பனின் அன்பும் அரவணைப்பும் அவசியம்...

கவி... இலக்கியா என்ரை இலக்கியம்...

சஞ்சிகாவிற்கு அம்மாவின்ரை வேதனை புரியும் அத்தான்... அப்ப உன்ர மகன் கவிஞனுக்கு?

அம்மாவின்ரை அவலமும் புரியும், அப்பாவின்ர பம்மாத்தும் புரியுமாக்கும்...

மாறன் அட்டகாசமாகச் சிரித்தபடி கவிதாவின் முதுகில் தட்டினான்.

இந்தச் சிரிப்பிற்கும் நடிப்பிற்கும் மட்டும் குறைச்சலில்லை... சிணுங்கிச் சிவந்து சிரித்தாள் கவிதா...

மாறனின் ஈழதேசம் பத்திரிகை நிறுவனத்திற்கு அரச பயங்கரவாதிகள் தடை விதித்தனர்...

தடையால் பத்திரிகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. பணி தொடர்ந்தது...

பொறுக்க முடியாதவர்கள். கைக்கூலிகளைக் கொண்டு காரியாலயத்தைக் கொழுத்திவிட்டனர். தீயணைக்கும் பணியில் ஈடுபட்ட பத்திரிகைக் காரியாலய ஊழியர்களுக்குக் காயங்கள் ஏற்பட்டது. மாறனுக்கும் காலில் சிறு காயம் ஏற்பட்டது.

என்னங்க இனிமேலும் உங்களுக்கு இது தேவைதானா!

கவி நீ எதைப் பற்றிக் கேட்கிறாய்?... உங்களுக்கு ஏடாகூடமாக ஏதாவது நடந்தால் நானும் பிள்ளைகளும் உயிரோடை இருப்பமா?

ஏ... அசடு! உண்மையை எழுதுவது கூடாதா? மக்களுக்காகச் சேவை செய்வது தவறா? உண்மைச் சேவைக்கு இதுதான் பரிசா கவிதா...

நீயே சொல்லு... இந்த நிலையை மாற்ற நாம் போராட வேண்டும்! அப்பதான் நாளைய சந்ததி சுதந்திரமாக வாழும்...

பத்திரிகைக்காரன் கைக்கூலிகளல்ல...

பேனாக்கள் துப்பாக்கிகளால்தான் எமது இனத்தின் கனவை நனவாக்க முடியும்! இதை உலகம் புரியட்டும்... மாறன் உணர்ச்சிவசப்பட்டான், கவிதா அதனைப் புரிந்துகொண்டு...

சரி.. சரி.. பிள்ளையள் காத்திருப்பினம் வாங்கோ சாப்பிடுவம்.

மாறன் பத்திரிகை நிறுவன அலுவலாகக் கொழும்பு சென்ற வேளை நாசகாரிகளால் கொல்லப்பட்டான்...

மாறனின் சடலத்தை "ஈழதேசம்" பத்திரிகை முதலாளியின் கடும் முயற்சியினால் கொண்டுவர முடிந்த சம்பவத்தையும்,... அலுவலக நண்பர்களின் ஆதரவையும் என்றும் அவளால் நினைக்காமல் இருக்க முடியாது.

தொடரும் நினைவுகளிற்கு முடிவு கட்ட அன்றைய நிகழ்வு, கணவனின் ஓராண்டு மறைவு நிகழ்வுப் பணிகள் காத்திருக்க....

பெருமூச்சுடன் கண்ணாடியை விட்டுத் திரும்பினாள் கவிதா...

அன்றைய "ஈழதேசம்" பத்திரிகையில் அவனது புகைப்படமும், நினைவு மலரும்... வெளியிடப்பட்டிருந்தது அவள் கண்களில் பட்டது..

கவிதா... இலக்கியா, சஞ்சிகா, கவிஞன் பின் தொடர கணவனின் ஓராண்டு நினைவுப் பணிகளில் ஈடுபட்டாள்...

மாறனின் இலட்சியச் சுமைகள் நினைவில் நிழலாட...

புதுயுகம் படைக்கும் புனிதப் பணிக்குத் தன்னையும் பிள்ளைகளையும் அர்ப்பணிக்கும் தொடரும் நினைவுகளுடன் கவிதா கடமைக்கு ஆயத்தமானாள்....

□ □ □ □

இசை இருக்கும் இடத்தில், விஷமம் இருக்க முடியாது. - மிகேல் தெ ஸெர்வான்டிஸ்

# சொர்க்கத்தின் நிழலும், நரகத்தின் குழியும்

## குட்டிக்கதைகள்

அமைதியின் சிறகுப் போர்வையால் அழகொளிரத் திகழ்ந்த நாடு அது. வற்றாத நதிகள் ஓர் பாலும், பொய்கைகள் வாவிகள் என ஒரு பகுதியோடு வானம் பார்த்த பூமி எனவுமான பெருநிலமுமாக இரு கூறுகளாக இயற்கையிலேயே பிரிந்திருந்த நாடு. நதி வளம் மிகுந்த பரப்பு வளமிருந்தும் வளப்படுத்தும் மக்களின்றியதால் வளம் குன்றிப் பிறரிடம் கையேந்தி நிற்க பொய்கைகளையும் வாவிகளையும் வான்மழையாலும் தன் வளத்தை மேம்படுத்தி மாற்றார் ஆசை கொள்ளும் நிலமாக வளச் செழிப்பின் உச்சமாகத் திகழ்ந்தது.

இத்தனை நதிகள் இருந்தும் இங்கு வளஞ்சுரக்கவில்லை.... அங்கே... சே.. இத்தனை வளமா?... அரச கட்டிலில் ஆட்சி புரிந்தோரின் அங்கலாய்ப்பு இப்படி வளர்ந்து பொறாமையாகித் தமது தமது என எல்லாவற்றையுமே கொள்ளத்தொடங்கி ஒரு பகுதி நிலத்தில் ஆதிக்க



மேலாதிக்கத்தை நிலை நாட்டத்தொடங்கினர்.

போர் இரு நிலத்தினிடையிலும் அரசால் ஆரம்பமாகிப் பெரும் போராகப் பல ஆண்டுகள் நடைபெற்றது. இரு பகுதி மக்களுமே நிம்மதியை இழந்துபோக நேர்ந்துவிட்டது. இயமதர்மராசனுக்கோ-சித்திரபுத்திரனுக்கோ தெரியாத விமானம்-பீரங்கி,எறிகணை-துப்பாக்கிக் குண்டுகளால் மக்கள் பூ.பிஞ்சு,காயாக அழிந்துகொண்டிருந்தனர்.

ஆதிக்க மேலாதிக்க அனல் தீயாகி, அரசப் படைகள் மக்களைப் பொசுக்கத் தொடங்கின. புலம் பெயர்வுகள் நிகழத் தொடங்கியது.

பாதுகாப்பான இடங்களில் வாழ்ந்து கொண்டு அரசப் படைகளோடு எதிர்த்துப் போராடி மண்ணையும், மக்களையும் காக்கும் கவசமாயினர் சிலர். அந்தச் சிலரை மக்கள் மண் காக்கும் பணியில் மழையாகப் பொழியும் கருமுகில் போல் கண்டு மகிழ்ந்தனர். போராளிகள் என அன்போடு அழைத்தனர். ஆதிக்க மேலாதிக்க அனல் தீயையும் அணைத்து மாற்றானின் ஆதிக்கப் பாதப் பாவத்தைத் தம் மண்ணிலிருந்து கழுவிச் சுத்திகரிக்கத் தமது இரத்தத்தைத் தெளித்துப் புனிதப்படுத்தினர்.

இன்னும் சிலரோ உயிரைக் கையிலெடுத்தவாறு வாழ்வும் வளமும் தேடி ஓடினர். போரான பெரும் பாவத்துள் நாம் சிக்கி நரகத்திற்குப் போகாது வழமாக வாழ்ந்து நற்கதி அடைவோமென இருந்துகொண்டனர். இரண்டாவது உலகப் போர் காலத்திலிருந்து இப்படி வாழ்வும் வளமும் தேடி அந்நிய தேசங்களில் சுகபோக வாழ்வு வாழும் நிலை மலாயின் பென்சனியர் சிங்கப்பூர்ப் பென்சனியர் என்று பின்னர் வந்து தங்க இடமளித்து இந்த மண் இப்போதும் புலம்பெயர்ந்து போவோர் போன இடம் சொர்க்கம் அல்ல நரகம் என உணர்ந்து தாயகமே சொர்க்கமென வரவாமென இங்கு சொர்க்கம் படைக்க இருந்தோர் எண்ணிக்கொண்டனர்.

அமைதியான அண்டவெளியிலிருந்து நீரைப் பருகிக் கருமுகிலாகி மண் மீது பொழிந்து தன்னை அழித்துக்கொண்ட கருமுகில்களிற்கு முன்னர் தாமே சொர்க்கத்திற்குச் சென்று விடுவோமென்று மேலெழுந்து மேலெழுந்து அழகு குன்றாது சென்று சொர்க்க வாசலை அடைந்தது. அங்கே கருமுகில் கூட்டம்... ஆனந்த வெள்ளத்துள் மூழ்கிக்கிடப்பது தெரிந்தது...

எத்தனையோ கருமுகில் கூட்டத்தையும் மின்னல் முழக்கங்களையெல்லாம் தாண்டி வந்தும் எனக்குக் கிடடாத சொர்க்கம் பாதாளத்தை நோக்கிச் சென்று ஒன்றோடு ஒன்று மோதிய கருமுகிலுக்குச் சொர்க்கம். அப்படியானால்...... வெண்முகில் தீவிர சிந்தனையில் வீழ்ந்தது.

"ஆத்திரத்தில் அறிவை இழந்துவிட்ட வெண்முகிலே அமைதியாகக் கேள்.... சூரியனின் தகிக்கும் கொடிய வெப்பத்தைத் தணித்து உயிரும் பயிரும் செழித்து வாழ வைத்த பெரும் பணியை கருமுகில் செய்ததால் தான் அதற்குச் சொர்க்கம் கிடைத்திருக்கிறது.... இன்னும் சொல்வதானால் அதோபார், மனிதரிலேயும் உன்னைப் போலச் சிலர் தாம் வாழத் தம் குடும்பம் வாழவென ஓடித்தப்பி அந்நிய நாடுகளிற்குச் சென்று சுகமாக வாழ்ந்தனர். ஆதிக்க மேலாதிக்கத் தீச்சுவாலைகளிலிருந்து மண்ணையும்..... தமது தாயக மண்ணையும், மக்களையும் காக்கும் பொருட்டுத் தம்மை ஈகம்செய்து ஈக மழையாகப் பொழிந்து காத்த அத்தனை மாவீரர்களும்.... அதோ... அதுதான் வீரசொர்க்கம்... அங்கே அவர்கள் நித்திய பேரானந்தத்தோடு இருக்கிறார்களே பார்.... அந்த மாவீரரின் ஈகமழையால் அந்த மண்ணின் வாசனை உலகெங்கிலிருந்தும் எல்லா மனித குலத்தவரையும் வரவழைத்துள்ளது.... அங்கே இப்போது உலக மக்கள் கூட்டம் சொர்க்கத்தின் நிழலில் நிற்பது போல நிற்கிறார்கள்....."

குரல் வந்த திசையைக்கூடப் பார்க்காது வெண்முகில் பூமியை நோக்கி விரைந்தது.... தான்விட்ட தவறை உணர்ந்து இனியாவது மண்குளிர மழையாகிப் பொழிய வேண்டுமென்ற அவசரத்தில் பூமியை நோக்கி விரைந்தது.

ஆதிக்க மேலாதிக்க வெறியின் தீச்சுவாலைக்கு அஞ்சிச் சென்ற மக்களும் தாய் மண்ணே எமது சொர்க்கமென்ற நினைவுகளை மனதேந்தித் தாயகம் நோக்கி விரையத்தொடங்கினர்....

ஆதிக்க வெறியர்க்கும், ஏதோ ஒரு பூடகமான விளக்கம் புரிந்திருக்கவேண்டும். மண்ணுக்காகத் தம்மை ஈகம்செய்த அந்த மாவீரர்களின் வீரசொர்க்கத்தில் இருந்தால் அவர்களின் இந்த மண்... ஓ... அந்த மண் சொர்க்கத்தின் நிழலா? அப்படியானால்.... எமது ஆதிக்கத்தால் விளைந்த விளைவுகள்......

ஓ... உங்களுக்கும் ஒரு விளக்கம் தேவைதான்.... போரைத் திணித்த உம்மால் விரட்டப்பட்டவர்கள்.... அதோ... அவர்கள் தமது தாய் நிலத்திற்கு வரவேண்டியவர்களே.... அவர்களிற்கான அந்த மண் சொர்க்கத்தின் நிழல்... அந்த நிழலில் இளைப்பாற அவர்கள் வருகிறார்கள்....

நீங்கள்.....? அந்த நரகம்... போரென்ற நரகக்குழி உம்மை அழைக்கிறது.... அது உங்கள் ஆனந்தமோ....?

-வளவைவளவன்

நாளாந்தம் கூலி உழைப்பின் பெரும் பகுதியை கள்ளு, கசிப்பு,சாராயம் என வயிற்றுக்குள் விட்டு நிரப்பித் தண்ணியாகவும், மீதியை வெற்றிலை, சுருட்டு,சிகரெட் என வாய்க்குள் அரைத்துப் புகையாகவும் ஊதி அன்றைய உழைப்புக் கரைந்துபோகும்.

நிறைவெறியில் நான்கு காலில் நட(தவழ்)ந்து வர வாய்க்கு இதம்பதமாக, பவ்வியமாக அடங்கியொடுங்கிச் சாப்பாடு கொடுக்க வேணும்.

சோற்றுக்கு உப்புக் காணாது, கறிக்குப் புளி விடலையோ? அதட்டி, வெருட்டி புறணி கூறி அடி உதை வேறு.

கணவன் புசித்தபின் மிஞ்சிய சோறு கறியைத் தாயும் நான்கு பிள்ளைகளும் சேர்ந்து கால் வயிறும் குறை வயிறுமாக "இதம்" பார்த்துவிட்டு உறங்கிவிடுவர். இது அந்த வீட்டில் நாளாந்தம் நடக்கும் நிகழ்ச்சி நிரல்.

அன்றும் வழமை போல, வெறி தலைக்கேறிய நிலையில் தகப்பன் வந்துகொண்டிருந்தார். நான்கு பிஞ்சுகளும் சேர்ந்து படலைக்குள் வைத்துத் தடுத்து நிறுத்தினர்.

இளையவன் சொன்னான்.

"இது எங்கள் அம்மாவிற்கான பாதுகாப்பு வலயம்.



# துணிவு

இனிமேல் நீங்கள் வெறியேறிய நிலையில் இந்தக் கண்டாயத்தைத் தாண்டி உள்ளே வரமுடியாது.

-ஆவரங்கால் சுதன்

## எத்தனை வாலிகளை மறைநின்று கொல்வாய்

அயோத்தியில்
இப்போதும் உன் ஆட்சிதான்
நீயேதான் அரசன்
விபூசணன்களோடும்
சுக்கிரீவன்களோடும்
உனக்குள் நட்பும்
இன்றும் அப்படியே
குற்றமிழைத்தாலும் குறிசொல்லும்
குகன்களுக்கும் குறைவில்லை.

அரியணைக் கனவில்
வளைந்தும் நெளிந்தும் துதிபாடும்
சுக்கிரீவன்களும் விபூசணன்களும்
புடைசூழ, சாந்த சொரூபியின்
அகர வீதிகளில் உருளும்
புன்னகைத் தேர்ச்சில்லிடை
எத்தனை சீவன்கள் முடிந்தாலும்
அத்தனையும் அரக்கரென
அவனிக்கியம்பும்
தேவர்கள் ஏராளமாய்
உன்னைச் சூழ.

அனுமானைப் போல
இப்போதுமுன்
தூதர்களுக்கு வால்கள் நீளம்
நுனியிற் சுற்றிய
பந்தம் கொண்டு
எரித்திட முனைவர்
முடியாமல் தவிப்பர்
உன் பாதம் பட்டே
விமோசனம் வருமென
லங்கா அகலிகைகள்
அருந்தவம் கிடக்கிறார்கள்
பார்த்தாயா...? உனக்கும்
சீதை சிறைப்பட்ட நாடெனினும்
சீமாட்டி மீதேது சீற்றம்..?

வீடு கொழுத்தும்
அல்லி ராணிக்கு
கொள்ளி (எடுத்து) கொடுக்க
உன் நேசக்கரம் நீளாது போமோ?

இந்துமா கடலில் பள்ளி கொள்கையில் வியர்த்தாலும்
விசிறிகள் தேவை என்றோ
முற்பணம் செலுத்துகிறாய்..?

முவர்ணக்கொடி நடுவே
சுழலும் உன் கைச்சக்கரம்
இன்னும் எத்தனை பேரின் கழுத்தறுக்கும்..?
குரங்குகளின் குடும்பச் சண்டைக்கு
குறுக்கு வழியில் தீர்வு கண்ட
இராமா..!
இன்னும் எத்தனை வாலிகளை
மறை நின்று கொல்வாய்?
மறை நின்றதாய் சொல்வாய்?

-தருமை வதனன்

# குழந்தைநாதம்

## நேர்மையான பையன்



குமரன் என்ற பையன் ஒவ்வொரு கிராமம் கிராமமாகச் சென்று பயன்படாது எனக்கருதி வீசப்படுகின்ற பழைய போத்தல்கள், தகரப்பேணிகள் போன்ற பல பழைய பொருட்களை பொறுக்கிவந்து அதனை நகரத்திலுள்ள கடை ஒன்றுக்கு விற்றுவந்தான். அந்தக் கடைக்காரர் கொடுக்கும் சொற்ப பணத்தைக்கொண்டே நோயால் பாதிக்கப்பட்ட தனது தந்தையைப் பராமரித்து வந்தான்.

அவன் காலையில் புறப்படும் முன் தந்தைக்கு குடிப்பதற்கு கொதித்தாறிய நீர், மாத்திரைகள், உணவு போன்றவற்றை பக்குவமாக எடுத்து அருகிலேயே வைத்துவிட்டுச் செல்வான். ஏனென்றால் தந்தையால் எழுந்து நடமாட முடியாத அளவிற்கு நோய் அவரைப்பீடித்திருந்தது. அவன் புறப்படும்போது தந்தையது கன்னங்களை இருகைகளாலும் தொட்டு அணைத்துவிட்டே செல்வான்.

குமரன் புறப்படும்போது அவனது தந்தை: குமரனைப் பார்த்து: "தம்பி: நாங்க ஏழையடா. ஆனா யாரையும் ஏமாற்றிப் பிழைக்கக்கூடாது. பொய். களவு இதுகளால ஒரு ரூபா காசு கூட நீ கொண்டு வரக்கூடாது. உண்மைபேசி உழைக்க வேணும். ஆரும் வேலைசொன்னாச் செய்துபோட்டு, தாற பணத்தை வாங்கிவா. அளவுக்கு மீறி எதுக்கும் ஆசைப் படாத. படைச்ச ஆண்டவன் எங்கல எப்பிடியும் காப்பாற்றுவான்"

"அப்பா: எண்டைக்குமே தவறான வழியில் பணம் உழைக்கவோ, வேண்டவோ மாட்டேன்" என்று கூறியவாறு புறப்பட்டு விடுவான். இது அவனது வாழ்க்கையில் தாரக மந்திரமாக ஒலித்துக் கொண்டே இருந்தது.

ஒரு நாள் அயல்கிராமத்துக்குச் சென்ற குமரன், அந்தக் கிராமத்திலேயே மிகவும் பெரிய பணக்காரியாக இருக்கும் தாரணியின் வீட்டுக்குச் சென்றான். வாசலில் நின்றவாறு.

"அம்மா.... அம்மா...."

" என்ன தொல்லையடா..."

என்ரவாறு தாரணியம்மா வாசலுக்கு வந்தாள். குமரனைக் கண்டதும் அவளது முகம் இறுகியது. அவளைப் பார்த்து,

"என்ன தம்பி வேணும்"

"அம்மா: பழைய பொருட்கள் பொறுக்கி வித்துத்தான் பசியைப் போக்கிறன், இஞ்ச பழைய பொருட்கள் கொட்டுற இடத்தைக் காட்டினா, நான் ஏதோ பொறுக்கி பிழைத்துக் கொள்வேன்" அவ்வளவுதான் அந்தம்மாவிற்கு கோபம் தலைக்கேறியது. "போன கிழமையும் பிச்சை கேட்டு வந்த பையன் ஒருத்தன், என்ர தங்கச் சங்கிலியைத் திருடிக்கொண்டு போட்டான். உன்னையெல்லாம் என்னால நம்பேலாது. இஞ்சயிருந்து உடன போ" அவன் எதுவுமே பேசாது மௌனமாக நடக்க, தாரணியம்மா " இந்தா தம்பி, உன்னப்பாத்தா பாவமா இருக்கு, அந்த மூலையில போய்ப்பார்த்து எடு"

"சரி" என தலையை பலமாக ஆட்டியவன் மனதால் அளவது மனதை வணங்கினான். அவன் கொண்டு சென்ற உரைப்பையினுள் பொருட்களைப் பொறுக்கிப் போட்டுக் கொண்டிருந்தவேளை, ஏதோ தகரப் பேணிக்குள் இருப்பது போன்ற தன்மையை உணர்ந்தான். அதனை திறந்தபோது அதற்குள்ளே ஒரு அழகிய தங்கச் சங்கிலியைக் கண்டான். எடுத்துவந்து "அம்மா.... அம்மா..." "என்னடா தம்பி" "இந்தச் சங்கிலி பேணிக்குள்ள கிடந்தது" எனக் கொடுத்தான்.

"சீ அந்த ஏழைப்பையனை அநியாயமா பழிசுமத்திப்போட்டேனே. எங்கேயோ தொலைத்துவிட்டு நல்ல மனங்களை திட்டிப் போட்டன். கடவுளே என்னை நீதான்..." என்னும் போது "அம்மா நான் போட்டுவாறன்"

"நில்லடா தம்பி, உன்னமாதிரி ஒரு பையனை பார்க்கவே எவ்வளவு சந்தோசமா இருக்கு. உன்ர நேர்மையும் பண்பான பழக்க வழக்கம் எனக்கு நல்லா பிடிச்சிருக்கு நீ என்ர வீட்டிலேயே வேலை செய். உனக்கு நியாயமான கூலி நான் தருவன்" என்ரவாறு உள்நுழைந்தவள், பணம் நிரம்பிய பை ஒன்றையும், தங்கச் சங்கிலியையும் அன்பளிப்பாகக் கொடுத்து. பாராட்டி வழியனுப்பினாள்.

"நாம் எந்தச் சூழ்நிலையிலும் நேர்மை தவறி நடக்கக்கூடாது. உண்மையாகவும், ஒழுக்கமாகவும் நடந்தால் எல்லாமே இலகுவாக எம்மை வந்துசேரும்"

**வி.நம்பிவர்மன்**

## வாரம் ஒரு குறள்



எங்களில் அதிகமானவர்கள் விவசாயத்தை ஒரு தொழிலாக கருதுவதுமில்லை. மதிப்பதுமில்லை. ஏர்பிடித்து உழுது வேளாண்மை செய்வது என்பது சாதாரணமான விடயமல்ல என்பது புரிந்துகொள்ளப்படுவதில்லை. விவசாயி வயலில் ஏர் பிடித்து உழுது வேளாண்மை செய்வதனால்தான் ஏனைய தொழில்களை செய்பவர்கள் சோற்றில் கை வைக்க முடிகின்றது என்பது உண்மையில் எல்லோராலுமே விளங்கிக்கொள்ளவேண்டிய ஓர் விடயம். அதனால்தான் உலகின் அச்சாணி விவசாயி என்று நம்பப்படுகின்றது. உண்மையும் அதுதான்.

நாமெல்லாம் அலுவலகங்கள் சென்று பணம் கொட்டி சம்பாதித்ததும். விவசாயி வேளாண்மை செய்யாதுவிட்டால் பணத்தை தான் சாப்பிடவேண்டிய நிலை ஏற்படும். அது சாத்தியமாகாது என்பதனால்தான் உழவுக்கு வந்தனம் செய்வோம் என்று கூறப்படுகின்றது.

"உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து"

என்று வள்ளுவப்பெருந்தகை மிகவும் அழகாகக் கூறியுள்ளார்.

## சொற்சிலம்பம் - 24

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | கி | தி | க | உ | சி | பே |
| ஆ | கொ | கா | சா | இ | பா | ய் |
| சீ | சி | ங | பா | ழா | ச | னி |
| மே | தா | மு | ண | ப | மா | ச் |
| சோ | லை | றா | வா | ட் | ன | ர |
| டை | ம | ளா | றை | ரி | ழ | ட |
| மு | மி | பு | ம் | ப | இ | ஈ |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் - 22 இன் விடைகள்

01. சிப்பி.
02. வள்ளம்.
03. மணல்.

01. அம்புலி,
02. நிலா.

### சொற்சிலம்பம் - 22 இன் பரிசுக்குரியவர்

சு. விதுஷா,
தரம் - 03,
ஆனந்தபுரம்,
அ.த.க.பாடசாலை.

### சொற்சிலம்பம் - 22 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. இ.பிரதாபன், மு/குமுளமுனை ம.வி. முள்ளியவளை.
02. ஜெ.ஜெயூரன், மு/விசுவமடு ம.வி. விசுவமடு.
03. க. அவ்வை கணேசன், ஆனந்தபுரம், கிளிநொச்சி.
04. ச. சர்மிளா, தரம் -03, கிளி/செல்வாநகர் அ.த.க. பாடசாலை.
05. ர.நிசாந்தன், தரம் -02 கிளி/மத்தியகல்லூரி, கிளிநொச்சி.
06. செ. நிலாவரசி, காரைநகர், யாழ்ப்பாணம்.

01. வாழையில் இருந்து எவற்றைப் பெறுகின்றோம்?

01) ....................................

02) ....................................

03) ....................................

02. கோழியில் இருந்து எவற்றைப் பெறுகின்றோம்?

01) ....................................

02) ....................................

பெயர் :- ....................................

முகவரி :- ....................................

....................................

*சொற்சிலம்பம் -24,*
*ஈழநாதம்,*
*யாழ் சாலை,*
*கிளிநொச்சி.*

## விடுகதைகளும் விடைகளும்

01) வரும்போது வெண்சிவப்பு! வளர வளர தகப்பு! போகும்போது கடும் சிவப்பு அது என்ன?
02) மழைக்காலம் வந்தால் மகராசி பாட்டெடுப்பான் அவன் யார்?
03) தீக்குளித்தாலும் திடமாக இருக்கும் அது என்ன?
04) கல்வீட்டுத் தாத்தா மெதுவாகத்தான் நடப்பார் அவர்யார்?
05) புத்தாண்டில் புகுந்த விருந்தாளி தங்குவதே ஓராண்டு அவன்யார்?

**விடைகள்**

01. மிளகாய். 02. தவளை. 03. செங்கல். 04. ஆமை. 05. கலண்டர்.

ம.வித்தியாலினி,
இராமநாதன் கல்லூரி

## பெற்ற தாயின் நினைவே

*பெற்ற தாயின் நினைவே*
*பத்து மாதம் மடி ஏந்தி*
*பெற்றெடுத்த மகராசி - நீ*
*பாலூட்டிச் சீராட்டி - எம்மை*
*பாரினிலே வளர்த்தெடுத்த தாயே*
*படிக்கும் வயதில் பாவி - என்னை*
*பார்க்காமல் சென்றுவிட்ட தாயே*
*உன்னைப் பார்க்க - என்*
*தாயாய் மறு பிறப்பில் பிறப்பாயா.*

**V.பிரதீபா,**
**யா/ஏழாலை மகா வித்தியாலயம்.**

## கைவண்ணம்



பூ.விஜிராஜ் / இந்துக்கல்லூரி

## கடிகாரம் வந்த கதை

உலகத்தில் முதன் முதலில் எப்போது காலம் காட்டும் கருவி கண்டு பிடிக்கப்பட்டது எனத் தெரியுமா? இந்தியாவில் பகல் போதில் சூரிய ஒளியின் நிழல் கொண்டு நாழிகை கண்டனர். இரவில் அரண்மனையில் எண்ணெய் ஊற்றி விளக்கு எரியும் நேரம் கொண்டு காலம் கண்டனர். எகிப்தினால் நிழல் விழுவதைக் கொண்டு அதை அளந்து காலம் கண்டு வந்தனர். இது கிறிஸ்து பிறப்பதற்கு 1300 ஆண்டுகட்கு முன்னர். எகிப்தியர் கண்ட முறையாகும். சூரியவட்டம் கொண்டறியும் முறை அதே காலத்தில் மெஸபட்டோமியாவிலும் பழக்கத்தில் இருந்தது. கிள்ப்ஸியட்ரா என்ற நீர்க்கடிகை கண்டு பிடிக்கப்படும்வரை, சூரிய நிழல் கடிகைதான் பயன்பட்டுவந்தது. டெல்லிக்குச் சென்றால் ஜன்தர்மந்தர் என்ற பகுதியிலும், ஜெய்ப்பூர் அரண்மனை அருகிலும் இவ்வாறான சூரிய கடிகையைக் காணலாம் முகலாய மன்னர்கள் இவற்றை டெல்லியிலும் ராஜபுத்திரர் ஜெய்ப்பூரிலும் பயன்படுத்தினர்.

யந்திரக் கடிகாரம் பதின்மூன்றாம் நூற்றாண்டில்தான் பயன்படுத்தப்பட்டது. அப்போது அவை பெரிய அளவில் இருந்தன. ஸ்பிரிங் வைத்து அதனால் சுழலும் கடிகாரம் கி.பி.1450 இல் கண்டுபிடிக்கப்பட்டது. இப்போது எலக்ட்ரானிக் கடிகாரங்கள் பிரசித்தம்.

## நகைச்சுவை



"பேசும்போது எதுக்குடா புற்றூள் வச்சிருக்கிறாய்?"

"எதையும் அளந்து பேசத்தான்!"

# புரிதலும், தெளிதலும்

அண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு நண்பர் வந்திருந்தார்.

அவர், கலை, இலக்கியம், சினிமா, அரசியல், சமூகவாழ்வியல் என அவருடைய பொது அறிவு விசாலமானது. அந்த அறிவு விசாலத்திற்கு ஏற்ப அவருடைய வயதும் அப்படித்தான்.

அதனால் அந்த நண்பரிடம் பிரயோசனமான ஏதாவது பெற்றுவிட வேண்டும் என்ற அவாவில் பேச்சை ஆரம்பித்தேன்.

எங்களது பேச்சு இன்றைய சினிமாவைப் பற்றியும் சின்னத்திரையைப் பற்றியுமாக திரும்பியது.

ஏற்கெனவே பல இடங்களில் இவைபற்றி பேசியிருந்தாலும் ஒரு நுட்பமான அவதானிப்பை அவர் பகிர்ந்து கொண்டார்.

அதாவது சினிமாவின் எத்தகைய கதை அமைப்புக்களாக இருந்தாலும் அந்த சினிமாக்கதையின் நகர்வு அதிகமாக ஆண்களை மையமாக வைத்து ஒரு ஆண் கதாநாயகனாகவும் அவனுக்கு எதிரான வில்லனாக இன்னு




மொரு ஆணாகவும் கொண்டு இரண்டு ஆண்களுக்கிடையிலான பிரதான கதையை நகர்த்தும் பாங்கை அவதானிக்கலாம்.

அதே நேரம் சின்னத்திரையோ இரண்டு பெண்களை மையப்படுத்தி கதாநாயகியாக ஒரு பெண்ணும் வில்லியாக இன்னுமொரு பெண்ணுமாக அந்த கதைப்பாங்கு நகர்த்தப்படுகிறது.

ஒட்டுமொத்தத்தில் சினிமா ஆண்களிற்குள்ளிருக்கும் வாழ்க்கையின் படி நிலைகளின் சில அம்சங்களை பூதாகாரமாக்கி ஒரு குழப்பத்தையும்.

சின்னத்திரை பெண்களையும். பெண்களையும் மோதவிட்டு இன்னொரு புறமாகவும் வாழ்வின் அடித்தளக் கட்டமைப்பில் புரள்வை ஏற்படுத்தும் ஒரு உளவியல் போரில் இந்த இரண்டு பிரதான வடிவங்களும் கவர்ச்சிகரமாக நடைபோடுகிறது.

இந்த இரண்டு பிரதான வடிவங்களுக்குள் பலியிடப்பட்ட ஆண்களும் பெண்களும் இன்று எங்களுடைய சமூகத்தில் அதன் விளைவுகளை பிரதிபலிக்கத் தொடங்கி விட்டனர்.

இளைஞர்கள் பிரதிபலிப்பை நாம் சமூகமோதல்களுக்கூடாகவும். அவர்களின். நடை. உடை. அலங்காரவடிவங்களினூடாகவும் தினசரி அவதானித்து வருகின்றோம்.

சின்னத்திரையின் தாக்கத்தின் விளைவு பெண்களை எவ்வளவு தூரம் பாதிக்கிறது என்பதை ஒரு பெண் கூறியதற்கூடாகவே நாம் புரிந்து கொள்ளலாம்.

அதாவது சின்னத்திரையில் ஒலிபரப்பப்படும் தொடர்களில் இருக்கும் இடைவேளை என்பது இல்லையென்றால் தன்னால் அன்று சாப்பிடக்கூட முடியாமல் போய்விடும் என ஒரு பெண் அங்கலாய்த்துள்ளார்.

இன்னுமொரு வீட்டில் அரச உத்தியோகத்தராகவிருக்கும் ஒரு கணவன் மாலை ஆறுமணிக்குப் பிறகு தன் மனைவியோடு கதைக்கமுடியாத நிலையில் தான் மேற்கொண்ட ஒரு நீண்ட தூரப் பயணவிபரத்தை ஒரு சிறு குறிப்பாக எழுதி வைத்து விட்டுச் செல்லும் அளவுக்கு அதன் விளைவு ஏற்படுத்தியுள்ளது.

இன்னுமொரு வீட்டில் தொலைக்காட்சியில் ஒரு நாடகம் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்க தான் உரித்த வெங்காயங்களை அழுதழுது பாத்திரத்தில் போடுவதற்கு பதிலாக தரையில் போட்டுக் கொண்டிருந்தாராம்.

எப்படி சமூக குடும்ப வாழ்வில் இதன் தாக்கம் பிரதிபலிக்கப்படுகிறது.

இன்று எமது பிரதேசங்களுக்குள்ளும் கட்டுமீறி நுழையும் இலத்திரனியல் ஊடகங்களில் இத்தகைய தொடர்களையும் சினிமாக்களையும் ஒளிபரப்புவதிலேயே கூடிய கவனம் செலுத்தப்படுகிறது.

இவற்றிலிருந்து சமூகத்தை மீட்கக்கூடிய நிகழ்ச்சிகளுக்கு இந்த ஊடகங்களில் கவனம் செலுத்துமா?

அல்லது அதற்குள் உள் வாங்கப்படும் வாசகர்களாவது புரிந்து கொள்வார்களா?

இப்போதைக்கு நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்பதை புரிந்து கொண்டு எமது பாதையை நாம் செப்பனிட வேண்டும்.

அதுவே எமக்கான புதிய பாதையைக் காட்டும்.

இவ்வாறு சினிமாவும். சின்னத்திரையும் இன்று இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் வாழும் தமிழ் சமுதாயத்தை வழிதவறிக் கூட்டிச் செல்வதில் பெரும் பங்கை வகிக்கின்றன.

இப்படியாக இன்றைய நவீன ஊடகங்களின் துரித வளர்ச்சியானது வாசகர்களை அவர்களை அறியாமலே அவர்களை உள்வாங்கிக் கொள்ளும் ஆற்றலைக் கொண்டவையாக உள்ளன.

இந்த ஆபத்தான விளைவின் பலிக்கடாக்களாக மாணவர்களும் மாணவிகளும் கூட உள்வாங்கப்பட்டு பாதை மாற்றப்படுகின்ற அவலம் தொடருகிறது.

இந்த அபாய புற்றுநோயை எத்தனைபேர் புரிந்து கொள்கிறார்கள்?

அல்லது புரிந்து கொண்டவர்களால் கூட விழிப்படைய முடிகிறது. யாழ்ப்பாணத்தை பொறுத்தவரை இப்போதுதான் இதன் ஆரம்பப்படிகள் சில உள் நுழையத் தொடங்கியுள்ளன.

இந்த அபாய பிரவேசங்களிலிருந்து விழிப்படைவதே அதிக பாதுகாப்பைத் தரும் என்பது மட்டும் நிச்சயம்.

**வேழினி**

## தொடர் - 07

எல்லாம் முடித்துக்கொண்டு வெளியே வந்தபோது எட்டுமணி இதமான காலை வெயில் வரவில்லை. விமான நிலையத்தின் கரிய கட்டடமும் அதன் அயலும், 'முன்னால்' நின்ற பாம் மரங்களும் வாகனங்களும் ஏதோ ஒரு அமைதியில் பொதிந்து கிடக்கக் காணப்பட்டன. எமது வழிகாட்டியும் வான் சாரதியும்



அடுத்த ஒரு வாரத்துக்கு எமக்குப் பொறுப்பாக இருக்கப் போகிறவருமான வரை அலிஸ் அறிமுகப்படுத்தினார். ஒரு ஆப்ரிக்கரை எதிர்பார்த்த எனக்கு ஒரு இந்தியரைச் சந்திக்க நேர்ந்தது. வியப்பாக இருந்தது. ஆனால், நிறத்திலும் தோற்றத்திலும் ஒரு வட இந்தியரைப்போல் காட்சியளித்த திரு அயூப் ஹீசைன், உண்மையிலேயே ஒரு கென்யர்தான். அவர் எப்போதும் அணிந்திருக்கிற கிரிக்கெட் தொப்பியைக் கழற்ற நேர்கிற வேளைகளில் இதை ஒப்புக்கொள்வது சுலபமாயிருக்கும், ஆபிரிக்கர்களுக்கேயுரிய சிறுசுருள் முடி.தமது தாய் வழிப்பாட்டன்,தந்தை வழிப்பாட்டன், இருவருமே இந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்று அயூப் பிறகு சொன்னார். காட்டுப்பாதைகளிலும் மலைப்பாதைகளிலும் அந்தப் புதிய நிசான்-கரவனை அதிவேகத்தில் விரட்டப்போகிற ஒரு ஆளாகத் தெரிகிறாரா என்று அயூப்பை நான் எச்சரிக்கையாக நோட்டம் விட்டேன். அப்படித் தெரியவில்லை.

வானில் உட்கார்ந்து எங்கள் பயண ஒழுங்கை ஏற்கெனவே எமக்குக் கொழும்பில் அச்சிட்டுத்தரப் பட்டிருந்ததை- விளக்கினார் அலிஸ் அதில் ஒரு மாற்றம் நைரோபியில் முழுதாகச் செலவிட வேண்டிய ஒருநாள். மாஸாய் மாறாவில் மேலதிகமாக செலவிடவென மாற்றப்பட்டிருந்தது. பழையபடியே மாற்ற முடியாதாவெனக் கேட்டேன். 'இல்லை மஸாய் மாறாவில்தான் நீங்கள் பார்க்க வேண்டியவை அதிகம். அதற்காகத்தான் இந்த மாற்றம்' என்றார் அலிஸ். எனக்கு அதில் பெரிதாக ஏமாற்ற மொன்றுமில்லை. எந்த நாட்டிலென்றாலும் பெருநகரங்கள் எல்லாம் ஒரேமாதிரித்தான் இருக்கும் அது ஆப்பிரிக்காவாயிருந்தாலென்ன,ஆசியா அல்லது ஐரோப்பாவாக இருந்தாலென்ன. உண்மையில் ஒரு நாட்டைப்பார்ப்பதானால் அதன் ஊர்கள்,பட்டினங்களைப் பார்க்க வேண்டும் என்பது என் அபிப்பிராயம். ஆனால், ஒரு விஷயம் உதைத்தது: நைரோபியிலுள்ள புத்தகக்கடைகளைச் சுற்றுகிற சங்கதி. சொன்னேன். 'கவலைப்படாதீர்கள், நீங்கள் திரும்புகிற அன்று மத்தியானந்தான் விமான நிலையத்திற்குப் போக வேண்டும். நய்வாஷாவிலிருந்துகாலையில் கொஞ்சம் வேளைக்கே வந்துவிட்டீர்களென்றால், நைரோபியில் மூன்றுநாலு மணித்தியாலங்கள் செலவிடலாம். பிரச்சினை இல்லை! ஹகுணா மட்டாட்டா!

க்வாம்பாயிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டோம். திரும்புகிற அன்று கட்டாயம் விமானநிலையத்தில் சந்திப்பதாகக் கூறி விடைபெற்றார். அலிஸை, நைரோபி நகரில் அவரது அலுவலகத்தில் இறக்கிவிட்டு விட்டு எங்கள் பயணந் தொடரவிருந்தது. அந்த அலுவலகம் இருந்த தெருவின் பெயர் மமா எங்கினா தெரு. நாலு தடவைகள் மணமுடித்த கென்யாட்டாவின் நாலாவது மனைவியின் பெயர்தான், மமா எங்கினா! கென்யாட்டா அவன்யூ என்றும் ஒரு தெரு இருந்தது. இதேபோல, அரப்மொய் வீதி, கிமாதி தெரு என்றெல்லாம் நகரில் பெயர்ப்பலகைகளைக் காண முடிந்தது. கிமாதி என்ற டெடான் கிமாதி, விடுதலைப் போராட்ட வீரன்.

அலிஸின் அலுவலகம் நகர மையத்தை ஒட்டி இருந்தது. அந்த அலுவலகத்திற்குப் பக்கத்திலேயே புகைப்படக் கருவிகள் நிலையமொன்றிருந்ததைக் கண்டதுமே, செல்வா, விமுக்தி இருவருக்கும் சந்தோஷம்.விமுக்தியின் கமராவில் ஒரு சிறிய பிழை திருத்த வேண்டியிருந்தது. செல்வாவுக்கு ஒரு வீடியோ கமராவை வாடகைக்கு எடுக்கும் நோக்கமிருந்தது. கடைக்காரர் ஒரு வெள்ளைக்காரக் கிழவர், குடியேற்றவாசிகளின் பரம்பரையைச் சேர்ந்தவர். கென்யப் பிரஜை. இப்படிப் பல வெள்ளையர்களான கென்யப் பிரஜைகளையும் ஆங்காங்கு சந்திக்க நேர்ந்தது. அவர்களிற் பெரும்பாலானோர், தம் முன்னோரின் அடியொற்றி, பெருந் தோட்டப் பயிர்ச் செய்கைகளிலீடுபட்டிருப்பவர்கள்.

அலிஸ், பிணை நிற்க முன் வந்ததன் பேரில் கிழவர் ஒரு வீடியோ கமராவை வாடகைக்குத் தர ஒப்புக்கொண்டது மட்டுமன்றி, எப்படி அதைக் கையாள்வது என்பதைப் பற்றி ஒரு பெரிய பாடம் நடத்தவும் தொடங்கிவிட்டார். நான் ஜெர்க்கினை இறுக மாட்டிக் கொண்டு வெளியே வந்தேன். தெருவில், கடைக்கு முன்னால் வானுடன் அயூப் நின்றிருந்தமை துணிவு தந்தது. அயூப்புடன் ஒரு மனிதர் பேசிக் கொண்டு நின்றார். காலை நேரத் தெரு களைகட்டியிருந்தது. அகன்ற, சீரான நடைபாதைகளில் நிறையப் பேர் அங்குமிங்கும் விரைந்து கொண்டிருந்தார்கள். அயூப்புடன் பேசிக்கொண்டிருந்தவர் முற்றுமுழுதாக ஆசிரியராகவே இருந்தார். எனக்கு நன்கு பரிச்சயமான ஒருவரை அவரின் தோற்றமும்,முகமும் நினைவுபடுத்தின. யாரைப் போல என்று உடனே நினைவுக்கு வரவில்லை. ஆனால், இப் போது யோசிக்கிற போது, அந்த மனிதரின் சாயலில் இங்கு பலரிருப் பது ஞாபகம் வருகிறது. 'இவர், மிஸ்டர் அலிகான், எங்கள் போக்கு வரத்து விசயங்களுக்குப் பொறுப் பானவர்',-அயூப் 'எங்கள' என்றது. 'அஃப்ரிக்கன் க்வெஸ்ற்' நிறுவனத்தை' அவர் அங்கே நிரந்தரப் பணியாளர்.

அலிகானும் இந்திய வம்சாவளியில் வந்தவர். கென்யப் பிரஜைகளாகிவிட்டவர்களின் மூன்றாந் தலைமுறையைச் சேர்ந்தவர். அப்படி நிறைய இந்திய வம்சாவளியினர் கென்யாவில்-குறிப்பாக, நைரோபியில் வசிப்பதாக அலிகான் சொன்னார். அதில் அநேகர் இந்துக்கள். உத்தரப் பிரதேசம், குஜராத் போன்ற இடங்களிலிருந்து வந்தோரின் வழித் தோன்றல்கள். நைரோபியில் பல கடைகள் அவர்களுக்குச் சொந்தமானவை என்றார் அலிகான். இதை நானும் பின்னர் நன்கறிந்துகொள்ள முடிந்தது. திரும்புற அன்று புத்தகங்கள் தேடி, ஒவ்வொன்றாய் ஏறி இறங்கிய அத்தனை பெரிய புத்தகக் கடைகளும் இந்தியர்களுடையவை. அதைவிட நான் போன ஒரேயொரு ஆடை விற்பனை நிலையமும் கூட ஒரு இந்தியருடையதாயிருந்தது. இவற்றை விட,நக்குறு,நய்வாஷா போன்ற நகர்களில் போக நேர்ந்த கடைகளும்கூட இந்தியர்களுடையவையாகவே இருந்தன. அந்தக் கடைக்காரர்களும் என்னை இந்தியனாகவே எண்ணி நடத்தியமை தெரிந்தது; ஆனால், அதனால், எனக்கு வாய்த்தது லாபமா,நட்டமா என்பது தெரியவில்லை!

கென்யாவின் பெருவர்த்தகம் யார் கையில் இருக்கிறதோ தெரியாது, இந்த இடை மட்ட வர்த்தகத்தில் இந்திய வம்சா வழியினர் நிறையவே ஈடுபட்டிருப்பது வெளிப்படை. இரண்டு மூன்று நாட்களின் பின் நக்குறுவில் இருந்து மாஸாய் மாறா நோக்கிப் போய்க்கொண்டு இருக்கையில், நறொக் நகர் தாண்டியதும் தென்பட்ட ஒரு பெரிய சீமெந்து ஆலையைக்காட்டி அதுவும் இந்திய வம்சா வழியினருடையது என்று அயூப் கூறினார். இவற்றையெல்லாம் அவதானித்த போது, ங்குகியின்,? 'அழாதே,குழந்தாய்' நாவலில் விபரமாகச் சித்திரிக்கப்படுகின்ற- ஏனைய படைப்புக்கள் சிலவற்றிலும் கூட இடம் பெறும்-இந்திய வம்சா வழி வர்த்தக சமூகம், கென்யாவில் பிரிக்கமுடியாதபடி பின்னிப்பிணைந்து, அதன் ஒரு அங்கமாகவே ஆகி விட்டமையை அறிய முடிந்தது.

நான் அயூப், அலிகான் மூவரும் நடைபாதையில் பேசிக் கொண்டிருந்த போது எம்மைச் சுற்றி நைரோபி நகர் சுறு சுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது, வேகவேகமாக எம்மைத் தாண்டிக்கொண்டிருந்தவர்கள் சாதாரண நடுத்தர மற்றும் கீழ்த் தட்டு மக்களாகவே தெரிந்தார்கள். இங்கே அதே போன்ற எங்களவர்கள் அணிகிற மாதிரி நாளாந்த ஆங்கிலபாணி உடை கூடுதலாக, மேலே ஒரு ஜெக்கினோ, ஸ்வெற்றோ, கோட்டோ இருந்தது. அனேகமான பெண்கள் ஆபிரிக்க பாணி ஸ்காஃப் தலைக்குட்டை ஒன்றைச் சுற்றியிருந்தார்கள். கொழும்பில்,யோர்க் வீதியில் நின்று கொண்டிருப்பதைப் போன்ற ஒரு உணர்வே ஏற்பட்டது என்றாலும் கொழும்பிலும் பார்க்க இங்கு நடைபாதைகள் சீராகவும் தெருப் போக்கு வரத்து ஒழுங்காகவும் அமைதியாகவுமிருந்தமையைத் தெளிவாக உணர முடிந்தது. இன்னொரு முக்கியமான விடயம் காலநிலை, எங்கள் நாட்டைப்போல புழுதியையும் வெக்கையையும் கிளப்புகின்ற வெய்யில் அங்கே இல்லை, வெய்யிலெறித்தாலும் நுவரேலியாவில் இருக்கிற மாதிரித்தானிருக்கும் என ஏற்கெனவே கென்யா சென்று வந்த சிலரிடம் இருந்து அறிந்தேன். ஆபிரிக்கா என்றதுமே வெய்யில் கருக்கும் என்றிருந்த எனக்கு இது அதிசயமாய் இருந்தது என்றாலும் நான் அங்கிருந்த ஒரு வாரமும் காலநிலை அப்படியேதான்-அவர்கள் குறிப்பிட்ட மாதிரித்தான்-இருந்தது. காடு, மேடு,வன,வனாந்தரமெல்லாம் சுற்றிவந்த போதும் அந்த வெய்யில் மிதமாகத்தானிருந்தது அந்த மிதம் இந்த நகர்ச் சூழலுக்கும் ஒரு இதத்தைக் கொடுத்தேயிருந்தது.

(தொடரும்)






## நாம்

கல்விக் கடலிலே
கல்லூரி மிதவையில்
நாம் இன்று நிற்கின்றோம்
பிரிவுத்துயரைச் சுமந்து
பிரியாத வரம் வேண்டி
பிரார்த்திக்கின்றோம்
சேர்ந்த மனங்களும் சேரத்துடிக்கும்
மனங்களும் ஒன்று கூடலில்
ஓரமாய் நின்று அழப் போவதை
நினைத்து- நாம் மௌனமாய்
அழுது கொள்கிறோம்.
நட்புக்குள் காதல் வளர்த்தும்
நட்புக்கு முதலிடம் கொடுத்தும்
காதலைக் காட்டாமல்
காதலுடன் வாழ்பவர்களை
அதிகார வர்க்கங்களால்
எமக்கேற்பட்ட அராஜகங்கள்
எமது ஒற்றுமைக்குள்
ஒடுங்கிப் போவதை
நினைவு கூறுகின்றோம்
பிரிவுத் துயரால் வேகும்-என்
இதயம் கூறும் இறுதி வார்த்தை
"பறவைகளுக்கு வியர்ப்பதில்லை
பாசங்கள் தோற்பதில்லை"
அன்றியும் நாம் கொண்ட- நட்பு
நூறு ஆண்டுகள் காலம்- நட்பாக
பிரியாத வரம் வேண்டி
பிரார்த்திக்கின்றேன்.

T.வீகுதா

## சமாதானமே வா

போரின் கோரத்தால்
புண்ணாகியது
என் உடல் மாத்திரமல்ல
உள்ளமும் தான்
வேதனைகளை தீர்க்க
விரைந்து வா சமாதானமே
உனக்காக வழி மேல்
விழி வைத்துக் காத்திருக்கிறேன்.

ஜெ.ஜெயூரன்

## சந்தோசம்

குழந்தையை அணைத்து
கொஞ்சிக் குலாவுவது
தாயவளின் சந்தோஷம்.

நிலவைப் பார்த்து
கைதட்டி சிரிப்பது
குழந்தையின் சந்தோஷம்.

மழை முகிலைக் கண்டு
தோகை விரித்தாடுவது
மயிலின் சந்தோஷம்.

நீர் நிலைகள் தனிலே
துள்ளிக்குதிப்பது
மீன்களின் சந்தோஷம்.

இயற்கையின் ஒவ்வொரு
அசைவுகளையும் கண்டு இரசிப்பது
மனித மனங்களின் சந்தோஷம்.

போர்ச்சூழல் அற்ற
நிரந்தர சமாதானம்
நம் நாட்டு மக்களின்
சந்தோஷம்.

உ.வசந்தகுமார்

## அம்மணியே போடாதே வேசம்

சமாதானமே என் சுவாசம் என்று— அம்மணியே
போடாதே பல பல வேசம்
அன்று செம்மணியில் நீ செய்தாய் நாசம்— வம்
ஊர்சிதைந்து வேரறுந்து தொலைவதாய் முகவரியை...
உன் பரம்பரையில் ஊறியது இனத்துவேசம்—அதை
நிலைநாட்ட நடிக்கிறாய் பகட்டு...
தமிழ் அழிப்பே உன் உபதேசம்—உலகிலே
போட்டாய் எமக்கு பயங்கர கோசம்...
சர்வதேசமே கிழித்தது உன் முகக்கவசம்—இனி
அரசியலில் உனக்கில்லை சிம்மாசனம்...
அறியாமல் கொள்ளாதே பதவி மோகம்—உனை
அனுப்பிடுவார் மக்கள் பரலோகம்.

அ.அருள்

## சொல்ல வேண்டி வந்த பொய்கள்

ஒருநாள் நானும் எனது நண்பனும் புளியம்பொக்கணை ஆலய திருவிழாவிற்கு கிராமத்தில் இருந்து புறப்படவிருக்கும் உழவியந்திரத்தில் ஏறிக்கொண்டோம் பெட்டியில் முன்பே எல்லோரும் இடத்தை பிடித்துக்கொண்டதால் நண்பனும் நானும் இன்னும் மூன்று பேருமாக பெட்டியின் கதவை சங்கிலியால் கொழுவிட்டு அதன் மீது அமர்ந்துகொண்டோம் நேரம் மாலை மூன்று மணி ஆலயம் நோக்கி எமது பயணம் தொடர்ந்தது இன்னும் நாம் ஆலயம் சென்றடைய நாற்பது கிலோ மீற்றர் தூரம் இருந்தது உழவியந்திரம் கிடங்கு மேடு எல்லாம் வழுந்து ஏறித்தான் பயணத்தைத் தொடர்ந்தது நாங்கள் ஏறும் போது இருந்த நெருக்கம் இதனால் சற்று தளர்ந்து நாம் இருந்து போவதற்கு குசியாக இருந்தது,எனது நண்பன் கொஞ்சம் பயக்கெடுதி பிடிச்சவன் எங்கள் பகுதியில் விமானம் சுற்றினாலென்றால் சாக்கை தலையில் போர்த்திக்கொண்டு இருப்பான் "ஏன் இப்படி" என்று கேட்டால் சொல்வான் அவன் குண்டு ஏதும் தள்ளினா தப்புவதற்குத்தான் வேறெதுக்கு! உருமறைப்பு பயிற்சி ஏதும் செய்யிறனெண்டா கேக்கிறாய் என பயத்துடன் கடுகடுப்பான்! இப்போது நாம் பயணிக்கும் உழவியந்திரம் ஒருவித சத்தத்துடன் அடங்கி அடங்கி வேகம் குறைந்தது. அதன் சைலஞ்சரில் இருந்து தீப்பொறி சடுதியாய் கிளம்பியது இது என்ன நாசமடா சிலர் முனுமுனுக்க உதடுகள் பல படபடக்க என் நெஞ்சம் பறிதவிக்க பறந்து வரும் பொறிகளை சிலர் தடுக்க இதைப்பார்த்த நண்பன் இறங்கி ஓட்டமெடுக்க, நில்லுங்கோ நில்லுங்கோ வாகனத்தை நிப்பாட்டுங்கோ மூதாட்டி ஒருவர் உரக்கக்கத்த உழவியந்திரம் ஐந்நூறு மீற்றர் நகர்ந்து நிற்க ஓடி வா மோனே... மோனே ஓடி வா... ஏனடா தம்பி இதுக்குப்போய் நீ... பாஞ்சு விழுந்து ஓடினாய் சரி...சரி...என்ற கத சரி இப்ப உந்த மனிசி என்ர மானத்த வாங்கப்போகுது இதென்ன துன்பமடா இதில ஏறினதுதான் பிசகு, பேசாமல் நடந்து போயிருக்கலாம் முகத்தை சுழித்தவன் அ... அது ஒண்டுமில்ல பாட்டி உங்களுக்கு தெரியாதே என்ர செருப்பெல்லே விழுந்துபோச்சுது "பயத்தில பந்தாய் பாய்ந்தவன்"அதுதான் எடுக்க இறங்கினன் என்முன்னே பாட்டியிடம் பச்சை பச்சையாய் பொய்யை கக்கிவிட்டு துணிஞ்ச மனுசன் மாதிரி தப்பித்துக்கொண்டான் நானும் வேற என்ன செய்யிறது நண்பனின் பொய்யை ஆமோதித்தது தான் மிச்சம்.

ஐ.ஐ.சாந்தனூரப்பன

## வெற்றி பெற முயற்சியுங்கள்

வாழ்க்கை என்பது மனிதனிற்கு மிக முக்கியமானது, அத்துடன் அது விரும்பியோ, விரும்பாமலோ எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படவேண்டியது. வந்து பிறந்துவிட்டோம் வாழத்தெரியவில்லையே என ஏங்கிக்கொண்டு சமூக வாழ்வில் இருந்து விலகிச்சென்று வாழ்வது உண்மையான வாழ்க்கையாக அமைந்துவிடாது. எல்லோரும் வசதியாக வாழ்கிறார்களே, அதுபோல எம்மாலும் வாழமுடியாதா? என கவலைப்பட்டுக்கொண்டு மனதினைத் தாழ்த்திக்கொள்ளத்தேவையில்லை எம்முடைய பொருளாதார வளர்ச்சிக்கேற்ப எமது வாழ்க்கையை அமைத்துக்கொண்டு சிறப்புடன் வாழப்பழகிக்கொள்ளவேண்டும்.

வாழ்க்கையில் வெற்றிபெறவேண்டுமாயின் அவனது வாழ்வில் முயற்சி என்பது இன்றியமையாத ஒன்றாக அமைந்துவிடுகிறது. எந்த ஒரு மனிதனின் வெற்றிக்குப் பின்னாலும் முயற்சியே அத்திவாரமாக அமைகின்றது. முயற்சி இல்லாதவனின் வாழ்க்கை துடுப்பின்றி கரை காணத்து டிக்கும் படகினைப் போன்றதாகும். எனவே முயற்சி இல்லாத இலட் சியப்பாதை வெறும் காணல் நீராகவே அமைந்துவிடுகிறது. நீங்கள் வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுமானால் உங்களையும் உங்கள் செயல்களையும் தாழ்த்திக்கொள்ளக்கூடாது. இப்படி தாழ்த்திக்கொண்டுவிட்டால். உங்களிடம் இருக்கும் நம்பிக்கை குறைந்து போய்விடும். உங்கள் குறைகளை மட்டுமே சுட்டிக்காட்டுகின்றவர்கள் உங்களை வேதனைப்படுத்துகின்றவர்கள். உங்களைப்பற்றி பொல்லாப்பு பேசுபவர் களிடம் உசாராக இருங்கள். அவர்களிடம் இருந்து கூடியபாகம் விலகி நடந்துகொள்வதே எமக்கு நல்லது.



மற்றவர்கள் எவ்வளவுநேரம் உழைக்கிறார்கள் என்பதை உணர்ந்து அவர்களைவிட கடுமையான உழைப்பிற்கு உங்களை பக்குவப்படுத்திக்கொள்ளுங்கள். தவறுகள் இல்லாமல் வாழமுடியாது. அதற்காக தவறே வாழ்க்கையாகிவிடக்கூடாது. ஒருதடவை ஏற்படும் தவறை மறுமுறையும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு நாளையும் மகிழ்ச்சியோடும் உற்சாகத்தோடும் வரவேற்றிடுங்கள். மற்றவர்களை கெடுக்கவோ, அல்லது வஞ்சிக்கவோ முயற்சிக்க வேண்டாம். அது உங்களின் எதிர்கால வளர்ச்சியை அறவே சாய்த்து வீழ்த்தக்கூடியது. நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலிலும் எதிர்மறையானவற்றைத் தவிர்த்து விடுங்கள். அனாவசியமான கற்பனைகள், செயல்கள் உங்கள் செயல்த்திறனை மழுங்கடித்துவிடக்கூடியன. யாராவது உங்களுக்கு உதவி செய்தால் நன்றி உணர்வோடு பாராட்டுங்கள் நன்றி பாராட்டினால் அவர்கள் எம்மிடம் உதவி கேட்டுவிடுவார்களோ எனப் பயப்படத்தேவையில்லை, அவர்கள் துன்பப்படும் வேளைகளில் ஆறுதல் அளித்து தேவை ஏற்படும் பட்சத்தில் அவர்கள் கேட்காமலேயே எம்மால் இயன்றதை அவர்களிற்கு செய்து எமது உறவை மேலும் பலப்படுத்திக்கொள்ளவேண்டும். நாம் மற்றவர்களுக்கு பணிவிடை செய்யும் போது எதனையும் எதிர்பார்த்து செய்யக்கூடாது பலனை எதிர்பாராமல் பணிவிடை புரிபவனே உயர்வுடையவனாகிறான்.மற்றவர்களை எவ்வாறு நம்புவது என நினைக்கிறீர்களா, அதற்கு முதலில் நீங்கள் உங்களிற்கு நம்பிக்கையானவரா நேர்மையானவரா எனக் கேட்டுக்கொண்டு... அப்படி நீங்கள் இருந்தால் மற்றவர்களிடம் அனுகிப்பழகும்போது அவரின் கதைப்பேச்சுக்கள், நடவடிக்கை என்பவற்றின் மூலம் அவரின் உள்ளக்கிடக்கைகளை அறிந்துகொள்வது சுலபமாகிவிடுகிறது.

இவ்வாறு பலதரப்பட்ட விடயங்களின் மூலம் உங்களையும் சமூகத்தையும் விளங்கிக்கொண்டு உங்கள் இலட்சியம் என்ன என்பததை முடிவு செய்து கொண்டு அதை அடைய நாள்தோறும் இடைவிடாது முயற்சியை மேற்கொள்ளுங்கள்.

"விடா முயற்சி வீண்பயனல்ல"
"முயற்சி மேல் முயற்சி செய்தால் நாமும் ஓர் நாள் இறக்கை கட்டி விண்ணில் பறக்கலாம்"

மு.வ.சுதா,

## குறுக்கெழுத்துப்போட்டி - 59

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 சே | ் | ர | ல் | | 06 அ | ந் |
| | 09 | | | | | |
| 15 | | 17 | | | 20 | |
| | 23 | 24 | | | | 28 |
| 29 | | | | | | |
| | | | 39 | | | |
| | | | 46 | | | |

பெயர்:-.......................................
முகவரி:-.......................................
...............................................
...............................................

### இடமிருந்து வலம்

01. இலங்கையில் பரபரப்புடன் எதிர்பார்க்கப்படுவது.
06. தொடக்கம்.
09. தாமதம்.
15. யானை (இறுதி எழுத்தை இழந்துள்ளது)
20. முக்கனிகளில் ஒன்று.
24. வெயில்காலம்.
29. நட்சத்திரங்களில் ஒன்று.
39. செருக்கு.
46. சோறு

### மேலிருந்து கீழ்

01. மரங்களில் ஒன்று.
06. நீர்ப்பூ.
17. உடன் பிறந்தவன்.
23. மரக்கறிவகைகளில் ஒன்று.
28. சந்திரன் (தலைகீழாக உள்ளது.)
29. நெல்லில் இருந்து பெறப்படுவது.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.57 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. ஆகாரம்.
08. அண்ணி.
12., பந்து.
18. தியாகம்.
43. ஆனி.
48. அம்மா

**மேலிருந்து கீழ்**

01. ஆண்டவன்.
02. காணிக்கை.
06. இந்திரன்.
10. அவரோகனம்.
12. பகலவன்.
25. காமதேனு.
28. மரணம்.
37. கனி.

**இளையவர்களே!**
**மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.**

குறுக்கெழுத்துப்போட்டி,இல.59
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.57 இன் பரிசுக்குரியவர்

ப.ஜெயசுகி, வாசுகி,
பாரதி சிறுவர் இல்லம்,
வள்ளிபுனம்,
புதுக்குடியிருப்பு.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.57 இன், பாராட்டுக்குரியவர்கள்.

01. நந்தினி, அக்கராயன்.ப.நோ.கூ. சங்கம், அக்கராயன்.
02. ப. கிருஷ்ணபிள்ளை, முத்துஜயன்கட்டு, ஒட்டுசுட்டான்.
03. வி. பத்மாவதி, குமுளமுனை, முள்ளியவளை.
04. ஜெ. நிர்மலகாந்தி, 8ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
05. இ. சிவசிறிதரன், நாயாறு, முல்லைத்தீவு.
06. க. பத்மசிறி, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா.




சமாதான இடைவெளி, சமகால சாதக இடைவெளியா? பாதக இடைவெளியா? அவரவர் அனுபவ, அறிவு நிலை கொண்டு பல கணிப்புக்கள், வாசிப்புகள்.

கணிப்புக்களின் பெறுமானத்திற்கு காலம்தான் பதில் சொல்லும் ஹைக்கூ கவிதை போல

நிவேத்திரா! ஆக்கிரமிப்பின் அத்தனை அவலங்களுக்குள்ளும் சுடர்விட்டெரிந்து கொண்டிருந்த, சுடர்விட்டெரிந்து கொண்டிருக்கும் சுடர் அவள்.

அன்று 19.02.03 ஈழநாதத்தில் பணியாளர் கௌரவிப்பில் பங்கேற்கப் போயிருந்தேன்.

அருகில் தான் எங்கோ நிவேத்திரா இருக்கின்றாள் என்று தெரியும். சரியான இடத்திற்கே போயிருந்தேன்.

நிகழ்வு 11.00 மணிக்கு ஆரம்பிக்க இருப்பதாய் தெரிந்தது. 10.00மணிக்கே நான் ஆஜராகியிருந்தேன்.

கிடைத்த அவகாசத்தில் அவள் வீடு தேடினேன். வீட்டிலேயே இருந்தாள். ரியூசன் பின்னேரம் என்பதால் நல்லதாய் போயிற்று.

"நிவே எப்படியம்மா இருக்கிறாய்" சம்பிரதாயக்கேள்வி. சம்பிரதாய வார்த்தைகளை சம்பிரதாய பூர்வமான அநாவசிய சடங்குகளை தவிர்த்து விடுவதாயே இவ்வருடத்தீர்மானம்.சில வேளைகளில் தொட்டில் பழக்கமாய் வழுக்கிவிடுகின்றது.

''பொடி''யைப்பார்த்தா தெரியேல்ல. சித்தியின்ர சாப்பாட்டில ஜெயலலிதா மாதிரி இல்ல. அபிநயத்துக்காட்டினாள். அபிநய சுந்தரி. அறிவுச்சுடர் அவள்.

அவளது நகைச்சுவை உணர்வு எனக்கு எப்பவும் பிடிக்கும். அது மட்டுமில்லை அவள் நகர்வுகள், நடத்தைகள் ஒவ்வொன்றிலும் துல்லியம் தெறிக்கும்.

அறிவு,ஆளுமை, அனுபவம் சுடர் விடும் அற்புதக் குழந்தை அவள்.

"என்ன அல்லி ராணி! இதுக்குள்ளயும் வாகனங்கள் வந்து போகுதோ"

வாகனம் வந்து போயிருக்கும் தடம் பார்த்துக்கேட்டேன்.

"அன்ரி என்ன நினைச்சீங்கள். முன்ன போலவே இப்ப சமாதான இடைவெளி! மூச்சுவிட வேண்டாம். நேற்று என் பென் பிறண்ட் (Pen Friend) வந்து போனவர்"

அவள் தன் பேனா நண்பன் காலித்தொடர்பாய் எனக்கு ஏற்கெனவே எழுதியிருந்தாள்.

"எப்பிடியிருந்தார்.... என்னவாம்"

"அதையேன் கேக்கிறீங்கள் அன்ரி" வீட்ட போட்டு அப்பத்தான் வாறன். மூச்சு விடுறகாலம் எண்டு பேர் தான் நான் முக்கி முக்கித்தான் மூச்சு விடுறன். முக்கோணப்பயணம் அன்ரி.

முழங்காவில்லதானே கடைசியா இடம்பெயர்ந்து இருந்தனாங்கள். இப்ப வீட்ட போகலாம் எண்டு அம்மாவும் அப்பாவும் பூநகரிக்கு போயிட்டினம். அப்பம்மா முழங்காவில்லதான் இருக்கிறா. போற எண்டா என்ன! 'ஆகாஷி' மாதிரி நினைச்ச உடன போய்க் குதிக்க முடியுமோ. அடுக்குகள் வேண்டாம்? இந்த வீட்டில அப்பம்மா:

அங்க ஒழுங்கு படுத்தும் வரைக்கும் நான் படிப்பிற்காய் இஞ்ச.

கைவிடப்பட்டு இருந்த இடம் தானே! அதால தானோ என்னவோ ஒத்துக் கொள்ளேல்ல. காய்ச்சல் ஒரு பக்கம்: கண் வருத்தம் ஒரு பக்கம். கண்ணெல்லாம் வீங்கி முட்டி பொக்கான் மாதிரி பார்க்கவே பாவமா இருக்கன்ரி. வயது போன காலத்தில உதவியளும் இல்லாம ஆளுக்கொரு திக்கில என்ன அவலமோ! எங்களுக்கு என்ன சாதகம் அன்ரி. எல்லாமே எப்பவும் எங்களுக்கு பாதகமா இருக்கன்ரி.

"ஏன் பிள்ளை வெய்யில் அதிகமோ"

''என்ன அன்ரி அங்க பிறந்து வளர்ந்த எங்களுக்கு....''

"பேந்தென்ன பிள்ளை"

"பாவனையில்லாம தண்ணி மாறிப்போட்டுது, காடு வளர்ந்து போட்டுது கால் வைக்கப்பயமாயும் கிடக்கு! ' எந்தப் புற்றுக்க என்ன பாம்பிருக்கோ எண்ட காலம் போய்' எந்த இடத்தில எந்தக்கண்ணி இருக்கோ' எண்ட பயம். மொட்டையடிச்ச வழுக்கைத்தலை போல கோப்பிசம் கூரையில்லாம கட்டட வெக்கை கொல்லுறது. ஒருபுறம் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைச்சுக்கட்டின வீட்டை திருத்திய மைக்கவும் நாதியற்று, கண்ணுக்கு முன்னால வெடித்துச்சிதறுதே எண்ட வேதனையுமா அதுகளப் பொல்லைப்பிடிச்சுக்கொண்டு உதறி உதறி நடக்கிற மாதிரி நிலையில அவையள். அவதானமா தம்புடிச்சு முழுப்பலத்தையும் அவையில காட்டாமல் சமாளிச்சு இருந்தா உண்டு. இல்ல நஷ்டம் தான்.

இப்ப அவையும் இல்ல.

என்ன நாங்கள் கண்டு பிடிக்காத கண்டு பிடிப்புகளோ! மாவுக்கு கீழ கொஞ்ச நேரமிருந்து ஆசுவாசமாய்ப்படிக்கலாமெண்டு இரண்டு காட்டுக்கட்டை நட்டு நோர்வே போல இரண்டையும் இணைச்சு ஒரு இருக்கை அமைச்சிருந்தன் அதைத்தான் இப்ப காட்ட முடிஞ்சுது. காட்டினன்.

காலித்துக்கு கஷ்ரமா இருக்காட்டியும் அதிர்ச்சியா ஆச்சரியமா இருந்திருக்க வேணும்.

பாக்க விசர் வருகுது அன்ரி.

எல்லாம் சுடுகாடாக்கிடக்கு. புனர்வாழ்வு அது இது என்று கதையளவிலேயே ஒழிய நடைமுறையில ஒண்டையும் காணோமே. இராசநாயகம் அங்கிளின்ர அக்கறையில தான் ஏதோ அங்கினேக்க நடக்குது!

ஒரு அறைக்கு தகரத்தைப் போட்டுட்டு அல்லோல கல்லோலப் படுகுதுகள்.

"மழை விட்டும் தூவாணம் போகாத மாதிரித்தான்" எங்கட வாழ்க்கை போகுது அன்ரி.

அன்ரி காலித்தின்ர கதையைக்கேளுங்கோவன்...

அவையின்ர 'கயஸை' த்தாண்டிக்கொண்டுதான் நான் வந்தனான். காலித் விசாரிச்சுக் கொண்டு வாறார்.

என்னட்டை வந்து கேட்டார். "05ம்இலக்க வீடு..."

**அருந்ததி**

"நாங்கள் இருக்கிற வீடுதான்"

சித்தியின்ர ஆக்களோ அல்லது வீட்டுக்காறராகவோ இருக்கலாம். ஊசலாடிக் கொண்டிருந்த உறவுகள் இப்பதானே உறவு கொள்கின்றன என்று நினைத்துக்கொள்கின்றேன்.

"நிவேத்திரா..."

"நிவேத்திராவா நான் தான்..."

அதற்குப்பிறகு தான் ஒன்று சேர்ந்து கசக்கிப்பார்க்கிறன் 'காலித்' என்று விளங்கிச்சு. வீட்டை கூட்டிக் கொண்டு வந்தா எங்க...

நேற்றுத்தான் பக்கத்து வீட்டில நீராட்டு விழா எண்டு அகதி வாழ்க்கை வாழ்ந்து அல்லாடிக் கொண்டிருந்த அவைகளும் (கதிரைகளும்) ஏற்றிப்போட்டினம்.

எத்தனை தரம் அவையும் இடம் பெயர்ந்திட்டினம். அடிக்கடி ஏற்றுறதும் இறக்குறதும் கிழவன்

எனக்கும் ஆச்சரியம் தான். அதிர்ச்சி இல்லை. எங்களிட்ட எங்கால அதிர்ச்சி. அதிர்ச்சிக்கு மேல அதிர்ச்சியா வந்து அதுவும் எங்கேயோ காணாமல் போனோர் பட்டியலில அல்லோ போய்ச் சேர்ந்துட்டுது.

எது அதிச்சி எது அமைதி எண்டு தெரியாமல் வாழப்பழக்கப் பட்டிட்டம்.

காலித்தின்ர படம் பார்த்தனான் தான். ஆனா அருகில பாக்கேக்க வித்தியாசம் அதிகமாயிருக்கு.

ஆள் பெரிய கனவான் போல ஜிம் என்ற தோற்றத்தில கை நிறைய பொருட்களும், பொதிகளும் ரியூட்டுகளுமா கிறிஸ்மஸ் பப்பா போல! பொதிகள நட்ப விலகிப் பார்த்தா ஆர்மிரோஜ் போல. நட்ப மட்டும் விலக்கிப்பார்த்தா அகாசி போல வந்து நிண்டார்.

காலித்தோட கூட வந்த பிறண்ட்ஸ் உள்ள வரேல்ல கயஸிலேயே இருந்திட்டினம். காலித் மட்டும் தான் உள்ள வந்து இருந்தார். எனக்கொண்டும் கதைக்கத் தோன்றேல்ல. களைச்சுப் போனதாலோ என்னவோ ஒண்டுமே கதைக்கேல்ல அன்ரி.

"அன்ரி இந்தப்பம்பலையும் கேளுங்கோ!"

அலுமாரிக் கண்ணாடிகளெல்லாம் நூற்றெட்டுத்தடவை ஏத்தி இறக்கினதால உடைஞ்சு போச்சுத் தானே! கண்ணாடிக்குப்பதிலா தகரத்த வைச்சு சாத்தியிருந்தம்.

சோடா குடுப்பம் எண்டு தகரத்தை எடுத்து வைச்சிட்டு கிளாசை எடுத்தன். காலித் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

எனக்கு இந்திரன் சொன்னது நினைவுக்கு வந்தது.

இந்திரன் தெரியும் தானே அன்ரி. முறுகண்டியில இடம் பெயர்ந்திருக்கேக்க எங்கன்ர வீட்டுக்கு பக்கத்தில இருந்த பாலசிங்கம் அங்கிளின்ர மகன்.

என்ர தம்பியெண்டு சொல்லிக்கொண்டு காலித்திட்ட போனவனாம். அவர் பிறிச்சில இருந்து சோடா எடுத்து தந்தவர் எண்டு சொன்னவன்.

காலித் இரண்டையும் ஒப்பிட்டுப்பார்த்தாரோ என்னவோ எனக்கு ஒப்பீடு ஒட்டிக்கொண்டிருந்தது.

போகேக்க சொன்னன்.

காலித்! உங்கட பிறண்ட்ஸ் என்னடா உன்ர பிறண்ட் எங்கள உள்ளேயே கூப்பிடேல்ல எண்டு அறுக்கப் போறாங்கள் எண்டு.

காலித் சொன்னார். அவையள் விளங்கிக்கொள்ளுவினம் எண்டு. விளங்கிக்கொண்டால் சரி. விளக்கமில்லாமல் தானே நாட்டில அதிக குழப்பங்கள் எண்டு சிந்தனை பாய்ந்தது.

அனுப்பி வைச்சிட்டு வந்திருந்து யோசிச்சன்.

'அழுதுகொண்டு சிரிக்கப் பழகியிருக்கிறம்' எண்டு தோன்றிச்சு.

ஆளின்ர கடிதம் வந்தாத்தான் தெரியும். ஆக்களின்ர உணர்வுகள் எப்பிடியிருந்தது என்று.

"நிவே! உனக்குச்சங்கடமா இருக்கேல்லையே!"

"என்ன அன்ரி! சங்கடப்பட என்ன இருக்கு சாதிக்கோணும்"

வாய்ப்புக்குறைந்த பிரதேசங்களில இருந்து கொண்டு எப்படி படிக்கிறீர் எண்டு வரிக்கு வரி எழுதுறவர். 'வாய்ப்புக்குறைந்த பிரதேசமல்ல' 'வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரதேசம்.' எண்டு திருத்துறனான். நேர பார்த்ததும் ஆளுக்கு அதிர்ச்சியாப்போட்டுது! இந்தளவிற்கு எதிர் பார்த்திருக்கமாட்டார்.

எனக்கு ஆச்சரியமா இருந்தது என்னெண்டா என்னில இருந்து இரண்டோ மூண்டோ வயது தானே கூட எண்டு போட்டு பாட்டடி மாதிரி அட்வைஸ் எழுதுவன்.

காலித் உங்கத்துப் போக்குகள் வாக்குகள் எல்லாம் சரியில்லையாம். நல்ல பிள்ளையாய் இருக்க வேணும். கண்டதே காட்சி கொண்டதே கோலம் எண்டு வாழக்கூடாது என்ன? பேந்து என்னட்ட அடி வேண்டுவீர்... எண்டு அது இது எண்டு எழுதியிருப்பன்.

நினைக்கநினைக்க சிரிப்புத்தான் அன்ரி வருகுது.

நல்ல பிரியோசனமான ரியூட்டுகள் அன்ரி. கருப்பம்சாறு போல தயாரிக்கப்பட்ட ரியூட்டுகள் உப்பிடியெல்லாம் எத்தனையோ நுட்பங்கள் வழிமுறைகள் இருக்க எதுவுமே இல்லாம போட்டிபோட அபாரமான சக்தி வேண்டியிருக்கன்ரி.

"பிள்ளை தலைவற்ற சிந்தனைகள் படிச்சிருக்கிறியே அவர் அடிக்கடி சொல்லுறவர் 'சாதாரண மனிதப்பிறவியும் சாகத்துணிஞ்சு விட்டால் சரித்திரம் படைக்குமெண்டு' நீ சாதிக்க துணிஞ்சிட்டாய் சாதிப்பாய்"

'அடிக்கு மேல அடியா அடிச்சு' எங்கட மக்கள் சாகத்துணிஞ்சிட்டுதுகள் எனி என்ன சரித்திரம் படைப்புத்தான்.

"நான் வாறன் பிள்ளை நீ என்ன பண்ணுவாய்"

" அன்ரி! நீங்கள் காலித் மாதிரி நண்பர்கள். சத்தியத்திற்காக சாகத்துணிஞ்ச சமுதாயம் இருக்கேக்க என்னவேண்டியிருக்கு 'ரேக் கிற் ஈஸி' அன்ரி. என்ன பண்ணுவன் ஏணி ஆவன்.

07 வயதில 70 வயது முதிர்ச்சியை கொண்டிருந்தவள் அவள். 03 வயதில இருந்து ஆரம்பிச்ச இடப்பெயர்வு இன்னும் முடிவுக்கு வரேல்ல.அவலங்களால ஆளான நிமிர்வே இயல்பான நிமிர்வோ அவளிடம் எதிலும் எப்பவும் தெளிவு, நிதானம், தீர்க்கம், நிமிர்த்த வேண்டும் என்ற நிமிர்வு.

நிட்சயம் என்ன பண்ணுவாள். நிமிர்த்துவாள், எண்ணங்கள் வண்ணங்கள் சிறகடிக்க என்ர எம்.டி. நையின்ரி இந்த நையின்ரியை சுமந்து கொண்டு தங்ககம் நோக்கி நகர்கிறது. ●

## கொண்டுவந்த அன்பளிப்பு

இலங்கையில் இருந்து விமானம் ஏறி அமெரிக்க நியுயோக் நகர் அருகில் இருக்கும் சுதந்திர சிலைக்கு அருகில் சென்றேன்.

சுதந்திர தேவி சிலை என்ன சுடச் சுடக் கேட்டாள். தமிழ் ஈழத்தில் இருந்து என்ன கொண்டு வந்தாய் என்று, சொல் என்றாள்.

யாழ்ப்பாணம் பினாட்டு, புழுக்கொடியல் இல்லைத் தேவி. பனைமரம் எல்லாம் ஆமிக்காரன் செல் அடியால் அழிந்துவிட்டது. அதற்கும் அங்கு தட்டுப்பாடு.



அப்போ முறிகண்டிப் பிள்ளையாரின் கச்சான் அதுவும் இல்லையா?

கொண்டு வந்தேன் தேவி. ஓமந்தை இராணுவச் சோதனைச சாவடியில் சைனற் கலந்து இருக்கும் என்று ஆமிக்காரன் பறித்துவிட்டான்.

அப்படியானால் வேறு என்ன கொண்டு வந்தாய் சொல்.

திருமலை கோணேஸ்வரர் கோவில் லட்டுக் கொண்டு வந்திருப் பேன். கட்டுநாயக்கா சுங்க சோதனையில் தமிழன் என்றபடியால் குண்டென்று சொல்லி நான்காவது மாடிக்குக்கொண்டு போய்விடுவார்கள்.

அப்படியானால் வேறு என்ன கொண்டு வந்தாய்? சுதந்திர தேவியே தமிழ் ஈழத்தில் இருந்து புறா ஒன்று கொண்டு வந்தேன்.

மணிப்புறாவா? மாடப்புறாவா சொல்.

இல்லை தேவி. ஈழத்திலிருந்து சமாதானப் புறா கொண்டு வந்துள்ளேன்.

-சேதுபதி-ஜீவரட்ணம் (சேதுராஜ்)

ஒழுக்கம் இல்லாத அழகு, மணம் இல்லாத மலராகும். – பிரெஞ்சுபழமொழி

# மேன்மை நோக்கிய பயணம் தேசியப் பெருவிளையாட்டு விழா



ஊர்வலம்

தமிழர் தாயகத்தின் அனைத்து மாவட்டங்களின் பிரதிநிதிகளையும் தமிழீழத் தேசியக்கொடியின் கீழ்அணிதிரள வைத்த ஒரு நிகழ்வாக அமைந்தது 3-வது தமிழீழ தேசிய பெருவிளையாட்டு விழா. மாவட்டங்களின் பிரதிநிதிகளாகக் கலந்துகொண்ட வீர்கள் தமிழர் தாயகத்தின் தமிழர் முஸ்லிம்



காவடி



தமிழீழத் தேசியக் கொடியேற்றல்

கள் சிங்களவர் என அனைத்துச் சமூகத்தையும் உள்வாங்கி வேற்றுமை அடைந்து நின்ற இவ்விழா தமிழர் தாயகத்தின் பெருவிழாவாக, தமிழீழ தேசியத்தின் அடையாளமாக உயர்ந்து நின்றது.

குருதியும், வியர்வையும் சிந்தி மீட்ட மண்ணில் நின்றே இந்தப் பெருவிழாவை நடத்துகிறோம் என்றார் 'புலிகளின் குரல்' பொறுப்பாளர் தமிழன்பன். இந்த விழாவின் வெற்றியின் அடித்தளத்தில் மாவீரர்களின் ஈகம் அத்திவாரமாயிருப்பதை எப்படி நாம் மறந்துபோக முடியும். மாவீரர்களின் நினைவுக்குச் சமர்ப்பணமாயிருக்கும் இந்த விழா இப்போ புதியதொரு அரசியல் பரிமாணத்தையும் எட்டியிருக்கிறது.

பேரிகை முழங்கப் பல்வேறு வர்ணக்கோல உடைகளில் நிகழ்ந்த வீரர்களின் அணிவகுப்பின் முன்னே மங்கல இசையுடன் மாவீரர்களின் உருவப்படங்கள் எடுத்துவரப்பட்டது. மைதான நிகழ்வுகளில் சிறப்பிடம் பெற்ற தமிழர் பாரம்பரிய கலைகளின் காட்சி காவடி, கோலாட்டம்,



கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மாணவியர் உடற்பயிற்சி

சிலம்பம், கும்மி என விரிவுபெற்றது. செஞ்சோலை, காந்திவிடுதி, குருகுலம் மாணவர்களின் நிகழ்வுகள் எதிர்காலத்தில் எமது பாரம்பரியக் கலைகளின் செம்மைக்கும், சமூக அங்கீகாரத்துக்குமான ஒரு வாயிலைத் திறந்து வைத்தனர்.

எமது பாரம்பரிய விளையாட்டுக்களான சிலம்பம், கொம்பு விளையாட்டுக்களின் கண்காட்சியைப் பொலிகை சிவலிங்கம், பருத்தித்துறை கணேசலிங்கம் ஆகியோரின் மாணவர்கள் நிகழ்விலிருந்து சிறப்பாக அமைந்தது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆசிரிய மாணவிகளின் உடற்பயிற்சிக் கண்காட்சியும், யாழ். பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாணம் ஜிம்னாஸ்ரிக் கழகம் என்பவற்றின் ஜிம்னாஸ்ரிக் காட்சிகளும் சிறப்புப்பெற வைத்த இந்த அங்குரார்ப்பன நிகழ்வின் விளையாட்டுச் சுடரினை கலாநிதி. எதிர்வீரசிங்கம், செல்வி ரதிகலா ஆனந்தவடிவேல் ஆகிய சாதனையாளர்கள் ஏற்றிவைத்தமை மிகப் பொருத்தமான முன்னுதாரணமாக அமைந்திருந்தது.

திரு.எதிர்வீரசிங்கம் 1950 ஆம் ஆண்டுகளில் ஏற்படுத்திய சாதனையை ஐம்பது வருடங்கள் கடந்தும்




மாவட்டங்களின் கொடியேற்றம்



தமிழர் பாரம்பரிய கலையின் ஒரு பகுதி சிலம்பம்

இன்னும் வடகிழக்கில் முறியடிக்கப்படவில்லை என்பதே எமது விளையாட்டு அபிவிருத்தி பற்றிய மதிப்பீட்டுக்கு மிகச் சிறப்பான உதாரணமாகும். செல்வி.ரதிகலா ஆனந்தவடிவேல் தமிழர் தாயக வலைப்பந்தாட்ட அணியைக் கடந்த வருடம்



வெற்றிக் கேடயங்கள்



ஒலிம்பிக் தீபம் ஏற்றுதல்

பயிற்சி வழங்கிக் கலந்துகொண்ட 18 போட்டிகளிலுமே வெற்றி பெற வைத்தவர். இவர் விளையாட்டுப் பயிற்றுனர்களுக்கு ஒரு சிறப்பான முன்னுதாரணமாக அமைந்திருக்கிறார்.

எங்கள் நிலத்தில், எங்கள் கால்களில் தங்கிநின்றபடி விளையாட்டு மேன்மையை நோக்கிய பயணத்தில் இந்த விளையாட்டு விழா ஒரு படிக்கட்டாய் அமைகிறது என்றால் அது மிகையாகாது.

அ.அ.அ.

# விளையாட்டின் அடைவை எட்டிவிட்ட இளைஞர்கள்

## - உக்ரைன் நாட்டவரின் மதிப்பீடு -

நான் 42 நாடுகளுக்கு விளையாட்டு மதிப்பீடுகள் தொடர்பாகவும் பயிற்சிகள் தொடர்பாகவும் சென்றிருக்கிறேன். அங்கெல்லாம் விளையாட்டு அபிவிருத்தி தொடர்பாகப் பெருந்தொகைப் பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருந்து அவர்களால் இளைஞர்களை விளையாட்டை நோக்கி ஈர்க்கும் செயற்பாட்டில் அவர்கள் வெற்றிபெற்றதாக என்னால் கூறமுடியவில்லை.

ஆனால், இங்கு வசதிக்குறைவுகளுக்கு மத்தியிலும் பெருமளவிலான இளைஞர்களை விளையாட்டை நோக்கிக் கவர்ந்து வைத்திருப்பதைக் காணமுடிகிறது என்பதை என்னுடைய ஒரு சில நாட்களுக்கான வருகையில் உணர முடியும். இதனைவிட இங்கு மைதானத்தில் இளைஞர்கள் புகைபிடிப்பதையோ அல்லது மதுபானம் பாவிப்பதையோ அல்லது வீதிகளில் குழுக்களாக நின்று இடையூறு செய்வதையோ காணமுடியவில்லை. இது இங்கு இளைஞர்கள் விளையாட்டின் மகிமை மிகுந்த அடைவுகளை அடைந்துவிட்டார்கள் என்பதை உணர்த்துகிறது.

வடக்கு கிழக்கு இளைஞர்கள் விளையாட்டின் மூலம் இதனை அடைந்துகொண்டார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகிறது.

இன்று நான் கிளிநொச்சியின் சிறிய கிராமம் ஒன்றுக்குச் சென்றிருந்தேன். அங்குள்ள சிறிய பாடசாலை ஒன்றில் விளையாட்டுப் போட்டி நடைபெற்றுக்கொண்டிருந்தது. எந்தவித அலங்காரங்களையோ களியாட்டக் கேளிக்கைகளையோ அங்கு என்னால் காணமுடியவில்லை. அங்கு விளையாட்டின் மீதான ஆர்வத்தையும், போட்டிகளில் பங்குபற்றும் துடிப்பையுமே உணர முடிந்தது.

இங்குள்ள இளைஞர்களுக்குத் தேவையானதெல்லாம் விளையாட்டுக்களில் பங்குபற்றும் சந்தர்ப்பங்களும், தங்களுடைய விளையாட்டுக்களில் மேம்பாடடைவதற்கான சந்தர்ப்பங்களுமேயாகும்.

முடிவாக, விளையாட்டின் மீது நேசிப்பைக் காட்டும் இங்குள்ள மக்களுக்கும், விளையாட்டில் ஆர்வமுடைய இளைஞர்களுக்கும், போட்டிகளின் ஒழுங்கமைப்பாளர்களுக்கும், தமிழீழ விளையாட்டுத்துறையினருக்கும் உங்களிடையே கலந்து மிகப்பெரும் அனுபவத்தைப்பெற வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறுகிறேன். மீண்டும் உங்களுக்கு உதவுவதற்காக வருகைதரவேண்டும் என விரும்புகிறேன்.

இவ்வாறு உக்ரைன் நாட்டிலிருந்து சிறிலங்காவிற்கு மெய்வல்லுனர் பயிற்சியளிப்பதற்கான ஒப்பந்தத்தில் வருகை தந்திருந்த நால்வர் குழுவின் தலைமைப் பயிற்றுனர் திரு.அலக்ஸ் (Alex Mineylko) தெரிவித்திருந்தார். (சிறிலங்கா இராணுவத்துக்கான பறக்கும் தாங்கி எனப்படும் M1-24 உலங்குவானூர்தியும் உக்ரைன் நாட்டினாலேயே விற்கப்பட்டது) வடகிழக்கு மாகாணத்தின் உயர் அடைவு மட்டங்களையுடைய மெய்வல்லுனர் 40 பேரைத் தெரிவு செய்து தொடர் பயிற்சி வழங்கும் தமிழீழ விளையாட்டுத் துறையின் முயற்சிக்கு உதவும் முகமாக, மெய்வல்லுனர் சம்மேளனத்தால் இவர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். திரு.எதிர்வீரசிங்கம் தலைமையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இப்பயிற்சி அடுத்த மாதம் நடைபெறவுள்ளது. இதற்கான அவதானிப்புக்களை நிகழ்த்துவதாகவே இக்குழுவினர் கிளிநொச்சிக்கும், யாழ்ப்பாணத்துக்கும் வருகை தந்திருந்தனர்.

ஐரோப்பிய கலாச்சாரப் பின்னணியுடைய இவர்களின் மதிப்பீடுகள் இவ்வாறு அமைந்திருந்த இந்தப் போட்டியின் தொடக்க நாள் நிகழ்வுகளும் எமது விடுதலைப் போராட்டத்தின் விளைவான தமிழீழ தேசிய எழுச்சியில் புதிய பரிமாணங்களை ஏற்படுத்தியிருந்தது என்பது ஊடகங்களால் உணர்த்தப்பட்டது.

MEDECINS SANS FRONTIERES

# MSF வன்னியை விட்டுவெளியேறுகிறது

வரையறையற்ற மருத்துவர்கள் (MSF) வவுனியாவிலும் புதுக்குடியிருப்பிலும் தனது பணிகளை 29ம் திகதி பெப்ரவரி 2004 உடன் நிறைவு செய்வது பற்றி நவம்பர் 2003ல் அறிவித்திருந்தது. MSF சிறிலங்காவில் கடந்த 10 வருடங்களாகப் (1994 லிருந்து) பணியாற்றி வருகிறது. நாட்டின் முன்னரை விடச் சீரான நிலைமை காரணமாக தனது பணியினை நிறைவுக்குக் கொண்டு வரும் தீர்மானத்தை எடுத்துள்ளது.

வடக்கில் நிலைமை முழுமையாக இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை என்பதை MSF அறிந்திருக்கிறது. எவ்வாறாயினும் முரண்நிலைக்கு ஒரு சமாதானத் தீர்வைக் காண்பதற்கான இரு தரப்பினரதும் பலமான ஈடுபாட்டில் MSF இன்னமும் நம்பிக்கை கொண்டிருக்கிறது. 19 வருடகால முரண்பாட்டுநிலை, இன்னல் என்பவற்றுக்குப்பின் மக்கள் இனிமேலாவது தங்கள் வாழ்க்கையைச் சமாதானமும் மகிழ்ச்சியும் செழிப்பும் பொருந்தியதாக கொண்டு செல்லக்கூடியதாக இருக்கவேண்டுமென்பது நியாயமானதேயாகும்.

## MSF ஏன் வெளியேறுகிறது?

MSF ஒரு அவசர நிலைமை மருத்துவ நிறுவனமாகும். யுத்தம் அல்லது உள்நாட்டு மோதல் காரணமாகத் துன்புற்றிருக்கும் மக்களுக்கு எங்களுடைய தொண்டர்கள் மருத்துவ, மற்றும் உளசமூக கவனிப்பை வழங்குகின்றார்கள். உலகின் அனேகமான முரண்பாட்டு (மோதல்) நிலைமைகளுக்கிடையில் எங்கு மக்களுக்குத் தேவைகள் அதி கூடுதலாக இருக்கின்றன என்பதைத் தீர்மானிப்பதற்கான தெரிவுகளை MSF அடிக்கடி எடுக்கவேண்டியிருக்கிறது MSF வைத்தியர்கள் உலகின் பல பகுதிகளிலும் தேவைப்படுகிறார்கள்.

எந்த மக்களுடைய இன்னல்கள் கவனிக்கப்படாமலோ அல்லது மறுக்கப்பட்டோ இருக்கின்றதோ அந்த மக்களை MSF தொடர்ச்சி யாக நாடிச் செல்கின்றது - வன்முறை மற்றும் முரண்பாடு காரண மாக இன்னலுறும் மக்கள், அரிதாக ஏற்படும் மற்றும் கவனியாது விடப்படும் நோய்களால் பாதிப்புற்ற மக்கள், இதர உலகினாலும் மறந்து விடப்பட்ட அல்லலுறும் மக்கள் - எந்தவித உடல்நலக் கவனிப்பையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலையிலிருக்கும் மக்களை MSF இடையறாது தேடிச்செல்கிறது.

வன்னியில் சுகாதார நிலைமை மேம்பாடு பெற்றிருக்கிறது. புதுக்குடியிருப்பில் உயர் ஈடுபாடு கொண்ட மருத்துவ உத்தியோகத்தர்கள் இருக்கின்றார்கள். இப்பிரதேசத்திலுள்ள யாழ்ப்பாணம், வவுனியா போன்ற இதர வைத்தியசாலைகளுக்கு மக்கள் போகக் கூடியதாக இருக்கிறது வவுனியா மாவட்டத்தில் யுத்தம் ஏற்படுத்திய உள-சமூக விளைவுகளால் இன்னலுறும் மக்களுக்கு உதவி செய்வதற்குத் தொழில்ரீதி உளவளத்துணையாளர்கள் இருக்கின்றார்கள்.

## MSF இடமிருந்து யார் பொறுப்பு எடுப்பார்கள்?

வவுனியாவில் MSF உத்தியோகத்தர் பெற்றிருக்கின்ற அதிக அளவு தொழில்ரீதி நிபுணத்துவம் காரணமாக உள-சமூகத் திட்டத்தினைப் புதிதாக உருவாக்கப்பட்டு SHADE என்று அழைக்கப்படும் அரசசார்பற்ற நிறுவனத்தின் கைகளில் மிகுந்த நம்பிக்கையுடன் விட்டுச் செல்கிறோம். அதன் பிரகாரம் 2004 மார்ச் முதலாம் திகதியில் இருந்து MSF ன் திட்டத்தை SHADE அர்ப்பணிப்பும் ஆர்வமும் நிறைந்த ஒரு அணி மூலம் தொடர்ந்து செயற்படுத்தும்.

புதுக்குடியிருப்பைப் பொறுத்தவரை அரச வைத்தியசாலைகளிலும் தனியார் மருத்துவ நிலையங்களிலும் பணியாற்றும் மிகத்திறமையான, அதி கூடுதலான ஈடுபாடு கொண்ட மருத்துவ உத்தியோகத்தர்களில் முழுமையான நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கிறோம் அவர்களுக்கு மக்கள் பால் அவர்களுடைய அபரிமிதமான ஈடுபாட்டுக்காக MSF தனது பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறது.

## எப்பொழுது MSF மீண்டும் வருகை தரும்?

MSF சிறிலங்காவையும் வன்னியையும் விட்டு வெளியேறுகிறது. எனினும் மக்கள் எங்கள் இதயங்களிலும் உள்ளங்களிலும் நிறைந்து இருப்பார்கள் MSF ன் சர்வதேசத் தொகுதிகள் உலகின் சகல நாடுகளினதும் மனிதநேய நிலைமையைத் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்து வருகின்றன. சிறிலங்காவுக்கு மீண்டும் வருவதற்கான ஒரு தேவை ஏற்படுமாயின் நாங்கள் அதனைச் செய்வதற்கும் தயங்க மாட்டோம். அந்த வகையில் வன்னிவாழ் மக்களை நாங்கள் ஒரு போதும் விட்டுச் செல்லமாட்டோம் அவசர நிலையும் அவசரத்தேவையும் ஏற்படும் காலங்களில் அங்கு நிற்போம் என்று வாக்குறுதி அளிக்கிறோம்.

சிறிலங்கா அரசப் பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் பிரிவு, சுகாதார அமைச்சு தமிழீழம் சுகாதார சேவைகள் ஆகியோருக்கு இத்தருணத்தில் அவர்கள் வழங்கிய முழுமையான ஒத்துழைப்புக்குப் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

MSF தனது முன்னை நாள் மற்றும் இப்போதைய பணியாளர்களுக்கும் நாங்கள் இணைந்து பணிபுரிந்த மற்றும் சகலருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது.

முதன்மையாக, மிகமுக்கியமாக இந்த அழகிய நாட்டு மக்களுக்கு எங்கள் பணியைச் செய்வதற்கு உதவிய அவர்களுடைய உபசாரம், அன்பு, ஆதரவு என்பவற்றுக்காக நன்றி கூறிக்கொள்ள விரும்புகிறோம. MSF திரும்பவும் வரவேண்டிய தேவை வராது எனவும் நீங்களும் உங்கள் பிள்ளைகளும் மகிழ்ச்சியாக கௌரவமாக, சமாதானமாக வாழக்கூடியதாக இருக்குமென்று உளமார விரும்புகிறோம்.

# MSF is leaving the Wanni

Médecins Sans Frontières (MSF) has announced in November 2003 the closure of their missions in Vavuniya and Puthukkudiyiruppu as per the 29th of February 2004. MSF has been working in Sri Lanka for the past 10 years (since 1994), and has made the decision to close their mission due to the improved situation in the country.

MSF is fully aware that the situation in the North is not completely back to normal. MSF however still believes in the strong commitment of both parties to find a peaceful solution to the conflict. After 19 years of conflict and suffering, the people deserve to live their lives in peace, happiness and prosperity.

## Why is MSF leaving?

MSF is an emergency medical organisation. Our volunteers provide medical and psycho-social care to people in distress due to war or civil conflict. Between the many conflicts in the world, MSF needs to make constant choices to determine where people are in the most of needs. The MSF-doctors are needed in so many parts of the world.

MSF constantly looks for populations whose suffering has been neglected or forgotten. People who suffer due to violence and conflict, people with rare and neglected diseases and people whose suffering has been forgotten by the rest of the world. MSF is in constant search for people who do not have access to any healthcare at all.

In the Wanni, the health situation has improved. In Puthukkudiyiruppu there is dedicated health staff, and it has become possible for people to go to other hospitals in the region like Jaffna or Vavuniya. In Vavuniya (District) the professional counsellors of SHADE are present to assist people who are still suffering the psycho-social consequences of war.

## Who will take over from MSF?

In Vavuniya, the staff of MSF has gained so much professional expertise that we feel very confident to leave the psycho-social program in the hands of the newly created NGO called SHADE. As per the first of March 2004, SHADE will continue the program of MSF with a dedicated and enthusiastic team.

In Puthukkudiyiruppu we have the full confidence in the excellent and extremely dedicated medical staff in both the Government hospitals and the private clinics. MSF commends them for their enormous commitment to the people.

## When will MSF return?

MSF is leaving Sri Lanka and the Wanni, but we will keep the people in our hearts and minds. The international sections of MSF are constantly assessing the humanitarian situation in all countries of the world, and if there would be a need for MSF to return to Sri Lanka, we will not hesitate to do so. In that respect we will never leave the people in the Wanni and promise to be there in times of emergency and desperate need.

We would hereby like to express our appreciation for the good cooperation with the representatives of the Government of Sri Lanka, the Political wing of the Liberation Tigers of Tamil Eelam, the Ministry of Health and the Tamil Eelam Health Services.

MSF also expresses their thanks to all former and current staff, as well as all other people we have worked with. We could not have done this without your commitment.

First and foremost MSF would like to thank the people of this beautiful country for their hospitality, kindness and assistance for making our work possible. We sincerely hope that MSF will never have to return, and that you and your children are able to live in happiness, dignity and peace.

**Médecins Sans Frontières - Holland**

(3533)

விரைவில் எதிர்பாருங்கள்
உங்கள் வெள்ளி நாதத்தில்
வி.பி.யோசப்பின் புதிய மொழியாக்கத் தொடராக வெளிவருகின்றது
மூடுபனிக்குள் ஒரு தேடல்
ஆவலோடு எதிர்பாருங்கள்

# பொருண்மிய வாசல்

## எங்கள் பொருண்மிய வளம்

### சிதம்பரதிருச்செந்திநாதன்

யாழ்ப்பாணக் குடா நாட்டில் மக்கள் மிக அடத்தியாக வாழும் இடங்களை அவதானித்தால் அந்தப்பகுதிகள் நீர்வளம் உள்ள பகுதியாக இருப்பதை அவதாணிக்கலாம்.

நீர் வளம் எனும் போது இப்பகுதிகளில் ஆறுகளோ பெரும் நீர்த்தேக்கங்களோ,குளங்களோ எதுவுமே இல்லை. ஆனால் நிலத்தின்



கீழான நீரே இங்கு முக்கிய நீர்வளமாகின்றது இந்த நீரே இந்த மக்களின் குடி நீர்த்தேவைக்கும், விவசாயத் தேவைகளுக்கும் முக்கிய காரணியாக அமைகிறது.

தரை கீழான நீரானது உவர் நீரின் மேல் நன்னீர் வில்லையாக மிதந்து காணப்படுகிறதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இந்த நன்னீர் நிலையானது மாரி காலத்தில் மழையினால் தரைக்குக் கீழே சேகரிக்கப்படும் மழைவீழ்ச்சியின் அளவினாலேயே நிர்ணயிக்கப்படுகின்றது.

உன்மையில் மாரியில் சேகரிக்கப்படும் நீரைவிட கோடை காலத் தில் பாவிக்கப்படும் நீரின் அளவு அதிகமானது என்று நிபுனர்கள் தெரிவிக்கின்றார்கள்.

எனவே தான் நீண்டகால நோக்கில் யாழ்.குடாநாட்டு தரை கீழ் நீரானது ஆபத்தான ஒருதிசையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது இது நீர்ப்பற்றாக்குறை மாத்திரமல்ல. அதிகரித்த நீர் பாவனையால் நீர் மாசடைதல் எனவும் விரிவு பெறுகிறது.

இத்தகைய காரணங்களால் மழைக்காலத்தில் பெய்யும் மழைநீரை முழுமையாக சேமிப்பதும் நீரைச் சிக்கனமாகப் பாவனை செய்வதும் அவசியமாகின்றது. இது மாத்திரமல்லாது தரைக்கீழான நீருக்குப் பதிலாக மாற்றுத்திட்டங்களைத் தேட வேண்டியதும் அவசியமாகிறது.

## பயிர்க் கழிவுகளைப் பயன்படுத்தி விவசாயச் செய்கையில் ஈடுபடுவோம்

எமது பிரதேசத்தில் பயிர்க்கழிவுகள் நிறைய உள்ளன. அக்கழிவுகளை வீணாக்காமல் விவசாயச் செய்கைக்குப் பயன்படுத்தி வெற்றி அடையலாம்.

கிராமப் புறங்களில் அதிகமாகக் காணப்படும் பயிர்க் கழிவுகளில் முக்கிய இடம் வகிப்பது வைக்கோல், வாழைத்தண்டு, உமி, சாணம், கோழி எச்சம், சருகு, குழை கொப்புக்கள் என்றெல்லாம் தாராளமாகவே கிடைக்கின்றன. இத்தகைய பொருட்கள் வீணாக மக்கி பிரயோசனமற்று மண்ணாவதைத் தடுத்து, பயன்படுத்துவதன் மூலம் அவற்றை இலாபம் தரும் உயர்தர பொருளாக மாற்றுவதுடன், இவற்றினால் புதிய தொழில்களும், வேலை வாய்ப்புக்களும் கூட கிடைக்க ஏதுவாகின்றது.

பொருளாதாரப் பெறுமதியுடைய பயிர்க்கழிவுகளை எடுத்துக் கொண்டால் நெல் விளைச்சல் மூலம் கிடைக்கும் கழிவுப் பொருட்களில் ஒன்று வைக்கோலாகும். வைக்கோல், கடதாசி செய்வதற்கு உதவுகிறது. ஆயினும் வைக்கோல் முழுவதையும் பொருளாதார ரீதியான தொழில்களுக்குப் பயன்படுத்தும் வாய்ப்பு இன்னும் கிட்டவில்லை. வயல்களிலே வைக்கோல் குவியலுக்கு தீயிடப்படுதல் என்பது நெல் வயல்களில் எமது விவசாயிகளால் நடைமுறைப் படுத்துகின்ற ஒரு தீய செயலாகும்.

வைக்கோலின் மகிமை தெரியாத அனேகமான விவசாயிகள் இந்த வன்னிப் பெருநிலப் பரப்பில் வைக்கோலை தீயிட்டு கொழுத்தி வருகின்றனர். இந்த நிலை மாற வேண்டும். விவசாயிகள் தமது வயல்களிலே கிடைக்கின்ற வைக்கோலை தீயிட்டுக் கொழுத்தாமல் வயல்களில் பரவி விட்டால் நிறைய நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

நெற் பயிர்களால் உறிஞ்சப் படும் பொட்டாசியத்தின் 90% பகுதி வைக்கோலில் காணப்படுகின்றது. சிபார்சு செய்யப்பட்ட பொட்டாசியத்தை விட 6 மடங்கு அதிகமாக பொட்டாசியம் உள்ளது. ஆகவே உங்கள் வயல்களில் கிடைக்கும் வைக்கோலை வயல்களில் இட்டால் பொட்டாசியம் வயல்களுக்குத் தேவையில்லை. இதே போன்று சிலிக்காவும் 75% கிடைக்கின்றது. வைக்கோலை வயலுக்குப் போடுவது சிரமமாக இருக்குமானால் எரித்து சாம்பலாக்கியும் வயலுக்கு இடலாம். இப்படிச் செய்வதால் நைதரசனும் சல்பரும் இழக்கப்படும் பொட்டாசியமும் சிலிக்காவும் இழக்கப் படாது.

வைக்கோலை மண்ணுடன கலந்து உழுது விடலாம் 4 மெற்றிக் தொண் வைக்கோலை வயல்களுக்கு இடுவோமாயின் 24 கிலோ நைதரசனும் 3 கிலோ பொஸ்பரசும் 72 கிலோ பொட்டாசியமும் கிடைக்கிறது. வயலுக்கு வைக்கோல் இடமுடியாத பட்சத்தில் நெல் அறுவடை முடிந்ததும் உடனே உழுது புரட்டி விடுவதால் நெல் அடிக்கட்டைகளும் பயன்படுகின்றன.

வைக்கோலை எத்தனையோ ஆக்க வழிகளில் பயன்படுத்தலாம் குறிப்பாக மண்ணரித்துப் போகும் நிலங்களில் வைக்கோலைக் கொண்டு மூடி மண்ணரிப்பைத் தடுக்கலாம்.

வயலை உழும் போது வைகோலையும் கலந்து உழுதால் மண்வளம் பெறும். வைக்கோலை எரித்து விடுகின்ற விவசாயிகளிடம் இருந்து வைக்கோலைப் பெற்றுக் கொள்ளலாம். முன்னணி விவசாயிகள் வைக்கோலைப் பயன்படுத்தி நெற்செய்கையில் ஈடுபட்டால் ஏனய விவசாயிகளும் பின்பற்றி நடந்து கொள்ள ஏதுவாகின்றது.

அடுத்து வைக்கோல் போன்று வாழை மடல் தண்டு ஆகியனவும் இலாபகரமான தொழில்களை மேற்கொள்வதற்கேற்ற பொருட்கள் ஆகும். வாழைமடல் பலம் லாய்ந்த நாரினைக் கொண்டது இதன் நாரைக் கொண்டு கயிறு மற்றும் பல நார்ப் கொருட்களை உற்பத்தி செய்யலாம்.

அறுவடைக்காலம் நெருங்கி விட்ட இந்த காலகட்டத்தில் விவசாயிகளாகிய நீங்கள் உங்கள் வயல்களில் கிடைக்கும் வைக்கோல் நெல்லின் அடிக்கட்டைகளை உடனே உழுது புரட்டி விடுங்கள் சேதன ஆசேதன உரங்களை முடிந்த வரையில் பாவிக்க முயற்சி எடுக்க வேண்டும். சேதன உரவகைகளுள் பிரதானமானது கூட்டுரமாகும். விவசாயத்தில் அன்றாடம் கிடைக்கும் கழிவுகளைக் கொண்டு கூட்டுரம் தயாரிக்கலாம்

— சிவா

"வடமாகாணத்தின் மாபெரும் கணினிக் காட்சியறையின்'
நொதேன் ரெக்னோலஜி பிறைவேட் லிமிட்டட்
NORTHERN TECHNOLOGY(PVT)LTD
NT NORTHERN TECHNOLOGY
சகலவகையான கணனிகளையும் நீங்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
இலங்கையில் எப்பிரதேசத்திலும் இல்லாதவாறு இரண்டு வருட உத்தரவாதம்
இலகு தவணைக்கட்டண முறை
வவுனியா,கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச்சேர்ந்த சகல அரச,தனியார் நிறுவன ஊழியர்களும் இலகு தவணைக்கட்டண முறையில் கணனிகளைப்பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணத்தில்:- இல:20,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். T.P:-021-222 5653
வவுனியாவில்:- இல:-52,2ம் குறுக்குத்தெரு, வவுனியா. T.P:-024-2221649
மன்னாரில்:- இல:-31A,ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
"கணனி உலகின் காட்சிப்பெட்டகம்"
(சி-8875)

## முல்லைத்தீவு மகாவித்தியாலய பழைய மாணவர்சங்கப் பொதுக்கூட்டம்

இடம்:-
முல்லைத்தீவு ம.வி.மண்டபம்

காலம்:-
07/03/2004(ஞாயிறு)

நேரம்:-
பிற்பகல் 2.00மணிக்கு

முல்லைத்தீவு மகாவித்தியாலய அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல் பழைய மாணவர்கள் அபிவிருத்திசபையினரால் நடாத்தப்படவுள்ளதால் சகல பழைய மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்வதோடு, ரூபா100 செலுத்தி தங்களது அங்கத்துவத்தினையும் உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

அ. கிறேசியன் புஸ்பராசா,
செயலாளர்,
ப.மா.சங்கம்,
முல்லைத்தீவு.ம.வி.

ம.அன்ரனிஜெயந்நாதன்
தலைவர்
ப.மா.சங்கம்,
முல்லைத்தீவு.ம.வி.

(3990)

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

போர் இரைச்சல்கள் சில மாதங்கள் அமைதியான பின் துப்பாக்கி ரவைகள் பறக்கவும், பீரங்கிகள் முழங்கவும் ஆரம்பித்தன. முன்னரும், இன்றும், என்றும் தமிழ் மக்களது தேசிய வாழ்க்கையை அழிப்பதுதான் சிங்களத்தின் கொள்கையாக இருந்து வருவதனால் அம் மக்களது வாழ்வுக் கட்டுமானங்கள் சிதைக்கப்பட்டது.

அம்மா அங்கு தொடர்ந்து வாழ முடியாத நிலை ஏற்பட மூத்த மகள் குடும்பத்தோடு யாழ்ப்பாணம் வந்து வாழ ஆரம்பித்தார். இக்காலப் பகுதியில் அம்மாவின் இன்னொரு மகன் செம்பியன் புலனாய்வாளனாகச் செயற்படத்தொங்கி எதிரிப் புலனாய்வாளருக்கு எதிரான புலனாய்வு போர்க்களத்தில் வெற்றி பெற்ற புலனாய்வு வீரனாகத் திகழ்ந்தார். அதன் பிற்பாடு திருமலை நகர் தாக்குதல் நடவடிக்கைக்காகச் சென்றிருந்தபோது அங்கு வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

இந்த இழப்பைத் தாங்கக் கூடிய மனப் பக்குவத்தில் அம்மா அப்போது இருக்கவில்லை. வறுமை வாழ்வினுள் சிக்குண்டு நொந்து போயிருக்கும் அம்மாவின் மனதிற்கு இக்கவலை மேலும் உளநெருக்கடியை உருவாக்கியது. அதற்கு உளப்பரிகாரம் தேட வேண்டிய நிலை இருந்தும் அதிலிருந்து முழுமையாக மீள வேண்டுமென்பதே யதார்த்தமாக அம்மாவிற்கு இருந்தது. மனத்தளர்ச்சியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு தைரியமுள்ள பெண்ணாகத் தன் கடைசி மகள் சத்தியாவுடன் 94 இல் ஊர் சென்று வாழத்தொடங்கினார்.

சிங்களப் படையினரின் இறுக்கமான கண்காணிப்பினுள் அம்மாவின் ஊர் இருந்து வந்த காலத்திலும் போராளிகளின் இரவு நகர்வுகள் நடைபெறுவதுண்டு. இடைத்தங்கல் இடமாக கன்னாக் காடுகளை போராளிகள் பயன்படுத்துவதுண்டு. இச் சமயங்களில் போராளிகளுக்கான தேவைகளை அம்மா, மகள், மருமகள், மைத்துனர் என அனைவரும் நிறைவேற்றிப் போராளிகளது உளஉரனுக்கு வலுச்சேர்த்தார்கள்.

உணவு சமைத்துக்கொடுத்தல், படையினரின் நகர்வுகள் பற்றிய தகவல்கள் வழங்குதல், சைகைகள் மூலம் அறிவிப்புக்க[illegible] செய்து பாதுகாத்தல் என அ[illegible]களது பணிகளாக இருந்தன. அதாவது சிங்கப் படையினரின் நடமாட்டங்கள் ஊருக்குள் இருக்கிற செய்தியைத் தெரியப்படுத்த சிவப்புத் துணியை மரத்தின் நுணியில் கட்டிவிடுவதும் இல்லை என்கிற செய்தியைத் தெரிவிக்க வெள்ளைத்துணியைக் கட்டிவிடுவதும் இவ்விரு அறிவிப்புக்களைவிட கோயில் மணிகள் மூன்று தடவைகள் அடித்தால் பிரச்சினைகள் ஊரில் இல்லை என்றும், அடிக்காதுவிட்டால் பிரச்சினைகள் ஊரில் உள்ளது. என்கிற அறிவிப்பும் இருக்கும். இப்பணிகளை அம்மாவின் மகள், மருமகள், அம்மாவினது ஊக்கப்படுத்தலுடன்,ஒத்தாசையுடன் செய்வார்கள்.

ஒருநாள் சிங்களப் படை ஊரினுள் வந்து நிலை எடுத்துக் கொண்டார்கள். மீளச் செல்லும் நிலை தென்படவே இல்லை. இவ்விறுக்கமான சூழ்நிலையில் மரத்தில் கொடி கட்டக்கூடிய எந்தவொரு சந்தர்ப்பங்களும் இல்லாமல் இருப்பதனை உணர்ந்த அம்மாவின் மகள் வயல் வெட்டையில் உள்ள கிணற்றடியில் உடுப்புத் தோய்ப்பது போல சிவப்புச் சட்டையை உயர்த்தி, உயர்த்தி அடித்துத் தோய்த்தார். அவ் அறிவிப்பினை உணர்ந்த போராளிகள் ஊரினுள் வராது பாதுகாப்பாக இருந்தார்கள்.

விடுதலைப் போர்க்களத்தில் ஒவ்வொரு பொது மகனிடமும் ஒரு போராட்டம் நிகழ்ந்து வந்தது. அதாவது தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முற்படுவதா? அல்லது போராட்டக் கடமையைச் செய்வதா என்பதே.

எங்கு பார்த்தாலும் சிங்களப் பேய்கள் சிறிதும் பச்சாதாபமின்றித் தமக்கு இரைதேட முயற்சித்து வந்தது. அது பலமற்ற சரிரங்களைப் பற்றிக்கொண்டு பயம் ஏற்பட வைத்தது. இத்தகைய மரண விளிம்பில் இருந்துகொண்டே அம்மா குடும்பம், உறவினர்கள், ஊர்மக்கள் என அனைவரும் உதவி செய்யவேண்டியிருந்தது.

உணவுப்பொருட்கள் அளவோடு வைத்திருந்து சமைக்க வேண்டிய இறுக்கமான போர்ச் சூழலில் ஒருநாள் முன்னணிப் போராளியான கலையன் முப்பது பேருக்குரிய உணவுத் தேவையை அம்மாவிடம் சொன்னார். அதற்கான பெரிய பாத் திரங்கள் தேவை இருந்தும் அதனை யெல்லாம் எதிர்கொண்ட நிலையில் உணவு சமைத்துக்கொடுக்கப்பட்டது. மறு நாள் வரும் சிங்களப் படைக்கு எந்தவொரு தடையங்களும் அகற்றப் படாதவாறு இருக்க அம்மாவும், மகளும், மருமகளும், பட்ட துன்பங்கள் சொல்ல முடியாதவை. அம்மாவின் நாளாந்த உழைப்பில் சேகரித்த பணமும் போராளிகளுக்கான உணவுத் தேவைக்காகச் செலவு செய்யப்படும் சந்தர்ப்பங்களும் அவ்வப்பொழுது ஏற்படும்.

இன்னொரு நாள் இரவு கூட்டாம்புளிச் சந்திப் பக்கமாக வெடிச் சத்தங்கள் சரமாரியாகக் கேட்டதும் அம்மா, மகள், மருமகள் அனைவரது மனதிலும் திகில் குடி கொண்டது. ஒரு சில மணித்தியாலங்களுக்குள் போராளி சீராளன் காயங்களுடன் இயலாத நிலையில் ஊர் வந்து சேர்ந்தார். போராளி அசோக் வந்து சேரவில்லை. அம்மா குடும்பத்தினரும், மைத்துனரும் இணைந்து சீராளனின் காயத்திற்குக் கட்டுப்போட்டு இரவோடு இரவாகக் கலையனிடம் ஒப்படைத்தனர். இரத்தம் தோய்ந்த துணிகளை இரவோடு இரவாக மண்ணுள் புதைத்தும் வேறு இரத்தத் தடையங்களையும் மறைத்து விட்டு அதிகாலையானதும் அம்மாவின் மகள், மருமகன் இருவரும் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்ட போது அசோக்கின் வித்துடலைக் கண்டார்கள்.

படையினரின் நகர்வைச் சந்தியில் இருந்தபடி அம்மாவின் மகளும், மருமகளும் அவதானிக்க ஊர்மக்களின் உதவியுடன் கலையன் அசோக்கின் வித்துடலைத் தூக்கிக் கொண்டு சுடலையில் மரியாதையுடன் புதைத்தனர். ஆயுதப் பலத்தால் மக்களை ஒடுக்கிநசுக்கிவிட முடியாது. மக்களே வரலாற்றின் நாயகர்கள் என்கிற உண்மையை மக்கள் பலம் போராளிகளுக்கு இருந் துள்ளதனை இச்சம்பவம் உணர்த் தியது.

இப்படிக் காலங்கள் நகர்ந்தன. ஒரு நாள் அம்மாவின் மகள் உளவுப்படையைச் சேர்ந்த பைத்துல்லாவினால் கைதுசெய்து தடுத்து வைக்கப்பட்டுக் கடுமையான விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

மகளைக் காப்பாற்ற அம்மா தன் ஏனைய மகன்மார்களுடன் ஒவ்வொரு நாளும் அலைந்து திரிந்த பரிதாபத்தைக் கேட்பவர்களுக்கு வேதனைதான் மிஞ்சும். ஆனாலும், அம்மா மனதிலே எப்படியாவது தன் மகளை விரைவில் மீட்டெடுக்க வேண்டுமென்ற முயற்சி, எண்ணம் பைத்துல்லாவை நேரில் சந்திக்கும் சந்தர்ப்பம் அம்மாவிற்கு ஏற்பட்டது.

மகளை விடுவிக்க முப்பதாயிரம் ரூபா லஞ்சம் கேட்கப்பட்டது. அம்மாவின் ஏழ்மைக்கு முப்பதாயிரம் ரூபா என்கிற தொகை மிக மிகப் பெரிய தொகையாகும். அம்மாவின் கண்ணியத்திற்காக அப்பணத்தினைச் சிறிய வட்டியுடன் கடனாகக் கொடுத்தார்கள். மகளை மீட்டெடுத்த மன அமைதியுடன் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். அதுவரைக்கும் அம்மா அக்கினி மேல் நின்றுகொண்டிருப்பதைப் போல் இயங்கினார். அதன் பின் தன் வழமையான உழைப்பில் ஈடுபட்டு நாளாந்த வாழ்க்கையைத் தொடர்ந்தார்.

சமாதான காலம் ஆரம்பித்து பல மாதங்கள் கடந்தன. தமிழ் பேசுமினம் இன்று தன்மானத்துடன் தலைநிமிர்ந்து நிற்பதற்கு வழி சமைத்தவர்கள் மாவீரர்கள்தான். தமிழீழ இலட்சியத்திற்காகப் போராடிய இவர்களின் தியாகத்தைப் பற்றியெல்லாம் பெருமையோடு நினைவு கூரும் கருத்துக்கள் எல்லாம் அம்மாவின் மனதிற்கு நிறைவைக் கொடுத்தது.

அம்மா தன் இரு மகன்மார்களின் கல்லறைக்கு விளக்கேற்ற முள்ளியவளை துயிலும் இல்லத்திற்கு 2003 இல் வந்திருந்தார். அவரின் கண்கள் பார்வை குறைந்து கொண்டு போவதும் ஒரு கண் முற்றாகத் தெரியாத நிலையிலும் 70 வயது ஆரம்பித்திருந்தது. ஆனாலும், இவரிடம் காணப்படும் மனோபலத்தில் ஒருதுளிகூடத் தளர்வைக் காண முடியவில்லை. இறக்கும் வரை கௌரவமாகத் தன் சொந்தக் காலிலே நிற்க வேண்டுமென்ற மனவைராக்கியத்தை வெளிப்படுத்தினார். விடுதலைப் போராட்டத்தின் மீது அவரின் பார்வை கூர்மையாகத் தெளிவாகவே இருந்தது. தன் குடும்பம் செய்த தியாகங்களால் அவரின் மனம் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை.

பண வசதிபடைத்தோர், உயர் கல்விச் சமூகத்தைச் சார்ந்தோர்களில் சிறந்தவரைக் காட்டிலும் கூடச் சிறிதும் ஆடம்பரமற்ற இந்த ஏழ்மைத்தாய் தமிழீழ தேசத்திற்கு அதிக தொண்டு புரிந்து வந்தாரென்பதே உண்மை. தமிழ்த் தேசிய எழுச்சியில் அம்மாவின் அர்ப்பணிப்புக்கள் போற்றப்பட வேண்டியதாகும். வருங்கால சந்ததியினர் அம்மாவை நினைக்கும் போது போற்றுவர், பெருமை அடைவர். ●

---

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

"ஏன் அப்படி?"

"மக்கள் மிகக் குறைவாகவே அறிந்திருக்கிற விவகாரங்களை கவனிக்கிற அமைச்சரா இருக்கிறதில பிரயோசனமில்லை எண்டு நினைச்சு, புகழ்பெறுவதற்காகவே அவர் பதவி விலகியிருப்பார் எண்டு நான் நினைக்கிறன்..." என்ற பேர்ஸி தொடர்ந்து," உதாரணமா... ஊடகத்துறை அமைச்சரா அவர் இருந்திருந்தா அவர் கடைசி மட்டும் பதவி விலகியிருக்கமாட்டார் என்று நான் நினைக்கிறன்..." என்றார்.

ஆனா அப்பா... நியாயமான ஒரு ஆளைத்தான் ஸற்ரலைற் ஊடக அமைச்சரா போட்டிருக்கிறா..."

"ஆனா... அரசின்ர ஊடகங்கள் இன்னும் நியாயமில்லாத முறையில தான் நடக்கினம்..." என்று சுட்டிக் காட்டிய பேர்ஸி,

"அது ஸற்ரலைற்ரின்ர நலன்களுக்கு நல்லதல்ல..." என்றார்.

"ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?"

"உனக்கு மறந்து போச்சா? கடந்த எலெக்சனில அரசு ஊடகங்கள் முழுவதும் அவவிட கையில இருந்தும் அவ தோத்துத்தானே போனா?

"அது என்னத்த காட்டுது எண்டா..." என்று தொடங்கிய பிந்து

"எல்லோரையும் எல்லாக் காலத்திலயும் முட்டாளாக்க முடியாது எண்டதைத் தான்" என்றாள்.

"அதிலையும் எனக்கு நம்பிக்கையில்லை..." பேர்ஸி சொன்னார். ஏன் அப்பா அப்பிடிச் சொல்லுறியள்?" பிந்து கேட்டாள்.

"பிந்து... ஸற்ரலைற் ஏப்ரல் இரண்டாந்திகதியெல்லே தேர்தலுக்கு நாள் குறித்திருக்கிறா?"

"அப்பா, அது முட்டாள்கள் தினமில்ல, அதுக்கு அடுத்த நாள்..."

"நீ ஒண்டை மறந்திட்டாய் பிந்து... ஸற்ரலைற் எல்லாத்தையும் பிந்தித்தான் செய்யிறவ..."

பேர்சி ஆலோசனை போல் கூறினார் யார், யாரை, முட்டாளாக்கிக்கொண்டிருக்கிறார்கள் என்று முடிவு செய்ய முடியாமல் தவித்தாள் பிந்து. ●

---

## படத்திற்கு மெருகூட்டுங்கள்–57



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

படத்திற்கு மெருகூட்டுங்கள் –57

..................................................

..................................................

..................................................

..................................................

பெயர் : ..................................... ஈழநாதம்

முகவரி : ..................................... யாழ்சாலை,

..................................... கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –56



பொ. நகுலா,
புதுக்குடியிருப்பு.

### பரிசுக்குரிய வரிகள்

கடலோடிப் போன தந்தை
காணாமல் போனதனால் – கண்மணியே
கடலோடு உறவாடி அவர்பாரம் சுமக்க – நீ
கலங்காது எழுந்தாயோ?

### பாராட்டுக்குரிய வரிகள்

*கடல்மேல் போன தந்தை மீளவில்லை*
*குடும்பச் சுமையோ என் தோழில்*
*கல்விச்சாலை துறந்து. கால்வயிற்றுக்*
*கஞ்சிக்காய் வலை வீசுகின்றேன் உப்பு நீரில்.*

செ. தேண்,
வள்ளிபுனம்.

*மீன்பிடிக்க போன அப்பா*
*மீண்டும் திரும்பி வரவில்லை*
*எங்க வீட்டுப் பசிக்கொடுமை எண்ணிப்பார்க்கமுடியல்ல*
*எடுத்துவிட்டேன் ஒருவலையை என்னால் தூக்கமுடியல்ல.*

பொ.சத்தியபாமா,
ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி.

*யுத்தத்தின் விந்தையால் உன்தந்தை மாண்டானோ?*
*கல்விக் கடலில் அறிவு மீன் தேடும் வயதில்*
*உறவுகளின் உப்புக் கண்ணீர் துடைக்க உப்பு*
*நீரில் வலைவீசுகின்றாயோ!*

க.கலைமாறன்,
கணேசபுரம்.

*பூவும்,பிஞ்சும்,காயும்,கனியும்,நாளும் வாழத்துடிக்கினும் - இன்று பேய்களின் கோரப் பிடியினுள் நசிபட, விலகிடும் - பாவி பிஞ்சு நெஞ்சையும், குதறிப்பிய்த்திடும் வஞ்சகர் செயலை அறுத்து வளமாய் வாழ்வளிக்க துடிக்கும் பிஞ்சு இவன்.*

ம.அருள்யோன்சன்,
விசுவமடு நகர்.

*புத்தகம் எடுத்துப் படிக்க வேண்டிய - நீ*
*புத்துயிர் அற்று வலைவீசலாமா?*
*பகை எரிக்கவும், வறுமை போக்கவும் எம் - தலைவர் உண்டு.*
*பட்டம் காத்திருக்கு கையில் எடு பேனாவை.*

சுமித்திரா,
நவம் அறிவுக்கூடம்.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.

---

ஆண்மீக வாழ்வுக்கும் புலன் சார்ந்த வாழ்வுக்கும் இடையே சமரசம் செய்து வைப்பது, இசை. – லுத்விக் பேத்தோவென்.




இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 200[illegible]ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.